கல்கி



KALKI ஆகஸ்ட் 5, 1951 4 அண



டால்டாவில் தயாரியுங்கள்



சூடாகவோ, குளிர்ந்தோ உட்கொள்ளும் தித்திப்பு பதார்த்தங்களுக்கும், எல்லாவகை பண்டங்களுக்கும் டால்டா விரும்பத்தக்க ருசியை அளிக்கிறது. சிக்கனமானதும் ஊட்டமளிப்பதும்கூட. கைபடாமல், சீல் செய்த டின்களில் விற்கப்படுவதால் எப்பொழுதும் புதிதாகவும், துப்புரவாகவும் உங்களுக்குக் கிடைக்கிறது.



இவ்வாறு தயாரிக்கலாம்:-

நெய் சர்க்கரைப்பாகு செய்துகொள்ளவும். சிறிது டால்டாவில் சிவக்கவறுத்த கடலை மாவை அதனுடன் சேர்க்கவும். அடுப்பில் வைத்து கெட்டியாகும்வரை கிளறவும். சிறிது சிறிதாக மேலும் டால்டா சேர்க்கவும். வாணலியில் ஒட்டாமலிருக்கும்வரை பக்குவம் செய்யவும். டால்டா தடவப்பட்ட ஒரு தட்டில் 6" உயரத்திலிருந்து விடவும். உறைந்தபின் தேவையான வடிவங்களில் வெட்டவும்.

இதை தவற விடாதீர்கள்!



புதிய டால்டா சமையல் புத்தகம் — ஆங்கிலத்தில் — படங்கள் கொண்டது — ஆர்ட் காகிதம் — 80 பக்கங்கள் — 300 ஐரோப்பிய இந்திய ஆங்கில-இந்திய, ஐரோப்பிய தின்பண்டங்கள் — ஆரோக்கியம், சுகாதாரம், சமையலறை இவைகளைப் பற்றிய குறிப்புகள் — விலை ரூ 1/- தபால் செலவு அணா 8 தனி.

டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM 149-X30 TM


எனெஸ்கே பிலிம்ஸாரின்
மணமகள்
டைரக்ஷன்
N.S.கிருஷ்ணன்
திரைக்கதை.வசனம்
மு.கருணாநிதி
சென்னையில்
பாரகன்
சயானி
கிருஷ்ணா
மற்றும்
முக்கிய
நகரங்களில்
SALU BROS
விவரங்களுக்கு:-எனெஸ்கே பிலிம்ஸ், சென்னை.17.

உணவு வேளைச் சங்கடங்கள்?



அவற்றை இம்முறையில் ஒழியுங்கள்...

"பிஸ்மாக்" எவ்வாறு வலியிலிருந்து நிவாரணம் தருகிறது.

வயிற்றுக் கோளாறுகளுக்கெல்லாம் முக்கிய காரணமான அதிகப்படியான புளிப்பை "பிஸ்மாக்" முதன்முதலில் முறித்துப் பயனற்றதாகச் செய்கிறது. புளிப்பை முறிக்கும் பொருள்கள் துரிதமாகவே வலியிலிருந்து நிவாரணம் அளித்தபின்னர் "பிஸ்மாக்"கிலுள்ள மற்றுமுள்ள பொருள்கள் தங்கள் வேலையைத் துவக்குகின்றன. ஒன்று அதிகப்படியான புளிப்பு மேலும் சேருவதைத் தடுப்பது: மற்றொன்று வயிற்றினுட்பாகத்து எரிச்சலைச் சமனப் படுத்திக் குணமளிப்பது.

ஆகாரத்திற்குப் பின்னர், உணவு ஜீரணமாகாமல் வயிற்றுக்குள்ளேயே தங்கிப் புளித்துப்போய் ஒவ்வொரு ஆகாரத்திற்குப் பின்னும் தொல்லை அளிக்கிறதா? அப்படியானால் அதனின்றும் நிவர்த்தியடையும் வழி இது தான். தங்கள் மருந்து வியாபாரியிடமிருந்து "பிஸ்மாக்" வரவழைத்து ஒரு டீஸ்பூன் அளவு (அல்லது 4/5 மாத்திரைகள்) சிறிது ஜலத்தோடு உட்கொள்ளவும். அதனால் வயிற்றிலுள்ள அதிகப்படியான புளிப்பு முறிக்கப்பட்டு வயிற்றின் உட்புற எரிச்சலும் தணிக்கப்படுகிறது. ஒவ்வொரு வேளையும் ஆகாரத்திற்குப்பின் "பிஸ்மாக்" சில நாளைக்குச் சாப்பிடுவது அதன் நிவாரண வேலையைத் தொடர்ந்து செய்யச் சாத்தியமாகிறது.

'பிஸ்மாக்'
தக்ஷணமே அஜீர்ணத்தைப் போக்குகிறது



மாத்திரைகளாகவும் பவுடராகவும் கிடைக்கும்

இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்., பம்பாய்-1
பிராஞ்சுகள்: கல்கத்தா – மதராஸ் – டில்லி


அழகிற்கான அரிய சாதனம் 'ஓடின்'
"Of all the toilet creams that I have used, I unhesitatingly prefer Oatine Cream as being the pleasantest and most satisfactory for improving the complexion."
Kanan Devi
OATINE
SNOW AND CREAM
Oatine Cream
Make sure seal is unbroken



அந்த யௌவனமான சரும சுகத்தை நீங்களும் நிரந்தரமாகப் பெறலாம்!


புதிய பரிமளத்துடன் கூடிய காந்தி, ஸ்நானத்தை இன்பமயமாக்கி சருமத்தை குளுமையாக வைத்து புத்துணர்வளிக்கிறது.

காந்தி வெறும் ஒரு ஸ்நான சோப் மட்டுமல்ல. நீங்கள் மிகவும் விரும்பும் மிருதுவான, ஆரோக்கிய மயமான யௌவன எழிலையும் மீண்டும் அளிக்கும் சோப்.

காந்தி

டாய்லட் சோப்

ஸ்வஸ்திக்கின் தொடர்ந்து வேலை செய்யும் சோப் இயந்திரத்தில் தயாரிக்கப்படுகிறது. இவ்வகை இயந்திரம் ஆசியாவிலேயே இது ஒன்றுதான்.



ஸ்வஸ்திக்கின் பலவகை தயாரிப்புகளில் இவைகளும் உள்ளன:
மாயா அழகு சோப்
777 சலவை சோப்
ஸ்வஸ்திக் வாசனை ஆமணக் கெண்ணெய்
கோவலின் பிராண்டு வனஸ்பதி


ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்

விற்பனை டெப்போக்கள்:

பெங்களூர் ஸிடி	மதராஸ்	தவணகெரே: மந்திப்பேட்டை
ஆர்காடு ஸ்ரீநிவாஸாசார் ரோடு	14, லிங்கிசெட்டி தெரு, ப்ராட்வே	ஹைதராபாத் (Dn.)
கொச்சி	விசாகப்பட்டணம்	B-2, பிளாக் 4, ஆஸா ஜாஹி
கல்வத்தி ரோடு	20-125, தாம்ஸன் தெரு	உஸ்மானி, கந்தான் பஜார்







நம்முடைய இக்குறுகிய வாழ் காலத்தில் அற்ப குடும்பச் சண்டை சச்சரவுகளுக்கு நேரமில்லைதான். ஆனால் இந்தத் தடவை மாமியார்க் காரியை எப்படி குறைகூற முடியும்? நாட்டுப் பெண்ணின் தலை மயிர் உதிர்ந்து, பார்க்கப் பரிதாபமாகத் தானிருக்கிறது.

உங்களுக்கும் இக்கதி நேராமலிருக்க, டாம்கோ பரிமள கூந்தல் தேங்கா யெண்ணெயை அடிக்கடி தலையில் தடவி தேயுங்கள்; வாரத்திற் கொருமுறை டாம்கோ ஷாம்பூவால் கூந்தலையும் அலசிக் கழுவுங்கள்.




டாம்கோ
பரிமள கூந்தல்
தேங்கா யெண்ணெயும்
ஷாம்பூவும்



A TATA PRODUCT

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



ராமாச்சாரி - வசந்தா — சகுந்தலை - ராமரத்தினம்

எனது குமாரன் சி. R. K. ராமாச்சாரிக்கும், மதுரை ஸ்ரீ M. P. சுந்தரராமய்யர் குமாரத்தி சௌ. வசந்தாவுக்கும், எனது புத்ரி சௌ. சகுந்தலைக்கும், மதுரை ஸ்ரீ T. M. S. ரெங்காச்சாரி அவர்களின் புத்திரன் சி. ராமரத்தினத்திற்கும், சென்ற 13-7-51-ல் மதுரையில் இனிது திருமணங்கள் நடைபெற்றன. முகூர்த்தங்கள், மாலை வரவேற்பு, 19-7-51-ல் கும்பகோணத்தில் என் கிரஹத்தில், கானகலாதர மதுரை மணி ஐயர் சங்கீதக் கச்சேரியுடன் மாலை நடந்த வரவேற்பு இவைகளுக்கு விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்தும், பாராட்டுச் செய்திகள் சன்மானங்கள் அனுப்பியும் கௌரவித்த நண்பர்கள் பந்துக்கள் வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ராணி ப. கிருஷ்ணய்யர்

பார்ட்னர்: ராணி ரெங்கய்யா ஸன்ஸ் (கும்பகோணம் & மதுரை)
ரெங்கநாத் கம்பெனி (கும்பகோணம் காரைக்குடி & நாட்டரசன்கோட்டை)
ஸ்வாமி கிருஷ்ணா & கோ., (மதுரை)

பொருள் அடக்கம்

கல்கி

மலர் 11 இதழ் 1 | 1951 ஆகஸ்டு 5 | கர ௵ ஆடி 20உ

அட்டைப்பட விளக்கம்

அவன் ஒரு ஆட்டிடையன். சிறு வயதிலிருந்தே ஆடுகளை மேய்த்து வந்தான். அவனுக்குத் தன் ஆடுகள் என்றால் அளவிறந்த அன்பு. தன் உயிரை விட மேலாக அவைகளைக் கருதி வந்தான்.

இப்படி வாழ்ந்தவன் வாழ்வில் ஒருநாள் 'அவள்' புகுந்தாள்.

அவனுக்கு எதெல்லாம் பிரியமோ அவற்றின் மேல் எல்லாம் அவளுக்கும் பிரியம்.

அவனுக்கு ஆடுகள் மேல் சொல்லி முடியாத அன்பு என்றால், இவளுக்கும் தான் அளவற்ற அன்பு அவற்றின் மேல்.

தான் எதன் மேல் எல்லாம் அன்பு கொண்டிருக்கிறானோ அதன் மேல் எல்லாம் தன்னைப் போலவே அவளும் அன்பு செலுத்துவதைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு உண்டாகும் அதிசயமும் ஆனந்தமும் கொஞ்சநஞ்சமல்ல.

இன்று நம் நாட்டில் போதிய உணவு கிடைப்பதில்லை; துணி கிடைப்பதில்லை. இன்னும் எத்தனையோ 'இல்லை'கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் அவனுக்கென்னமோ தன் வீட்டில் எல்லாம் நிறைந்திருக்கிறாப்போல் தான் தோன்றுகிறது.

கதிரவன் மறையும் மாலை நேரத்தில் புள்ளினங்கள் தம்தம் கூட்டை நோக்கிப் பறக்கின்றன. இவனோ குடிசையை அடைந்து தன் இல்லாளுடன் அமர்ந்து உல்லாசமாகத் தெம்மாங்கு பாடிக் கொண்டிருக்கிறான். ஒரு வேளை 'மானா மதுரையிலே ..' என்று பாடுகிறானோ!

அவன் பக்கத்தில் அமர்ந்திருக்கும் அவன் மனைவியோ, 'அவன் காரியம் யாவினும் கைகொடுக்கும்' பாரதியாரின் புதுமைப் பெண் தான் என்பதை நினைவுறுத்துவது போல் தன் கணவனின் அன்பைப் பெற்ற ஆட்டுக் குட்டியை வாஞ்சையுடன் கட்டி அணைத்துக் கொண்டிருக்கிறாள்.

இந்த அற்புதச் சதிபதிகளைப் பார்க்கும் போது,

> இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
> இல்லவள் மாணாக் கடை

என்ற தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் குறள் நமக்கு நினைவுக்கு வருகிறது.

கல்கி
சேலம் ஆபீஸ்

1-8-51 தேதி முதல் சேலத்தில் கல்கி காரியாலயத்தின் கிளை ஆபீஸ் 4, வித்யாலயா ரோடு, எக்ஸ்டென்ஷன் என்ற விலாசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த ஆபீஸின் பிரதிநிதியாக ஸ்ரீ வி. சந்துரு என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நாளது 5-8-51 தேதி கல்கி இதழ் முதல் சேலத்தில் கல்கி விநியோகத்தை மேற்படி ஆபீஸ் கவனித்து வரும். ஆகவே சேலத்தில் உள்ள கல்கி நேயர்களும், விற்பனையாளர்களும் தங்கள் பிரதிகளை வாரா வாரம் ஸ்ரீ சந்துரு, கல்கி கிளை ஆபீஸ், 4, வித்யாலயா ரோடு, எக்ஸ்டென்ஷன், என்ற விலாசத்தில் வாங்கிக்கொள்ள வேண்டுகிறோம்.

சேலத்தில் நம் ஏஜண்டாக இருந்த ஸ்ரீ டி. வி. கிருஷ்ணசாமி அவர்களின் கல்கி ஏஜன்ஸி 31-7-51 தேதியோடு ரத்தாகி விட்டது.

மானேஜர்: கல்கி காரியாலயம்



LAS. (B)

கல்கி

மலர் 11 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 1

ஆயிரம் சிக்கல்கள்! ஐம்பது நிபுணர்கள்!

'குசேலர் கந்தையில் ஆயிரம் பொத்தல்கள்' என்று சொல்லுவார்கள் அல்லவா? அது போலவே ஆங்கிலோ அமெரிக்கர்கள் போட்ட முடிச்சில் ஆயிரம் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன!

அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? சிக்கல் இல்லாத இடத்தில் சிக்கல்களைச் சிருஷ்டிக்கும் ஜால வித்தைக்காரர்கள்; ஒரு சிக்கலை ஒன்பது சிக்கல்களாகப் பெருக்கிக் காட்டும் நிபுணர்கள்; ஸ்படிகம் போல் தெளிவாக இருக்கும் இடத்தைச் சேறும் சகதியுமாகக் குழப்புவதில் கைதேர்ந்தவர்கள்!

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன என்று எல்லோரும் நினைக்கலாம். ஆனால் ஆங்கிலோ அமெரிக்கர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இன்னும் போர் முடியவில்லை! 'போர் முடிவடைந்தது' என்று உத்தியோக தோரணையில் இன்னும் அவர்கள் பிரகடனம் செய்யவில்லை. அதாவது ஜெர்மனி, ஜப்பான் தேசங்களின் எதிர்காலம் என்ன என்பது இன்னும் நிச்சயமாகவில்லை. அது நிச்சயமான பிறகுதான் உத்தியோக தோரணையில் போர் முடிந்ததாகக் கருதப்படும்!

ஜப்பான் சமாதான உடன்படிக்கை கையெழுத்தானாலன்றி ஜப்பானின் எதிர்காலம் என்ன என்பதை யாராலும் சொல்ல முடியாது. எனவே அவ்விஷயம் எல்லா ஆசியா நாடுகளுக்கும் மிகுந்த கலக்கத்தையும் கவலையையும் கொடுத்திருக்கிறது.

ஜப்பான் சமாதான உடன்படிக்கையைத் தயாரிப்பதன் சம்பந்தமாகச் சில வருஷங்களுக்கு முன் எழுந்த தகராறு நாளுக்கு நாள் முற்றிக் கொண்டிருக்கிறது. அவ்விஷயமாக அமெரிக்கா கூறிய யோசனைக்கு ருஷ்யா இணங்கவில்லை. ருஷ்யா கூறிய யோசனையை அமெரிக்கா ஏற்கவில்லை.

மேற்படி உடன்படிக்கையைத் தயாரிப்பதில் மா ஸே துங் தலைமையில் உள்ள சீன சர்க்கார் கலந்து கொள்வதா? அல்லது பார்மோஸா தீவில் அஞ்ஞாத வாசம் செய்யும் சியாங் கை ஷேக்கின் பிரதிநிதிகள் கலந்து கொள்வதா? இந்தப் பிரச்னையும் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளுக்கும் பெரும் தலைவலியைக் கொடுத்து வந்தது.

மா ஸே துங் சர்க்காரைப் பிரிட்டன் அங்கீகரித்திருப்பதால், ஜப்பான் சமாதான உடன்படிக்கையை உருவாக்குவதில் அவர்கள்தான் கலந்து கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷார் கூறினர். அந்தச் சர்க்காரை அமெரிக்கா இன்னும் அங்கீகரிக்காததால், அவர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று அமெரிக்கர்கள் பிடிவாதம் செய்தனர்.

கடைசியாக, அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பிரிட்டிஷ் அமெரிக்கச் சர்க்கார்கள் சேர்ந்து ஒரு யுக்தியைக் கண்டு பிடித்து விட்டார்கள். சீனாவின் சார்பில் எந்தப் பிரதிநிதிகள் கலந்து கொள்வது என்பதை ஜப்பானியர்களே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்று, அந்தத் தர்மசங்கடமான பொறுப்பை அவர்களுடைய தலையில் கெட்டிக்காரத்தனமாகக் கட்டி விட்டார்கள்.

* * * *

ஜப்பானுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முட்டுக் கட்டையாக இருந்த அந்தப் பிரச்னை தீர்ந்து விட்டதால், ஆங்கிலோ அமெரிக்கர்கள் உடன்படிக்கை நகல் ஒன்றைத் தயாரித்து இந்தியா, பர்மா, இந்தோனேஷ்யா, பிலிப்

டைன் முதலிய பல ஆசியா நாடுகள் உள்பட ஐம்பது நாடுகளுக்கு அனுப்பி யுள்ளார்கள். நகல் உடன்படிக்கையில் உள்ள ஷரத்துக்களைப் பற்றி அந்த நாடுகளின் அபிப்பிராயத்தையும் கேட்டிருக்கிறார்கள்.

அந்த ஷரத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த செப்டம்பர் மாதம் ஸான் பிரான்ஸிஸ்கோவில் ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மகாநாட்டைக் கூட்டுவதென்றும் உத்தேசித்திருக்கிறார்கள்.

1. ஜப்பான் என்று வழங்கப்படும் நாலு முக்கிய தீவுகளைத் தவிர, யுத்தத்துக்கு முன் ஜப்பானுக்குச் சொந்தமாக இருந்த சகல பிரதேசங்களிலும் சகல தீவுகளிலும் ஜப்பானுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

2. ஜப்பான் எந்தத் தேசத்துக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டியதில்லை.

3. ஜப்பானுக்குத் தன் இஷ்டப்படி தன் எதிர்கால அரசியல் திட்டத்தை வகுத்துக் கொள்ள பூரண உரிமை உண்டு.

4. தொழில் துறைகளையோ, பண்டஉற்பத்தியையோ, யுத்த தளவாடங்களையோ ஜப்பான் தன் இஷ்டப்படி பெருக்கிக் கொள்ளலாம்.

5. ஜப்பானுக்குச் சொந்தமாக இருந்த பல முக்கிய தீவுகளும் அமெரிக்காவின் மேற்பார்வையில் எடுத்துக் கொள்ளப்படும்.

6. ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, ஜப்பானிலும் ஜப்பானைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் துருப்புகளை வைத்துக்கொள்ள அமெரிக்காவுக்கு உரிமை உண்டு.

இவைதான் உடன்படிக்கையில் உள்ள முக்கிய ஷரத்துக்கள் ஆகும்.

ஜப்பானியரின் படையெடுப்பினால் மகத்தான கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளான பர்மா மேற்படி உடன்படிக்கை நகலை அறவே நிராகரித்திருக்கிறது. நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்ற ஷரத்தைச் சேர்த்தாலொழியத் தாங்கள் அதை ஏற்க முடியாது என்று பர்மிய சர்க்கார் கண்டிப்பாகக் கூறி யிருக்கிறார்கள்.

ஜப்பான் தங்கள் தங்களுக்கு நஷ்டஈடு தர வேண்டும் என்று பிலிப்பைன், இந்தோனேஷ்யா, மலேயா முதலிய நாடுகளும் மன்றாடி யிருக்கின்றன.

நகல் உடன்படிக்கையில் இந்திய சர்க்கார் அத்தியாவசியமான சில திருத்தங்களை வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

இதைத் தவிர ஜப்பான் யுத்த தளவாடங்களைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதைப் பல நாடுகள் ஆட்சேபிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே ஜப்பானுக்குச் சொந்தமாக இருந்த தீவுகள் அமெரிக்காவின் மேற்பார்வையில் இருக்க வேண்டும் என்ற ஷரத்தையும் பல நாடுகள் ஏற்றுக் கொள்ளாது.

எனவே ஸான் பிரான்ஸிஸ்கோவில் நடத்த உத்தேசித்திருக்கும் மாபெரும் மகாநாட்டில் ருஷ்ய, சீன சர்க்கார்கள் கலந்து கொள்ளுவார்களா!

கலந்து கொண்டாலும் மகாநாடு வெற்றிகரமாக நடப்பதற்குத் தடை எதுவும் ஏற்படாமல் இருக்குமா!

நகல் உடன்படிக்கை விஷயத்தில் பல நாடுகளுக்கும் உள்ள அபிப்பிராய பேதங்கள் தீர்ந்து ஒற்றுமை நிலவுவதற்கு வழி பிறக்குமா!

ஆயிரம் சிக்கல்கள் நிறைந்த இந்த விஷயத்தில் மேற் கொண்டு சிக்கல்கள் ஏற்படாமல் தவிர்க்கப்படுமா!

அந்தச் சிக்கல்களை அவிழ்த்து, ஜப்பானின் பரிதாப நிலைமைக்கும் தங்களுடைய கௌரவத்துக்கும் உலக சமாதானத்துக்கும் உகந்த வகையில் உடன்படிக்கையை உருவாக்கும் ஆற்றல் ஐம்பது நிபுணர்களுக்கும் ஏற்படுமா!

'கண்டதும் கேட்டதும் பொய்'

ஒருவன் திருட்டுத் தேங்காய் பறிப்பதற்காக மரத்தின் மீது ஏறினான். அவன் தென்னை மரத்திலே பாதி தூரம் ஏறியதும் தோட்டக்காரன் வந்து விட்டான். அவனைக் கண்டதும் மரத்தில் ஏறியவன் திரு திரு வென்று விழித்தான்! இருந்தாலும் உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

''மரத்தில் எதற்காக ஏறினாய்!'' என்றான் தோட்டக்காரன்.

''மாட்டுக்குப் புல் வெட்டுவதற்காக.''

''மரத்தின் மேலே புல் இருக்கிறதா!''

''இல்லை, அதனால்தான் கீழே இறங்கிக் கொண்டிருக்கிறேன்.''

''கீழே இவ்வளவு புல் இருக்கையில் மரத்தின்மீது ஏன் ஏறினாய்!''

''கீழேயே இவ்வளவு புல் இருக்கும் போது மரத்தின் மேல் இன்னும் அதிகமாகப் புல் இருக்கலாம் அல்லவா!''

''புல் பிடுங்குவதற்கு இவ்வளவு பெரிய அரிவாள் எதற்காக!''

''புல் பிடுங்குவதற்குத் தேங்காய்கள் இடைஞ்சலாக இருந்தால், அவைகளை வெட்டுவதற்காக'' என்று ஒரே போடாகப் போட்டான் மரத்தின் மேலே இருந்தவன்!


''பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளும் ஆலோசகர்களும் பாகிஸ்தானுக்கு உடந்தையாக இராவிடில், இந்தியா — பாகிஸ்தான் உறவு இவ்வளவு சீர்கெட்டிராது'' என்று சில தினங்களுக்கு முன் ஜவாஹர்லால்ஜி கூறினார் அல்லவா!

அந்தக் குற்றச்சாட்டுக்குப் பிரிட்டிஷ் தலைவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள்.

பாகிஸ்தானில் பிரயாணம் செய்து வரும் இந்தியா மாஜி பிரதம தளபதி பீல்டு மார்ஷல் ஆகின்லெக், பாகிஸ்தானில் தாம் கம்பளம் உற்பத்தி செய்யும் கம்பெனியை ஆரம்பிக்கப் போவதாகக் கூறுகிறார். ''பாகிஸ்தானில் வியாபார நிமித்தமாக யாத்திரை செய்து வரும் என் மீது இந்தியாவின் பிரதம மந்திரி இப்படிக் குற்றம் சாட்டலாமா!'' என்று அவர் சொல்லாமல் சொல்லி யிருக்கிறார்.

ஸ்ரீ ஜவாஹர்லால்ஜியின் குற்றச்சாட்டைப் பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சென்ற

வாக்குத் தவறவில்லை!


"ஜூலை மாதம் துணிப் பஞ்சத்தை ஒழித்துக் கட்டுகிறோம், பாருங்கள்!"
பஞ்சம் பறந்தது. ஆனால்....
ஜவுளிக்கடை
ஜூன்:- "உணவுப் பஞ்சம் பறந்தோடி விட்டது. இனி வயிறு நிறையச் சாப்பிடலாம்"
ஆகஸ்டு "ஆறு அவுன்ஸ் அரிசிதான் என்று மலைக்க வேண்டாம். கோதுமையைக் குறைக்கவில்லை அல்லவா?"

வாரம் கேள்விகள் கேட்கப் பட்டன. அவற்றிற்குப் பதில் அளித்த பிரதம மந்திரி ஆட்லி "இந்தியா பிரதம மந்திரியின் புகார்களுக்குச் சிறிதும் ஆதாரம் இல்லை" என்று ஒரே போடாகப் போட்டு விட்டார்.

இந்தியா சுதந்திரம் அடைய முடியாமல் பிரிட்டிஷார் முட்டுக்கட்டை போட்டு வந்தார்கள். பிறகு இந்தியா இடைக்கால சர்க்காரில் பிரிட்டிஷ் அதிகாரிகள் செய்த கபட நாடகங்களைச் சர்தார் பட்டேல் அம்பலப்படுத்தியதை யாரும் மறந்திருக்க முடியாது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னரும் அந்தச் சுதந்திரத்தை உருக்குலைக்கச் சில பிரிட்டிஷ் அதிகாரிகள் முயற்சிக்கத்தான் செய்தார்கள்.

காஷ்மீர் மீது படையெடுத்த 'ஆஸாத் காஷ்மீர் படை' என்ற கொள்ளைக் கூட்டத்துக்கு உடந்தையாகச் சில பிரிட்டிஷார் இருந்தார்கள் என்பது வெறும் வதந்தி அல்ல என்பதையும் அப்போது வெளியான செய்திகள் நிரூபித்தன. அத்தகைய யோக்கியப் பொறுப்பற்றவர்களைப் பிரிட்டிஷ்காரர்களில் சிலரே அப்போது கண்டித்தது உண்டு.

ஐக்கியநாடுகள் சபையினால் அனுப்பப் பட்டு, காஷ்மீருக்கு வந்த பார்வையாளர் கூட, அங்கு சில மாதங்களுக்கு முன் முறை தவறி நடந்து கொண்டது எல்லோரும் அறிந்த கதை.

இப்போது, சென்ற பல மாதங்களாக மாஜி பிரதம தளபதி ஆகின்லெக் பாகிஸ்தானில் பிரயாணம் செய்து வருகிறார். பீல்டு மார்ஷல் ஆகின்லெக் இந்தியா பிரிக்கப்படுவதற்கு முன் இந்தியாவின் பிரதம சேனாதிபதியாக இருந்தவர்; பிரிக்கப்பட்ட பின்னரும் இந்தியா, பாகிஸ்தான் இரண்டுக்கும் சில காலம் பிரதம சேனாதிபதியாக விளங்கினார். அவ்வளவு உன்னத பதவியில் இருந்த ஆகின்லெக் இன்று எவ்வளவு தூரம் வழுக்கிக் கீழே விழுந்திருக்கிறார் என்பதைப் பாருங்கள்!

பாகிஸ்தான் பிரதம தளபதியாக இருந்த ஜெனரல் கிரேஸியும், காஷ்மீரில் அனுபவம் பெற்ற சில பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளும் ஆகின்லெக்குடன் சேர்ந்து யாத்திரை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் பாகிஸ்தான் பிரதம மந்திரி, பிரதம தளபதி முதல் பல முக்கிய ராணுவத் தலைவர்களையும் சந்தித்து அளவளாவி வருகிறார்கள்; பாகிஸ்தானில் உள்ள ராணுவ கலாசாலைகளுக்கு விஜயம் செய்து வருகிறார்கள்; கேந்திர ஸ்தானங்களைப் பார்வையிட்டு வருகிறார்கள்; துருப்புகளின் அமைப்பையும் அணிவகுப்பையும் ஆராய்ந்து வருகிறார்கள்.

இதெல்லாம் எதற்காகச் செய்கிறார்கள் என்று கேட்கிறீர்களா! இது தெரியவில்லையா! எல்லாம் கம்பளத் தொழிலை எங்கே, எப்போது, எப்படி ஆரம்பிப்பது என்பதற்காகத்தான்!

பீல்டு மார்ஷல் ஆகின்லெக் போர் நடவடிக்கைகளில் மாத்திரம்தான் திறமை வாய்ந்தவர் என்று இது வரையில் எல்லோரும் எண்ணியிருந்தார்கள். புளுகுவதில்கூட அவர் பீல்டு மார்ஷல்தான் என்பது இப்போது நன்றாகத் தெரிந்து விட்டது!

ஆம், பொருந்தப் புளுகுவதிலும் தனித் திறமை இருக்கத்தான் செய்கிறது. ஆகின்லெக் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் கம்பளத் தொழிலுக்கும் காஷ்மீர் ஆடுகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு அல்லவா! தம்முடைய கம்பள வியாபாரத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக ஆகின்லெக் காஷ்மீர் விஷயத்திலும் காஷ்மீர் ஆடுகள் விஷயத்திலும் கண்ணோட்டம் செலுத்தினால், அதை ஆங்கிலேயரின் அகராதிப்படி வியாபார தந்திரம் என்று சொல்லலாம். ஆனால் அரசியல் சூழ்ச்சி என்ற 'அபாண்டப் பழி'யை அவர்மீது சுமத்தலாமா!

• • •

பிரிட்டிஷ் அதிகாரிகள் பாகிஸ்தானின் போர் வெறிக்கு உடந்தையாக இருந்து தூபம் போட்டு வருகிறார்கள் என்பது முற்றிலும்— நூற்றுக்கு நூறு விகிதம் பகிரங்கமான விஷயம்.

அப்படியிருக்க, "கண்டதும் பொய், கேட்டதும் பொய், தீர விசாரித்து அறிந்ததும் பொய், நாங்கள் சொல்வதுதான் மெய்" என்று ஆட்லியும் ஆகின்லெக்கும் சாதிக்கிறார்களே! தங்களுடைய கூற்றை உலகம் நம்பும் என்றும் அவர்கள் எண்ணுகிறார்களே!

அக்கப் போர்

"என்னைத் தகராறை ஐ. நா. வுக்குக் கொண்டு போனால் பிரிட்டனுடைய 'குட்டை' வெளிப்படுத்திவிடுவேன்."—பாகிஸ்தான் பிரதமர்

வழவழ குழகுழ வென்று குட்டைக் குழப்பி வருவதைவிடக் குட்டை உடைத்துவிட்டு மறு காரியம் பார்ப்பதே மேல்.

★

"'நீ பணத்தைத் திருடவில்லை என்றால் கொதிக்கும் நீரில் கையை விடு' என்று ஒரு உபாத்தியாயர் சொன்னபடி செய்த பையனுடைய கை கொப்பளித்து விட்டதாம்."

—ஒரு வழக்கு விவரம்

"திருடப்பட்ட பணம் உம்முடையதாக இருந்தால் கொதிக்கும் எண்ணெயில் கையை விட்டுச் சத்தியம் செய்யுங்கள்" என்று அந்த உபாத்தியாயரைப் பார்த்து மாஜிஸ்டிரேட் கட்டளை யிட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

★

"நாற்பது வயதான ஒரு ஸ்ரோக்கர் நீர்மேல் நடக்கிறாராம்."

—ஒரு செய்தி

"சிந்தனையை அடக்கியே சும்மா இருக்க அவரால் முடியுமா!" என்று கேட்கிறார் ஒரு தாயுமான ஸ்வாமி பக்தர்.

★

"சலவைத் தொழிலாளிகள் காங்கிரஸ் காரர்களையே ஆதரிப்பார்கள்."

— தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி

கதர்த் துணியில் உள்ள அழுக்கு சலவையின் போது சுலபமாக நீங்கி விடுவதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

★

"ஆங்கிலோ - இந்தியர்கள் கட்டாயம் இந்தி கற்க வேண்டும்."

— சென்னை சர்க்கார் முடிவு

ஆங்கிலோ இந்தியர்கள் இந்தி கற்பது சிரமமா என்ன!

★

"சென்னை ராஜ்ய பால் உற்பத்தியில் சென்னை நகரமே முதல் ஸ்தானம் வகிக்கிறது!"

— ஒரு செய்தி

இதிலிருந்து சென்னையில் தண்ணீர்ப் பஞ்சமே கிடையாது என்பதை மற்ற இடங்களிலுள்ளவர்கள் உணர்ந்து கொள்ளலாம்.

★

"அமெரிக்க ஆஸ்பத்திரி ஒன்றில் குலுங்கும் படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன."

— ஒரு அமெரிக்கச் செய்தி

இனி அந்த ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் மருந்தைக் குலுக்கிச் சாப்பிட வேண்டிய அவசியம் இல்லை!

★

"கரும்புக் கொல்லையில் தீ விபத்து."

— ஒரு செய்தி

பருத்தி புடவையாகக் காய்த்தது போல கரும்பு வெல்லமாகவே பலன் தந்திருக்கலாம்!

"புழுங்கல் அரிசியின் விலை படி ஒன்று ரூ. 1-5-7 ஆக விற்பதைக் கண்டித்து இங்கு ஊர்த்தாலும் பொதுக் கூட்டமும் நடந்தன."

— வேலூர்ச் செய்தி

கேவலம் புழுங்கல் அரிசிக்கு இவ்வளவு விலையா என்று வேலூர் மக்கள் மனம் புழுங்கியிருக்கலாம்.

★

"இப்போது அளந்து விற்கப்படும் உப்பை இனிமேல் நிறுத்து விற்கச் செய்வதற்கான ஒரு மசோதா சென்னைச் சட்டசபையில் வரப் போகிறதாம்."

—ஒரு செய்தி

நாம் யாருடைய உப்பைத் தின்று ஜீவனம் செய்கிறோமோ, அந்த எஜமானரிடம் பயபக்தியுடன் வார்த்தைகளை அளந்து பேசிக் கொண்டிருந்ததற்குப் பதிலாக இனிமேல் வார்த்தைகளை நிறுத்துப் பேசி விட்டால் போகிறது!

★

"கோஷ்டியாகச் சேர்ந்து கொள்ளையடித்த மூவருக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது."

—ஒரு செய்தி

'கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது' என்ற வசனத்தை இவர்கள் கேள்விப்படவில்லை போலிருக்கிறது!

★

"உருளைக் கிழங்கைச் சமைத்துவிட்டு அதை அடுத்தநாள் வரை உண்ணாவிட்டால் அதை விட்டு வைடமின் 'சி' போய்விடுகிறது."

—ஒரு உணவுக் கட்டுரை

வைடமின் 'சி' போய் விடுகிறதோ இல்லையோ உருளைக்கிழங்கு ஊசிப் போய்விடுகிறது என்பது மாத்திரம் உண்மை.

★

"இண்டியானா சர்வகலாசாலை விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்ததன் பயனாக பல் சொத்தையாவதைத் தடுக்கும் மார்க்கம் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம்."

—ஒரு செய்தி

சொத்தைப் பற்கள் ஒவ்வொன்றையும் தங்கள் சொத்தைப் போல் பாவிக்கும் பல் டாக்டர்கள் நிலைமை இனி ஆட்டம்தான்!

★

"ஆயிரம் மைல் போவதானாலும் முதலில் எடுத்து வைப்பது ஒரு அடிதான்."

—ஒரு சீனப் பழமொழி

"ஆயிரம் மைல்களுக்கு மேலுள்ள காசி யாத்திரைக்குப் போவதற்கு நம் ஊர் மாப்பிள்ளைகள் எடுத்து வைப்பதும் ஒரு அடிதான்" என்கிறான் ஒரு மாப்பிள்ளைத் தோழன்.

★

"சென்னை ராஜ்ய மாஜி மந்திரியான ஸ்ரீ கரண்ட் சீக்கிரம் காங்கிரஸிலிருந்து விலகுவார் எனத் தெரிகிறது."

— செய்தி

கரண்ட் விலகினால் யாருக்கும் 'ஷாக்' ஏற்படாது என்று நிச்சயமாக நம்பலாம்.

அன்னதான சிவன்
ஏழை வீடுதி நிதிக்காக

கும்பகோணம் நடன ஆசிரியர் :
திரு. T. S. சண்முகசுந்தரம் பிள்ளையவர்களின்
சிஷ்யை



குமாரி சாருபாலாவின்

பரதநாட்டிய நடனங்கள்

5 - 8 - 1951 ஞாயிறு மாலை 6-மணிக்கு

சென்னை அரண்மனைக்காரத் தெரு
செயிண்ட்மேரீஸ் ஹாலில்

பின்னணி இசை : ஸ்ரீமதி லெக்ஷ்மி ராணி

கொடையாளர் ரூ. 10/- டிக்கட்டுகள் ரூ 5,2,1

டிக்கட்டுகள் பெற்று ஏழைகளுக்கு உதவுங்கள்

*

டிக்கட்டு கிடைக்குமிடம் :

சிவன் ஞாபகார்த்த சங்கம்
30, வாலாஜா ரோடு, சென்னை 2
டெலிபோன் : 86649

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
159, பிராட்வே, சென்னை 1
டெலிபோன் : 3290

ஸ்மித் ஸ்டாக்கிங் & கோ.,
எஸ்பிளனேட், டெலிபோன் : 3781

ஆடவரும் பெண்டிரும்
ஆவலுடன் விரும்புவது

ஸ்டேப்ளாட்

பாத்திரங்களே !

உங்கள் வீடுகளை அலங்கரிக்கச் செய்வதும் நீடித்த உழைப்பை அளிக்கக் கூடியதும் ஸாம்ஸன் ஸ்டேப்ளாட் ' பாத்திரங்களே !!

●

மனதைக் கவரும் அழகிய வடிவங்களில் பல பல ரகங்களில் ஏராளமாய் வந்துள்ளன !!!

இன்றே ஒரு முறை விஜயம் செய்யுங்கள் !

ஸாம்ஸன் அன் கோ., லிட்.,

151, பிராட்வே :: மதராஸ்-1
போன் : 4521 தந்தி : BARAPASH

எலக்ட்ரிக்
மோட்டார்கள்
பம்பு செட்டுகள்
இன்ஜின்கள்

மற்றும் சகலவிதமான
மெஷினரி சாமான்களுக்கும்

ஸாம்ஸன் அன் கோ., லிட்.,

151, பிராட்வே :: மதராஸ் 1
போன் : 4521 தந்தி : BARAPASH

பொன்னியின் செல்வன்

கல்கி

இருபத்திரண்டாம் அத்தியாயம்

சிறையில் சேந்தன் அமுதன்

தஞ்சைக் கோட்டைக்குள் பொற்காசுகள் வார்ப்படம் செய்யும் தங்கச் சாலை மற்றொரு சிறிய கோட்டைபோல அமைந்திருந்தது. தங்கச் சாலைக்கு வெளிப்புறத்தில் கட்டுக் காவல் தஞ்சைக் கோட்டை வாசலில் உள்ளது போலவே வெகு பலமாயிருந்தது. அன்று மாலை குந்தவை தேவியும் வானதியும் தங்கச்சாலையைப் பார்வையிடச் சென்ற போது வேலை முடிந்து பொற்கொல்லர்கள் வெளியில் புறப்படும் சமயம். வாசற்காவலர்கள் பொற்கொல்லர்களைப் பரிசோதித்து வெளியில் அனுப்ப ஆயத்தமானார்கள். பொற்கொல்லர்கள் வாசலண்டை வந்து குவிந்திருந்தார்கள். அந்த நேரத்தில் அரண்மனை ரதம் வந்து தங்கச்சாலையின் வாசலில் நின்றது. குந்தவையும் வானதியும் இறங்கினார்கள். அவர்களைப் பார்த்ததும் காவலர்களும் பொற்கொல்லர்களும் மெய் மறந்து நின்று "வாழ்க இளைய பிராட்டி!" என்று கோஷித்தார்கள். தங்கச் சாலையின் தலைவர் ஓடி வந்து அரசகுமாரிகளை ஆர்வத்துடன் வரவேற்றார். உள்ளே அழைத்துச் சென்று பொன்னைக் காய்ச்சும் அக்கினி குண்டம், நாணய வார்ப்படம் செய்யும் அச்சுக்கள், அச்சிட்ட நாணயங்கள் முதலியவற்றைக் காட்டினார். அன்றைய தினம் வார்ப்படமான தங்க நாணயங்கள் ஒரு பக்கத்தில் குப்பலாகக் கிடந்தன. அந்தப் பசும் பொன் நாணயங்களின் ஒளி கண்களைப் பறித்தது. ஒவ்வொரு நாணயத்திலும் ஒரு பக்கத்தில் புலியின் முத்திரையும் மற்றொரு பக்கம் கப்பல் முத்திரையும் பதித்திருந்தன.

"பார்த்தாயா, வானதி! எத்தனையோ காலமாக இந்தச் சோழ நாட்டுக்கு உலகெங்குமிருந்து தங்கம் வந்து கொண்டிருந்தது. தரை வழியாகவும் வந்தது; கப்பல் வழியாகவும் வந்தது. இது வரை அவ்வளவு தங்கத்தையும் சுமக்கும் பொறுப்பு சோழ நாட்டுப் பெண் குலத்துக்கே இருந்து வந்தது. ஆபரணங்களாகச் செய்து போட்டுக் கொண்டு தூக்க முடியாமல் தூக்கி வந்தார்கள். கொஞ்ச காலமாகச் சோழ நாட்டுப் பெண்களுக்கு அந்தப் பாரம் குறைந்து வருகிறது. நம் தனாதிகாரி பழுவேட்டரையர் இம்மாதிரி கண்ணைப் பறிக்கும் தங்க நாணயங்களை வார்ப்படம் செய்ய ஏற்பாடு பண்ணி விட்டார்!" என்று குந்தவை சொன்னாள்.

"அக்கா! இதனால் என்ன சௌகரியம்?" என்று வானதி கேட்டாள்.

"என்ன சௌகரியமா? நீ ஒன்றுமே தெரியாத பெண்ணடி! இம்மாதிரி பொன்னை நாணயங்களாகச் செய்து விட்டால், 'இவ்வளவு பொன்' என்று நிறுத்துப் பாராமலே மதிப்பிடச் சௌகரியம். குடிகள் அரசாங்கத்துக்கு வரி கொடுக்கச் சௌகரியம். வர்த்தகர்கள் வெளி நாட்டாரோடு வியாபாரம் செய்வதில் பண்டத்துக்குப் பண்டம் மாற்றிக் கொண்டு கஷ்டப்பட வேண்டியதில்லை. பொன் நாணயங்களைக் கொடுத்துப் பொருள்களை வாங்கலாம்; பொன் நாணயங்களைப் பெற்றுக் கொண்டு பண்டங்களை விற்கலாம். ஆகையினாலே தான் சோழ நாட்டு வர்த்தகர்கள் நம் தனாதிகாரி பழுவேட்டரையரை வாழ்த்துகிறார்கள்...இன்னும் ஒன்று சொல்கிறேன், கேள்!" என்று கூறிக் குந்தவை தேவி குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னாள்;—"சக்கரவர்த்திக்கும் சக்கரவர்த்தியின் குடும்பத்துக்கும் எதிராகச் சதி செய்பவர்களுக்கு இந்த நாணயங்களினால் அதிக சௌகரியம். எப்படிப் பட்ட உத்தமர்களையும் இந்தப் பொற்காசுகளின் மூலம் துரோகிகள் ஆக்கி விடலாம் அல்லவா?" என்றாள்.

அருகில் நின்ற தங்கசாலைத் தலைமை அதிகாரியின் காதில் குந்தவை கடைசியில் கூறிய வார்த்தைகள் இலேசாக விழுந்தன. அந்த அதிகாரி "ஆம், தாயே! அம்மாதிரி பயங்கரமான வதந்திகள் எல்லாம் இக்காலத்தில் கேள்விப்படுகிறோம். ஆகையினாலே தான் இப்போது கொஞ்ச நாளாக இந்தத் தங்கச்சாலைக்குக் கட்டுக்காவல் அதிகமாயிருக்கிறது. இதன் அடியில் உள்ள பாதாளச் சிறைக்கு வருவோர் போவோரும் அதிகமாகி விட்டார்கள்!" என்று சொன்னான்

"வருகிறவர்கள் உண்டு; போகிறவர்கள் கூட உண்டா?" என்று குந்தவை கேட்டாள்.

"ஏன்? அதுவும் உண்டு. இன்று காலையில் ஒருவனைக் கொண்டு வந்தார்கள். ஒரு நாழிகைக்கு முன்னால் அவனைத் திரும்பக் கொண்டு போய் விட்டார்கள்!" என்று அந்த அதிகாரி கூறினான்.

அது யாராயிருக்கும் என்று குந்தவைக்குச் சிறிது வியப்பாயிருந்தது.

தங்கசாலைக்குள் பற்பல வேலைகள் நடக்கும் இடங்களைப் பார்த்து விட்டுப் பின்புறமாகச் சென்றார்கள். பின் சுவரில் ஒரு சிறிய வாசல் இருந்தது. அதைத் திறந்து கொண்டு சென்றார்கள். சென்ற இடத்தில் வெளிச்சம் குறைவாக இருந்தது. கூரை தாழ்வாக இருந்தது. நாலு புறமிருந்தும் கேட்டவர்கள் ரோமம் சிலிர்க்கும்படியான உறுமல் சத்தம் கேட்டது. ஒரு சேவகன் தீவர்த்தி பிடித்துக் கொண்டு நின்றான். அதன் வெளிச்சத்தில் நாலு புறமும் உற்றுப் பார்த்தபோது பல கூண்டுகளும் அவற்றுக்குள்ளே அடைபட்ட புலிகளும் இருப்பது தெரிந்தது. அவற்றில் சில வேங்கைப் புலிகள்; சில சிறுத்தைப் புலிகள். சில படுத்திருந்தன; சில கூண்டுக்குள் முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தன. அவற்றின் கண்கள் அந்த இடத்தின் மங்கலான வெளிச்சத்தில் நெருப்புத் தணல்களைப் போல் ஒளிர்ந்தன.

குந்தவை வானதியின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "அடியே! பயமாயிருக்கிறதா? இங்கே மூர்ச்சை போட்டு விழுந்து வைக்காதே!" என்றாள்.

வானதி இலேசாகச் சிரித்து விட்டு, "புலியைக் கண்டு என்ன பயம், அக்கா! புலி நம்முடைய குலத்தின் காவலன் அல்லவா?" என்றாள்.

"சில சமயம் காவலர்களே எதிரிகளுடன் சேர்ந்து விடுவார்கள் அல்லவா? அப்போது அபாயம் அதிகம் ஆயிற்றே?"

"இல்லை, அக்கா! மனிதக் காவலர்கள் அப்படி ஒருவேளை துரோகம் செய்யலாம். இந்தப் புலிகள் அப்படிச் செய்ய மாட்டா!"

"சொல்வதற்கில்லை. இந்தப் புலிகள் எத்தனையோ இராஜாங்கத் துரோகிகளைச் சாப்பிட்டிருக்கின்றன. அவர்களுடைய இரத்தம் இந்தப் புலிகளின் உடம்பில் கலந்திருக்கும் அல்லவா?"

பயமேயில்லை என்று சற்று முன் கூறிய வானதியின் உடம்பு இப்போது சிறிது நடுங்கத்தான் செய்தது.

"அக்கா! என்ன சொல்கிறீர்கள்? உயிருள்ள மனிதர்களை இந்தப் புலி

களுக்கு இரையாகக் கொடுப்பார்களா, என்ன?" என்று கேட்டாள்.

"அப்படிச் செய்ய மாட்டார்கள். இந்தத் தங்கசாலைக்கு அடியில் பாதாளச் சிறை இருக்கிறது என்று சொன்னேன் அல்லவா? அதற்குள் போவதற்கும் வருவதற்கும் ஒரே வழிதான். அந்த வழி இந்தப் புலி மண்டபத்தில் இருக்கிறது. சிறைக்குள்ளிருந்து யாராவது தப்பித்து வர முயன்றால் இந்த மண்டபத்துக்குள்ளேதான் வர வேண்டும். அப்போது புலிகளுக்கு இரையாவார்கள்!"

"சிவ சிவா! என்ன கொடூரம்?"

"இராஜாங்கம் என்றால் அப்படித்தான்! கருணையும் உண்டு; கொடூரமும் உண்டு. வானதி! ஒரு சமயத்தில் என்னையே இந்தப் பாதாளச் சிறையில் அடைத்தாலும் அடைத்து விடுவார்கள். சின்னப் பழுவேட்டரையர் இன்றைக்கு என்னுடன் பேசியதை நீ கேட்டிருந்தால்......"

"நன்றாயிருக்கிறது, அக்கா! தங்களைப் பிடித்துச் சிறையிலடைக்கும் வல்லமையுள்ளவர்கள் ஈரேழு பதினாலு உலகத்திலும் இல்லை. அப்படி யாராவது செய்ய முயன்றால் பூமி பிளந்து இந்தத் தஞ்சை நகரத்தையே விழுங்கி விடாதா? அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நம்முடைய பழையாறை வைத்தியர் மகனைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன். அந்த சாதுப் பிள்ளை தப்ப முயன்றிருக்க மாட்டான் அல்லவா?"

"சாதுப் பிள்ளைதான்! ஆனால் யார் எப்போது எப்படி மாறுவார்கள் என்று சொல்ல முடிவதில்லையே?"

புலிகளின் உறுமல் கோஷம் இன்னும் அதிகமாயிற்று.

காவலனைப் பார்த்து "புலிகளுக்கு ரொம்பக் கோபம் போலிருக்கிறதே!" என்றாள் குந்தவை.

"இல்லை, தாயே! சக்கரவர்த்தியின் திருக்குமாரியை இவை வாழ்த்தி வரவேற்கின்றன!" என்று காவலன் சமத்காரமாய் மறுமொழி கூறினான்.

"நல்ல வரவேற்பு!" என்றாள் குந்தவை.

"அதோடு புலிகளுக்கு இரை போடும் சமயம் நெருங்கி விட்டது. இரையை நினைத்தும் உறுமுகின்றன!"

"அப்படியானால் நாம் சீக்கிரம் போய் விடலாம். சிறையின் வாசல் எங்கே இருக்கிறது?"

மண்டபத்தின் ஒரு மூலைக்கு இதற்குள் அவர்கள் வந்திருந்தார்கள். அங்கிருந்த புலிக் கூண்டு ஒன்றைக் காவலர்கள் அப்பால் நகர்த்தினார்கள். அங்கே தரையில் பதித்திருந்த கதவு ஒன்று காணப்பட்டது. இரண்டு ஆட்கள் குனிந்து கதவைவெளிப்புறமாகத் திறந்தார்கள். உள்ளே சில படிக்கட்டுக்கள் காணப்பட்டன. அவற்றின் வழியாக ஒவ்வொருவராக இறங்கிச் சென்றார்கள். இருள் அதிகமாயிற்று. இரு சேவகர்கள் பிடித்திருந்த இரண்டு தீவர்த்திகளிலிருந்து புகையினால் மங்கிய வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. குறுக்கும் நெடுக்குமாகச் சென்ற குறுகிய பாதைகளின் வழியாக அவர்கள் ஒற்றை வரிசையில் போக வேண்டியிருந்தது.

அங்கே புலிகளின் பயங்கர உறுமல் ரோமம் சிலிர்க்கச் செய்தது என்றால், இங்கே நாலு புறத்திலும் எழுந்த தீனமான சோக மயமான மனிதக் குரல்கள் உள்ளம் பதறி உடல் நடுங்கச் செய்தன.

ஆனால் அந்த தீனக் குரல்களுக்கு மத்தியில்,—விந்தை! விந்தை!—ஓர் இனிய குரல் கீதம் இசைத்ததும் கேட்டது.

"பொன்னார் மேனியனே!
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை அணிந்தவனே!"

அந்தப் பாதாளச் சிறையில் இருந்த அறைகள் ஒரு வரிசையாக இல்லை. முன்னும் பின்னும் கோணலும் மாணலுமாக இருந்தன. ஒவ்வொரு அறை வாசலிலும் சென்று காவலன் தீவர்த்தியை உயர்த்திப் பிடித்தான். சில அறைகளில் உள்ளே ஒருவனே இருந்தான். சிலவற்றில் இருவர் இருந்தார்கள். சில அறைகளில் இருந்தவர்களைச் சுவரில் அடித்திருந்த ஆணி வளையத்தில் சேர்த்துச் சங்கிலியில் கட்டியிருந்தது. சில அறைகளில் அவ்விதம் கட்டாமல் சுயேச்சையாக விடப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு அறையிலும் இருந்தவர்களின் முகம் தெரிந்

ததும் குந்தவைதேவி தலையை அசைக்க எல்லாரும் மேலே சென்றார்கள்.

நடுவில் ஒரு சமயம் வானதி "இது என்ன கொடுமை? இவர்களை எதற்காக இப்படி அடைத்திருக்கிறது? நீதி விசாரணை ஒன்றும் கிடையாதா?" என்று கேட்டாள்.

அதற்குக் குந்தவை, "சாதாரண குற்றங்களுக்கு நீதி விசாரணை எல்லாம் உண்டு. ஆனால் இராஜாங்கத்துக்கு எதிராகச் சதி செய்தவர்கள், வெளிநாட்டு ஒற்றர்கள், ஒற்றர்களுக்கு உதவியவர்கள் — இவர்களைத்தான் இங்கே போடுவார்கள். அவர்களிடமிருந்து தெரிய வேண்டிய உண்மை தெரிந்து விட்டால் வெளியே விட்டு விடுவார்கள்! ஆனால் சிலரிடமிருந்து உண்மை ஒன்றும் தெரிவதில்லை. ஏதாவது இருந்தால்தானே சொல்லுவார்கள்? அவர்கள்பாடு கஷ்டந்தான்!" என்றாள்.

இதற்குள்ளாக, "பொன்னார் மேனியனே!" பாட்டு மிகச் சமீபத்தில் கேட்கத் தொடங்கியிருந்தது. அந்த அறையில் சென்று தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தபோது அங்கே ஒரு சிறுபிள்ளை இருப்பது தெரிந்தது. ஏற்கெனவே நமக்குத் தெரிந்த பிள்ளைதான் அவன்; சேந்தன் அமுதன்.

அவனுடைய குற்றமற்ற பால்வடியும் பச்சைப் பிள்ளை முகம் இளவரசிகளுடைய கவனத்தைக் கவர்ந்தது.

அவனைக் குந்தவை பார்த்து, "பாடிக் கொண்டிருந்தது நீதானா?" என்று கேட்டாள்.

"ஆம், தாயே!" என்றான்.

"உற்சாகமாயிருக்கிறாய் போலிருக்கிறது!"

"உற்சாகத்துக்கு என்ன குறைவு, அம்மா! எங்கும் நிறைந்த இறைவன் இங்கேயும் என்னுடன் இருக்கிறார்!"

"பெரிய ஞானிபோலப் பேசுகிறாயே? நீயார் அப்பா? வெளியில் என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"நான் பெரிய ஞானியுமில்லை, சின்ன ஞானியுமில்லை, அம்மா! வெளியில் இருக்கும்போது பூமாலை புனைந்து இறைவனுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தேன். இங்கே பாமாலை புனைந்து மனத் திருப்தி யடைகிறேன்!"

"நீ ஞானி மட்டுமல்ல; புலவன் என்றும் தெரிகிறது. இந்த ஒரு பாடல்தான் உனக்குத் தெரியுமா? இன்னும் பலவும் தெரியுமா?"

"இன்னும் சில பாடல்களும் வரும். ஆனால் இங்கு வந்தது முதல் இதையே பாடிக் கொண்டிருக்கிறேன்."

"ஏன்?"

"இங்கு வரும்போது தங்கச் சாலையின் வழியாக வந்தேன். இதுவரை நான் பார்த்திராத பத்தரை மாற்றுப் பசும்பொன் திரளைப் பார்த்தேன். அது 'பொன்னார் மேனியன்' திரு உருவத்தை எனக்கு நினைவூட்டியது......"

"அதிர்ஷ்டசாலி நீ! பொன்னைப் பார்த்தால் பலருக்குப் பலவித ஆசைகள் உண்டாகின்றன. உனக்கு இறைவனின் திருமேனியின் பேரில் நினைவு சென்றது. உனக்கு உற்றார் உறவினர் யாரும் இல்லையா, அப்பா!"

"தாயார் மட்டும் இருக்கிறாள். தஞ்சைக் கோட்டைக்கு வெளியில் தாமரைக் குளத்தருகில் இருக்கிறாள்."

"அந்த அம்மாள் பெயர்?"

"வாணி அம்மை."

"நான் அந்த அம்மாளைப் பார்த்து நீ இங்கே உற்சாகமாயிருக்கிறாய் என்று சொல்கிறேன்."

"பயனில்லை, அம்மா! என் தாய்க்குக் காதும் கேளாது; பேசவும் முடியாது......"

"ஓகோ! உன் பெயர் சேந்தன் அமுதனா?" என்று இளையபிராட்டி வியப்புடன் கேட்டாள்.

"ஆம், அம்மா! இந்த ஏழையின் பெயர் தங்களுக்குத் தெரிந்திருக்கிறதே?"

"என்ன குற்றத்துக்காக உன்னை இங்கே கொண்டு வந்து சிறைப்படுத்தியிருக்கிறார்கள்?"

"நேற்றுவரை நான் செய்த குற்றம் இன்னதென்று எனக்கும் தெரியாமலிருந்தது. இன்றைக்குத் தான் தெரிந்தது."

"என்னவென்று தெரிந்தது?"

"ஒற்றன் ஒருவனுக்கு உதவி செய்த குற்றத்துக்காக என்னைப் பிடித்து வந்து சிறைப்படுத்தி யிருக்கிறார்கள் என்று தெரிந்தது."

"அது என்ன? எந்த ஒற்றனுக்கு நீ உதவி செய்தாய்?"

"தஞ்சைக் கோட்டை வாசலில் ஒரு நாள் வெளியூரிலிருந்து வந்த பிரயாணி ஒருவனைச் சந்தித்தேன். அவன் இரவில் தங்க இடம் வேண்டும் என்று சொன்னான். என் வீட்டுக்கு அழைத்துப் போனேன். ஆனால் அவன் ஒற்றன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை..."

"அவன் பெயர் என்னவென்று தெரியுமா?"

"தன் பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன் என்று அவன் சொன்னான். பழைய வாணர் குலத்தைச் சேர்ந்தவன் என்றும் கூறினான்..."

குந்தவையும் வானதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இருவருடைய உள்ளங்களும் ஒத்துப் பேசிக் கொண்டன.

வானதி சேந்தன் அமுதனைப் பார்த்து "எல்லாம் விவரமாகச் சொல், அப்பா!" என்றாள்.

சேந்தன் அமுதன் அவ்விதமே கூறினான். வந்தியத்தேவனைக் கோட்டை வாசலில் தான் சந்தித்ததிலிருந்து, பழுவூர் ஆட்கள் தன்னை ஆற்றங்கரையில் பார்த்துப் பிடித்துக் கொண்டது வரையில் சொன்னான்.

"யாரோ முன்பின் தெரியாத ஒரு வழிப்போக்கனை நம்பி நீ எதற்காக அவ்வளவு தூரம் உதவி செய்தாய்?" என்று வானதி கேட்டாள்.

"தாயே! சிலரைப் பார்த்தால் உடனே நமக்குப் பிடித்துப் போகிறது. அவர்களுக்காக உயிரையும் கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. காரணம் என்னவென்று சொல்வது? இன்னும் சிலரைப் பார்த்தால் அவர்களைக் கொன்றுவிடலாம் என்று தோன்றுகிறது. இன்றைக்கு ஒரு மனிதனை என்னோடு கொஞ்ச நேரம் அடைத்து வைத்திருந்தார்கள். அவன் பேரில் எனக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. நல்ல வேளையாக, சற்று நேரத்துக்கு முன்பு பழுவூர் இளைய ராணியின் ஆட்கள் வந்து அவனை விடுதலை செய்து கொண்டு போனார்கள்......!"

"அதுவும் அப்படியா?" என்று குந்தவை பற்களினால் தன் செவ்விதழ்களைக் கடித்துக் கொண்டாள். அவளுடைய புருவங்கள் நெரிந்தன. ஆத்திரப் பெருமூச்சு வந்தது.

"அவ்வளவு அவசரமாக விடுதலையான மனிதன் யார்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியாமல் என்ன? யாரோ பழையாறை வைத்தியன் மகனாம்!"

"அப்படி என்ன அப்பா, அவன் தகாத வார்த்தைகளைச் சொன்னான்? அவனைக் கொன்று விடலாமா என்று அவ்வளவு கோபம் உனக்கு வந்ததாகச் சொன்னாயே?"

"கோடிக் கரையில் என் மாமன் மகள் பூங்குழலி இருக்கிறாள். அவளைப் பற்றி இவன் தகாத வார்த்தைகளைச் சொன்னான். அதனாலேதான் அவன் பேரில் எனக்கு அவ்வளவு கோபம் வந்தது. ஆனாலும் அவன் ஒரு நல்ல சமாசாரம் சொன்னபடியால் போனால் போகிறதென்று விட்டு விட்டேன்."

"அது என்ன அவ்வளவு நல்ல சமாசாரம், அப்பா!"

"என்னுடைய நண்பன் வந்தியத்தேவனுடனேதான் இவன் கோடிக்கரைக்குப் போனான். அங்கே இந்தச் சண்டாளன் என் சிநேகிதனுக்குத் துரோகம் செய்து பழுவூர் ஆட்களிடம் பிடித்துக் கொடுத்து விடப் பார்த்தான். அது முடியவில்லை......"

"முடியவில்லையா? அப்படியானால் அந்த ஒற்றன் தப்பித்துக் கொண்டு விட்டானா?" என்று வானதியும் குந்தவையும் ஒரே குரலில் ஆர்வத்துடன் கேட்டார்கள். இதைத் தெரிந்து கொள்ளத்தானே அவர்கள் இந்தப் பாதாளச் சிறைக்குள்ளே வந்தது?

"ஆம், அம்மணி! என் நண்பன் தப்பித்துக் கொண்டு போய்விட்டான். பூங்குழலி அவனை இரவில் படகில் ஏற்றிக் கொண்டு கடலில் இலங்கைத் தீவுக்குச் சென்று விட்டாளாம்! தேடிப் போனவர்கள் ஏமாந்தார்கள். இந்தப் பாதகனும் ஏமாந்தான்!"

பெண்மணிகள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுடைய உள்ளத்தில்

ததும்பிய மகிழ்ச்சியை அவர்களுடைய முக மலர்கள் வெளியிட்டன.

குந்தவை சேந்தன் அமுதனைப் பார்த்து, "அப்பனே! ஒற்றன் ஒருவன் தப்பித்துக் கொண்டது பற்றி நீ இவ்வளவு சந்தோஷப் படுகிறாயே? உன்னைச் சிறையில் வைத்திருப்பது சரிதான்!" என்றாள்.

"தாயே! அந்தக் குற்றத்துக்காக என்னைச் சிறையில் போடுவது சரியானால், உங்கள் இருவரையும் கூட எனக்குப் பக்கத்து அறையில் போட வேண்டுமே!" என்றான்.

பெண்மணிகள் இருவரும் நகைத்தார்கள். இருளடைந்த அந்தப் பாதாளச் சிறையில், சேந்தன் அமுதனுடைய பாட்டு எவ்வளவு விசித்திரமாயிருந்ததோ, அப்படி அவர்களுடைய சிரிப்பும் அபூர்வமாக ஒலித்தது.

"நீ வெகு கெட்டிக்காரன். மிகப் பொல்லாதவன். உன்னை இங்கே வைத்திருந்தால் நீ பாட்டுப் பாடியே இங்கேயுள்ள மற்றவர்களையும் கெடுத்து விடுவாய். கோட்டைத் தலைவரிடம் சொல்லி உன்னை விடுதலை செய்யப் பண்ணி விட்டு மறுகாரியம் பார்க்கவேண்டும்" என்றாள் குந்தவை.

"தாயே! அப்படிச் செய்ய வேண்டாம்! அடுத்த அறையில் ஒரு மனிதன் இருக்கிறான். அவன் என்னிடம் தினம் நூறு தடவை 'நீ எனக்கு ஒரு பாட்டுச் சொல்லிக் கொடு! சொல்லிக் கொடுத்தால், பாண்டிய குலத்து மணி மகுடமும் மாலையும் இலங்கையில் எங்கே ஒளித்து வைத்திருக்கிறேன் என்று தெரிவிக்கிறேன்' என்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான். அந்த இரகசியத்தை நான் தெரிந்து கொள்ளும் வரையில் இங்கேயே விட்டு வைக்கச் சொல்லுங்கள்!" என்றான் சேந்தன் அமுதன்.

"பாவம்! அந்தமாதிரி உனக்கும் பைத்தியம் பிடிக்கும் வரையில் இங்கேயே இருப்பேன் என்கிறாயா? அப்புறம் உன் தாயார் வாணியம்மையின் கதி என்ன?" என்று கூறி விட்டு இளையபிராட்டி அங்கிருந்து புறப்பட, மற்றவர்களும் சென்றார்கள்.

அரை நாழிகை நேரத்துக்கெல்லாம் சில சேவகர்கள் வந்து சேந்தன் அமுதனைப் பாதாளச் சிறையிலிருந்து விடுதலை செய்து தஞ்சைக் கோட்டை வாசலில் கொண்டு போய் விட்டார்கள்.

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

நந்தினியின் நிருபம்

அன்று மாலை நந்தினி லதா மண்டபத்தில் ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் அமர்ந்து நிருபம் ஒன்று எழுதிக் கொண்டிருந்தாள். சில வரிகள் தான் எழுதினாள். எழுதும்போது சில சமயம் சுழற் காற்றில் இளங் கொடி நடுங்குவதுபோல் அவள் உடம்பு நடுங்கிற்று. அடிக்கடி நெடுமூச்சு விட்டாள். அந்தக் குளிர்ந்த வேளையில் பக்கத்தில் தாதிப் பெண் நின்று மயில் விசிறியால் விசிறிக் கொண்டிருந்தும் அவளுடைய பளிங்கு நெற்றியில் முத்து முத்தாக வியர்வை துளித்திருந்தது. அவள் எழுதிய நிருபமாவது:—

"அரசிளங் குமாரா! தயங்கித் தயங்கி, பயந்து பயந்து, இந்த நிருபம் எழுதத் துணிந்தேன். இராஜ்யத்தின் நிலைமையைப் பற்றிப் பலவிதமான செய்திகள் காதில் விழுகின்றன. தாங்கள் எதையும் கவனிப்பதில்லை. நோயினால் மெலிந்திருக்கும் தங்கள் தந்தை பல முறை சொல்லி அனுப்பியும் தாங்கள் தஞ்சைக்கு வரவில்லை. இதற்குக் காரணம் நான்தானோ என்ற எண்ணம் என்னை வதைக்கிறது. தங்களை ஒரு முறை சந்தித்தால் எல்லாச் சந்தேகங்களையும் போக்கி விடுவேன். அதற்குத் திருவுளம் இரங்குவீர்களா? தஞ்சைக்கு வர விருப்பமில்லாவிட்டால், கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சந்திக்கலாம். நான் இன்று தங்கள் பாட்டியின் ஸ்தானத்தில் இருக்கிறேன். நாம் சந்தித்துப் பேசுவதில் என்ன ஆட்சேபம் இருக்க முடியும்? இதைக் கொண்டு வரும் வீர இளைஞர், சம்புவரையர் குமாரரைத் தாங்கள் பூரணமாக நம்பி அவரிடம் எந்தச் செய்தியும் சொல்லி அனுப்பலாம்.—இங்ஙனம், துரதிர்ஷ்டத்துடன் கூடப் பிறந்த அபாக்கியவதி நந்தினி."

உண்மையிலேயே தயங்கித் தயங்கி, யோசித்து யோசித்து, மேற்கூறிய நிருபத்தை எழுதிய பிறகு, விசிறிக் கொண்டிருந்த தாதிப் பெண்ணைப் பார்த்து, "போடி! போய்க் கடம்பூர் இளவரசரை உடனே அழைத்து வா!" என்றாள் நந்தினி.

தாதி சென்று கந்தமாறனை அழைத்து வந்து விட்டு விட்டு சற்று விலகிப் போய் நின்றாள்.

கந்தமாறனின் கண்கள் நந்தினியை ஏறிட்டுப் பார்ப்பதற்குக் கூசின. எங்கேயோ தோட்டத்தைப் பார்த்த வண்ணம் கந்தமாறன் நின்றான்.

"ஐயா! உட்காருங்கள்!" என்று கூறிய நந்தினியின் குரல் நடுக்கம் கந்தமாறனை அவளுடைய முகத்தை உற்றுப் பார்க்கும்படி செய்தது.

நந்தினி தொடர்ந்து, "குந்தவை தேவியைப் பார்த்த கண்களினால் என்னைப் பார்க்க முடியாமலிருப்பதில் வியப்பில்லை!" என்று கூறிப் புன்னகை புரிந்தாள்.

அந்தச் சொற்கள் கந்தமாறனுடைய நெஞ்சைப் பிளந்தன. அவளுடைய புன்னகையோ அவனுடைய தலையைக் கிறுகிறுக்கச் செய்தது.

தட்டுத் தடுமாறி, "ஆயிரம் குந்தவைகள் ஒரு நந்தினி தேவிக்கு இணையாக மாட்டார்கள்!" என்றான்.

"ஆயினும், இளையபிராட்டி விரலை அசைத்தால் வானுலகம் சென்று இந்திரனுடைய சிம்மாசனத்தைக் கொண்டு வந்து விடுவீர்கள். நான் வருந்தி வேண்டிக் கொண்டால், உட்காரக்கூட மாட்டீர்கள்!"

கந்தமாறன் உடனே எதிரிலிருந்த மேடையில் உட்கார்ந்து, "தாங்கள் பணித்தால் பிரம்மலோகம் சென்று பிரம்மாவின் தலையைக் கொய்து கொண்டு வருவேன்!" என்றான்.

நந்தினி நடுநடுங்கினாள். கந்தமாறனைப் பாராமல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு "பரமசிவன் கொய்தது போகப் பிரம்மாவுக்கு மிச்சம் நாலு தலைகள் இருக்கின்றன. தாங்கள் இன்னொன்றைக் கொய்தாலும் பிரம்மா பிழைத்துப் போவார்!" என்றாள்.

"தேவி! வேறு எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் குந்தவை தேவியைப் பற்றி மட்டும் என்னிடம் புகழ்ந்து பேசவேண்டாம். சிநேகிதத் துரோகியான வந்தியத்தேவனுக்கு அவள் பரிந்து பேசியதை நினைத்தால் என்னுடைய இரத்தம் கொதிக்கிறது!" என்றான் கந்தமாறன்.

"ஆனாலும் இன்று காலையில் தங்களுடைய கற்பனா சக்தி அபாரமாயிருந்தது என்னவோ உண்மைதான்! தங்களுக்கும் தங்கள் நண்பனுக்கும் நடந்த துவந்த யுத்தம் பற்றி எவ்வளவு கற்பனையாகப் பேசினீர்கள்?" என்று நந்தினி கூறிய வார்த்தைகள் கந்தமாறனுக்குச் சிறிது வெட்கத்தை உண்டாக்கின.

"அவனைச் சந்தித்தது எப்படி என்பதற்கு ஏதாவது சொல்ல வேண்டும் அல்லவா? அதனால் சொன்னேன். அவன் என்னை முதுகில் குத்தியது என்னமோ உண்மைதானே!" என்றான்.

"ஐயா! அன்று நடந்ததையெல்லாம் தாங்கள் மறுபடியும் ஒரு தடவை ஞாபகப்படுத்திக் கொண்டு பார்ப்பது நல்லதல்லவா?" என்றாள் நந்தினி.

"தாங்கள் கூட என் வார்த்தையைச் சந்தேகிக்கிறீர்களா, என்ன?"

"சந்தேகிக்கவில்லை. ஆயினும் தாங்கள் சில விஷயங்களை மறந்து விட்டிருக்கிறீர்கள். வந்தியத்தேவனை என்றைக்காவது ஒரு நாள் சிறைப்படுத்திக் கொண்டு வருவார்கள். அப்போது தாங்கள் அவன் மீது சாட்டும் குற்றம் உண்மையென்று ருசுவாக வேண்டும் அல்லவா?"

"அதில் எனக்கு ஒன்றும் சிரத்தை இல்லை. அவனை இன்னமும் மன்னித்து விடவே விரும்புகிறேன்."

"தங்களுடைய பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். ஆயினும் நமக்குள் உண்மையை நிச்சயம் செய்து கொள்வது நல்லது. அன்றிரவு நடந்ததையெல்லாம் மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்திக்கொண்டு பாருங்கள். நிலவறையின் வழியாகத் தாங்கள் வந்தபோது பழுவேட்டரையரையும் என்னையும் வழியில் சந்தித்தீர்கள். தங்களுக்கு அது நினைவிருக்கிறதா?"



"நன்றாய் நினைவிருக்கிறது. என் உடம்பில் உயிர் உள்ளவரையில் அதை நான் மறக்க முடியாது."

"அப்போது தாங்கள் என்ன சொன்னீர்கள் என்பதும் நினைவிருக்கிறதல்லவா?"

"என்ன சொன்னேன் என்பது நினைவில்லை. தங்களைப் பார்த்தபோது மெய் மறந்து போனேன்."

"ஆனால் தாங்கள் சொன்னது எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. 'ஐயா! தங்கள் குமாரியின் அழகைப் பற்றி எவ்வளவோ நான் கேள்விப் பட்டதுண்டு. ஆனால் அதெல்லாம் உண்மைக்கு உறைபோடக் காணாது!' என்று சொன்னீர்கள்!..."

"ஐயையோ! அப்படியா சொன்னேன்—? அதனால் தான் அவர் முகம் அப்படிச் சிவந்ததாக்கும்! இப்போது கூட அவருக்கு என்னைக் கண்டால் அவ்வளவாகப் பிடிக்கவில்லை......"

நந்தினி சிரித்துவிட்டு, "உங்களை அவருக்குப் பிடிக்காவிட்டால் பாதகமில்லை; உங்களுக்கு அவரைப் பிடித்திருக்கிறதல்லவா? அதுவே போதும்!" என்றாள்.

"தேவி! உண்மையைச் சொல்கிறேன். தங்களிடம் மறைப்பதில் பயன் என்ன? எனக்கும் அவரைப் பிடிக்கவில்லை" என்றான் கந்தமாறன்.

"அதனாலும் பாதகமில்லை! எனக்கு அவரைப் பிடித்திருக்கிறது; அதுவே போதும்! இப்படிப்பட்ட கணவனைப் பெறுவதற்கு நான் எவ்வளவு தவம் செய்தேனோ?" என்றாள்.

இதைக் கேட்டு கந்தமாறன் உள்ளம் குழம்பிற்று. ஒன்றும் சொல்லத் தெரியாமல் சும்மா இருந்தான்.

"அது போனால் போகட்டும்; நிலவறையில் எங்களைப் பார்த்த பிறகு என்ன செய்தீர்கள்?" என்று நந்தினி கேட்டாள்.

"தீவர்த்தி பிடித்து வந்த காவலன் வழி காட்டிக் கொண்டு சென்றான். நான் தங்கள் நினைவாகவே கூடச் சென்றேன். இரகசிய மதிள் சுவரைத் திறந்து விட்டுக் காவலன் நகர்ந்து கொண்டான். நான் அதில் நுழைந்தேன். உடனே முதுகில் யாரோ குத்தினார்கள். அவ்வளவுதான் நினைவிருக்கிறது. வந்தியத்தேவன் நான் அங்கு வருவேன் என்பதை எப்படியோ தெரிந்து கொண்டு வெளியில் காத்திருந்திருக்க வேண்டும்......"

"இல்லை, ஐயா! தங்கள் ஊகம் மிகத் தவறானது. வெளியில் அவர் காத்திருக்கவே இல்லை."

"தாங்கள் கூட அவன் கட்சியில் சேர்ந்து விட்டீர்களா?"

"நான் ஏன் அவன் கட்சியில் சேர வேண்டும்? எனக்கு என்ன லாபம்? அல்லது அவனுக்குத் தான் என்ன லாபம்? இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்று எனக்கு இப்போது நிச்சயமாய்த் தெரிகிறது."

"சொல்லுங்கள், தேவி! எப்படியென்று சொல்லுங்கள்!"

"வந்தியத்தேவன் வெளியே காத்திருக்கவில்லை!..."

"பின்னே யார் காத்திருந்தார்கள்?"

"வேறு யாரும் இல்லை; வந்தியத்தேவன் வெளியில் காத்திருக்கவில்லையென்று தானே சொன்னேன்? அவன் அந்தப் பொக்கிஷ நிலவறைக்குள்ளேயேதான் காத்திருந்திருக்கிறான்!"

"என்ன? என்ன? அது எப்படி சாத்தியமாக முடியும், தேவி!"

"அவன் அன்று திடீரென்று மாயமாய் மறைந்து விட்டான். எப்படி மறைந்திருப்பான்? நீங்களே யோசித்துப் பாருங்கள்! எப்படியோ அவன் பொக்கிஷ நிலவறைக்குள் புகுந்து அவ்விடத்து இரகசியங்களையெல்லாம் அறிந்து கொண்டான். பின்னர், உங்களைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறான். கதவைத் திறந்ததும் தங்களைப் பின்னிருந்து குத்தித் தள்ளி விட்டுத் தானும் வெளியேறியிருக்கிறான். அப்புறம் ஒருவேளை அவன் மனச் சாட்சியே அவனை உறுத்தியிருக்கலாம். தங்களை அந்த ஊமையின் வீட்டில் கொண்டு போய்ப் போட்டு விட்டுப் போயிருக்கிறான்!..."

"தேவி! தாங்கள் சொல்கிறபடி தான் நடந்திருக்க வேண்டும்; சந்தேகமில்லை. இத்தனை நாளும் இது என் புத்திக்கும் எட்டவில்லை; மற்றவர்களுக்கும் புலப்படவில்லை! இந்தச் சோழ நாட்டிலேயே மதி நுட்பம் அதிகம் உள்ளவர் யார் என்று கேட்டால், தாங்கள்தான் என்று நான் சொல்லுவேன். இந்த உலகத்தில் அறிவு படைத்தவர்கள் உண்டு; அழகுபடைத்தவர்கள் உண்டு. இரண்டும் சேர்ந்துள்ளவர்களைப் பிரம்ம சிருஷ்டியில் காண்பது அபூர்வம். தங்களிடந்தான் அழகு, அறிவு, இரண்டும் பொருந்தியிருக்கக் காண்கிறேன்!" என்று பரவசமாகக் கூறினான் கந்தமாறன்.

"ஐயா! தாங்கள் இப்போது சொன்னது மனப்பூர்வமாகக் கூறின வார்த்தையா? அல்லது உலகத்தில் விட புருஷர்கள் பர ஸ்திரீகளிடம் சொல்லும் முகஸ்துதியா?"

"முகஸ்துதியல்ல; சத்தியமாக என் மனதில் இருப்பதையே சொன்னேன்."



"அப்படியானால், என்னைப் பூரணமாக நம்புவீர்களா? நம்பி எனக்காக ஓர் உதவி செய்வீர்களா?"

"என்னால் முடிகிற காரியம் எதுவாயிருந்தாலும் அதைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்."

"எனக்காகத் தாங்கள் காஞ்சிக்குப் போக வேண்டும்."

"காசிக்குப் போகச் சொன்னாலும் போகிறேன்."

"அவ்வளவு தூரம் போகவேண்டியதில்லை. காஞ்சியில் உள்ள இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு ஒரு நிருபம் கொடுப்பேன். அதை அவரிடம் சேர்ப்பிக்க வேண்டும். சேர்ப்பித்து விட்டு அவரைத் தங்கள் கடம்பூர் அரண்மனைக்கு விருந்தாளியாக அழைக்க வேண்டும்......"

"தேவி! இது என்ன வார்த்தை சொல்கிறீர்கள்? தங்கள் கணவரும், என் தந்தையும், மற்றும் பல சோழ நாட்டுப் பிரமுகர்களும் இராஜ்யத்தைப் பற்றிச் செய்து வரும் ஏற்பாடு தங்களுக்குத் தெரியாதா?"

"நன்றாய்த் தெரியும். அதைவிட இன்னும் சில செய்திகளும் தெரியும். ஐயா! தங்கள் குடும்பமும் என் குடும்பமும் மற்றும் பல பெரிய குடும்பங்களும் பெரும் அபாயத்தின் வாசலில் நின்று வருகின்றன. அதற்குக் காரணம் யார் தெரியுமா?"

"சொல்லுங்கள், தேவி!"

"இன்று மத்தியானம் இங்கு விருந்தாளியாக வந்திருந்தானே அந்தப் பாதகிதான்!"

"ஐயையோ! இளைய பிராட்டியையா சொல்கிறீர்கள்?"

"அந்த நாகப் பாம்பைத்தான் சொல்கிறேன். பாம்பின் கால் பாம்பு அறியும். குந்தவையின் சூழ்ச்சி இந்த நந்தினிக்குத்தான் தெரியும். உம்முடைய சிநேகிதன் வந்தியத்தேவனை அவள் இலங்கைக்கு அனுப்பியிருக்கிறாள். எதற்காகத் தெரியுமா? மூலிகை கொண்டு வருவதற்கு என்பது பெரும் பொய்! சுந்தர சோழர் பிழைக்க வேண்டுமே என்று அவள் தவித்துக் கொண்டிருக்கவில்லை. அவருக்குப் பிறகு மதுராந்தகரும் பட்டத்துக்கு வரக்கூடாது, ஆதித்த கரிகாலரும் பட்டத்துக்கு வரக்கூடாது. அவளுடைய அருமைத் தம்பி அருள்மொழி வர்மன் வரவேண்டும் என்பது அவள் எண்ணம். அருள்மொழி வர்மன் பட்டத்துக்கு வந்தால் இவள் இஷ்டம் போல் ஆட்டி வைக்கலாம். அப்புறம் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி குந்தவை தேவிதான்; சக்கரவர்த்தி யார் தெரியுமா? உங்கள் சிநேகிதன் வந்தியத்தேவன்!......"

"ஆகா! அப்படியா? இதை எப்படியாவது தடுத்தே தீரவேண்டும். என் தந்தையிடமும் பழுவேட்டரையர்களிடமும் உடனே சொல்ல வேண்டும்......"

"அவர்களிடம் சொல்லிப் பயன் இல்லை. அவர்கள் நம்பமாட்டார்கள். குந்தவையின் தந்திரத்தை மாற்றுத் தந்திரத்தால் வெல்ல வேண்டும். நீர் உதவி செய்தால் வெல்லலாம்!"

"கட்டளையிடுங்கள், தேவி!"

"இதோ இந்த ஓலையைச் சர்வ ஜாக்கிரதையாகக் கொண்டுபோய்க் காஞ்சியில் ஆதித்த கரிகாலரிடம் கொடுக்க வேண்டும். கொடுப்பீர்களா?" என்று சொல்லிக் கொண்டே ஓலைச் சுருளையும் அதைப் போடவேண்டிய குழலையும் நீட்டினாள். மோக வெறியில் மூழ்கிப் போயிருந்த கந்தமாறன் ஓலைச் சுருளையும் குழலையும் வாங்கிக் கொள்வதற்குப் பதிலாக நந்தினியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, "தங்களுக்காக எதுவேணுமானாலும் செய்வேன்!" என்று உளறினான்.

அச்சமயம் சடசடவென்று ஒரு சத்தம் கேட்டது. பழுவேட்டரையர் அரண்மனையிலிருந்து லதா மண்டபத்துக்கு வரும் பாதையில் விரைந்து வந்து கொண்டிருந்தார். திடீரென்று எதிர்பாராமல் வந்தவரைக் கண்டு, தாதிப் பெண் திடுக்கிட்டு விலகி நின்றாள். அங்கே மண்டபத்தின் விட்டத்திலிருந்து தொங்கி ஆடிய ஒரு முக்கோணத்தில் பெரிய கிளி ஒன்று சங்கிலியால் பிணைத்து வைக்கப்பட்டிருந்தது. வந்த வேகத்தில் பழுவேட்டரையர் தம்மை அறியாமல் அந்தக் கிளியைக் கையினால் பற்றினார். அவருடைய மனதிலிருந்த வேகம் அவருடைய கையின் வழியாகப் பாய்ந்தது. கிளியின் சிறகுகள் சடசடவென்று அடித்துக் கொண்டன. பழுவேட்டரையரின் கொடூரமான பிடியைத் தாங்க முடியாமல் கிளி 'கிறீச்' சிட்டது!

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

15. குஷ்டரோகம்


இதைப் பெருவியாதி என்றும் சொல்லுவர். உண்மையில் பெரிய வியாதிதான். இதைவிட மனிதனைச் சீரழிக்கக் கூடிய ஒரு வியாதி வேறு இருக்கவே முடியாது. என்ன பயங்கரம்! என்ன கொடூரம்! எவ்வளவு கொடியது! நினைத்தாலே உடல் சிலிர்க்கிறது! நெஞ்சம் விம்முகிறது! மனம் சஞ்சலப் படுகிறது! இவர்களுக்கு விமோசனம் இல்லையா!

சமீபத்தில் இந்த வியாதியஸ்தர்களுக்காக ஏற்பட்டிருக்கும் ஒரு சானிடோரியத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆண்களும் பெண்களுமாக சின்னஞ் சிறு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பல வயதினர் இக் கொடுமையான வியாதிக்கு இரையானவர்கள் இருந்தார்கள். முகத்தில் ஒரே ஏக்கத்தின் சாயல் எல்லோரிடத்திலும் தென்பட்டது. இன்ப உலகில் மனிதர்களாகப் பிறந்தும், மற்றவர்களுடன் சகஜமாய்ப் பழகி இன்பம் அனுபவிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்! இவர்களில் நல்ல படித்தவர்கள், வித்வான்கள், அறிவாளிகள், கவிகள் கூட இருக்கின்றனர். எல்லோருடைய வாழ்வும் வீணே. பெரியவர்களாவது எப்படியோ தைரியப்படுத்திக் கொண்டு இருக்கலாம். ஒரு பாவமுமறியாச் சிறுவர், சிறுமியர் என்ன செய்தனர்! ஏன் இந்தக் கொடிய தண்டனை!

இந்த வியாதி மூன்று விதமாய் வரமுடியும். மேற் சொன்ன குழந்தைகள் என்ன பாவத்தைக் கண்டது! பெற்றோர்களின் வியாதி அவர்களுக்கும் தொடர்ந்திருக்கிறது. ஒருக்கால் பெற்ற தாய் தந்தையர்களுக் கில்லாவிட்டாலும், அவர்களின் பாட்டன் பாட்டி இவர்களில் யாருக்காவது இருந்தாலும் பேரக் குழந்தைகளுக்கு வருவதுண்டு. இது முதல் வழி. இரண்டாவது, தானே தன் துஷ்ட சகவாசத்தால் தேடிக் கொள்வது. உடம்பில் தெம்பிருக்கும் போது தலைகாட்டாது. வலு சற்று குறைந்ததும் மேகம், பிரமேகம், கிரந்திப் புண், படை என்று தோன்றும். அதற்கு வைத்தியம் செய்வர். சிலருக்கு அது பெரும் வியாதியாய் மாறிவிடும். மூன்றாவது நம்மை அறியாமலும், நமது குடும்பத்தில் யாருக்கும் இல்லாவிட்டாலும், நாம் பலவீனமாய் இருக்கும் போது குஷ்டரோகிகளுடன் பழகுவதாலும், மற்றும் பல விதத்திலும் தொற்றும். இது எந்த விதத்தில் வந்தாலும், வந்தது வந்தது தான்.

இந்த வியாதியஸ்தர்கள் மற்றவர்களுடன் பழகாமல் தனித்து சானிடோரியங்களில் இருந்தால் அனேகமாய் இரண்டு தலைமுறையிலாவது குறைக்கலாம். மற்ற தேசங்களிலெல்லாம் அவ்வாறு செய்து குறைத்திருக்கின்றனர். நமது நாட்டில் மற்றெல்லா நாட்டினரைவிட அதிக குஷ்டரோகிகள் இருக்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை இரண்டு லக்ஷம் என்றும் புள்ளி விவரம் சொல்கிறது. விட்டுப்போனவை எத்தனையோ! அதுவும் எப்பொழுதோ எடுத்த விவரம் இது. இப்பொழுது இன்னும் அதிகம் இருக்கலாம். ஆனால் இவர்களுக் கெல்லாம் சிகிச்சை பெற எத்தனை ஆஸ்பத்திரிகளில் எத்தனை இடங்கள் (படுக்கைகள்) இருக்கின்றன தெரியுமா! 2000 தான்! நூறு குஷ்டரோகிகளுக்கு ஒரு படுக்கை. மற்றவர்கள் எல்லாம் நம்மிடையே வசித்து வியாதியைப் பரவச் செய்கின்றனர். இந்த நோய் பரவ இதைவிட வேறு என்ன வேண்டும்!

சிலர் இதை வெளியில் சொல்ல வெட்கப் படுவர். மூடி மூடி வைப்பர். என்ன ஒருவிதமாய் இருக்கிறதே என்றால்; அது பூச்சிக் கடி என்பர். ஏதோ படை என்பர். இதை மூன்று பருவங்களாகப் பிரிக்கலாம். முதலில் சிறு சிறு படைபோல் சிவப்பாகவோ, வெளுப்பாகவோ தோலின்மேல் எப்பாகத்திலும் தென்படலாம். சிலருக்குத் தடித்துப் படைபோல் ஓரங்களில் சிவப்பாய் மட்டும் இருக்கலாம். மற்ற பாகங்களை விட இங்கு உணர்ச்சி குறைவாய் இருக்கும். லேசான இறகினால் தொட்டால் தெரியாது. கிள்ளினாலும் நோகாது. மற்ற படைகளாய், பத்துகளாய் இருந்தால் உணர்ச்சி தட்டும். எப்பொழுது உணர்ச்சி இல்லையோ அப்பொழுதுதே அது பெரு வியாதி ஆரம்பம் என்று முடிவாய்ச் சொல்லலாம். சில நாட்களில் உடம்பெல்லாம் இதைப் போலப் பரவும்.



கடைக்காரர்:— போகாதீர்கள்! இந்த விலைக்கு ஒரு காலில் நல்ல அகராதிகள் இரண்டு வைத்து எவனும் கொடுக்க மாட்டான்.

வாங்க வந்தவர்:—இதைவிட ஆசமான விலைக்கு நான்கு கால்களிலும் அகராதிகள் வைத்து வாங்கிக் கொண்டு வராவிட்டால் என் பெயர் தொண்டியாப் பிள்ளை இல்லை!

இது முதற் பருவம். இந்தச் சமயத்தில் இது பிறருக்குத் தொத்தாது.

பிறகு தோல்கள் தடித்து படிப்புகள் விழ ஆரம்பிக்கும். முகத்தில் தோல் வெப்பாய்த் தடிக்கும். காது, உதடு, மூக்கு இவைகள் அதிகமாய்த் தடிக்கும். சதைகள் சிறு சிறு உருண்டைகளாய் வளரும். முட்டிகளில் நரம்புகள் புடைத்து வீங்கும். அடிக்கடி ஜுரமும் வரும். ஜுரம் வந்து போனபின் இன்னும் சற்று இதில் அபிவிர்த்தி என்றால் அதிக சின்னங்கள் காணும். இது இரண்டாவது பருவம். இப் பருவத்தில் இவர்களின் எச்சில், சளி முதலியவைகளின் மூலமாக வெகு எளிதில் பிறருக்குத் தொற்றும்.

பிறகு மூன்றாவது பருவம். இதில்தான் நோயாளி அதிக குரூபியாகிறான். சதைகள் வெடித்து நீர் வடியும். புண்கள் ஏற்படும். இவர்கள் காலுக்கு உணர்ச்சி யில்லாததால் அடிபட்டாலும் தெரியாது. நெருப்பை மிதித்தாலும் உணர்ச்சி யிராது அடிபட்டு ரத்தம் வடியும். காயம் ஆறாது அதிக புரையோடும். கால், கை விரல்கள் பொத்து வடியும். அழுகிக் குறைந்து கொண்டு வரும். கண் இமைகள் மூட முடியாது. சிலருக்கு மூக்கையும் அரித்து விடும். இந்த நிலைமையில் மனிதனைக் காணச் சகிக்காது. இவர்களுக்குத் தொத்துக் கிருமிகள் இந்தச் சமயங்களில் வெளியில் இருக்காது. சரீரத்தினுள் புகுந்து ஜீவ சக்தி அணுக்களையும் நரம்புகளையும் குறைத்துக் கொண்டிருக்கும். அதனால் தான் அங்கங்கள் உணர்ச்சியற்று, வளர்ச்சி குன்றி அழுகிப் போகின்றன.

சிலர் இதைக் கர்ம வியாதி என்பர். தொத்தாது என்பர். இம்மாதிரி மூட நம்பிக்கைகளில் எல்லாம் மூழ்கிவிடக் கூடாது. எத்தனை குஷ்ட ரோகிகள் தங்கள், தங்கள் குடும்பத்திலேயே இருக்கின்றனர்! தெருக்களில் பிச்சை யெடுக்கின்றனர்! பஸ் ஸ்டாண்டுகளில் தவறாமல் இவர்களைத் தரிசிக்கலாம்! "ஏன் இவர்கள் எல்லாம் இம்மாதிரி இருந்து கொண்டு மற்றவர்களுக்குத் தொத்தச் செய்கின்றார்கள்! பிச்சைக்கார விடுதி இல்லையா! சானிடோரியங்கள் இல்லையா! போவதற் கென்ன!" என்று ஒரு நண்பர் கேட்டார். எல்லாவற்றிற்கும் இல்லை என்பது போல் இதற்கும் இடம் இல்லை என்ற பதில்தான். பிச்சைக்கார விடுதி இவர்களுக்கு ஜெயில் போல் இருக்கிறதாம். வேளா வேளைக்கு நல்ல சாப்பாடு சாப்பிட்டு இருப்பது ஜெயிலாம். பிச்சை எடுப்பது சுதந்திரமாம். இப்படியும் சிலர் நினைக்கின்றனர். சானிடோரியத்தில் சேர வேண்டுமானால் மிக மிகப் பெரிய சிபாரிசுகள் வேண்டும். இந்தப் பிச்சைக்காரருக்கு யார் சிபாரிசு செய்வர்! இந்த நிலைமையில் நமது சுகாதார நிலை இருக்கிறது. இவைகளிருந்தெல்லாம் நாம் தடுக்கப்பட்டு பயமில்லாமல் வாழ வேண்டுமானால் நமது உடல் உறுதியாய் நமது ரத்த அணுக்கள் நல்ல திடம் பொருந்தியதாய் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் எந்தவித நோய்க் கிருமிகளும் அணுகாது அப்படி அணுகினாலும் அபிவிர்த்தி ஆகாமல் அழிக்கப்படும். அந்த அபூர்வ சக்தி சர்வாங்காசனம் செய்வதினால்தான் ஏற்படும்.

இந்த வியாதி வந்து நலிந்து கொண்டிருப்பவர்களுக்கும் சர்வாங்காசனம் அபயம் அளிக்கிறது. ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் வெகு லேசாய்ப் போக்கடித்துக் கொள்ளலாம். இரண்டாவது நிலைமையில் சற்று முதிர்ந்தவர்களும் சர்வாங்காசனம் செய்து குணமாகலாம். முற்றும் முற்றி அங்கங்கள் அழுகி, குறுகி, அங்க ஹீன மானவர்களும் சர்வாங்காசனம் செய்து நோய் எனும் நரகத்திலிருந்து மீளலாம். சில பத்தியங்களை மட்டும் வெகு ஜாக்கிரதையாக அனுசரித்து வரவேண்டும்.

அதை எப்படிச் செய்வது! எவ்வாறு குணம் கிடைக்கு மென்பதை யெல்லாம் அடுத்த கட்டுரைகளில் கவனிப்போம். (தொடரும்)

இலட்சிய வாதி

எப்பேர்ப்பட்ட நல்ல சாதனத்தையும் துர் உபயோகப்படுத்தும் வழியை மனிதன் கண்டு பிடித்து விடுகிறான். நாடகம் ஓர் அரிய கலை. நாடக மேடை மக்களிடையே நல்லுணர்ச்சிகளைப் பரப்ப ஓர் அரிய சாதனம். அந்தக் கலையும் சாதனமும் தமிழ் நாட்டில் துன்மார்க்கத்தையும் துவேஷத்தையும் பரப்ப உபயோகப்பட்டு வருவதைக் கண்டு பலரும் வருந்துகின்றனர். அப்படி வருந்தியவர்களின் மனம் மகிழும்படியாக "இலட்சிய வாதி" என்னும் நாடகத்தைத் தயாரித்து ராஜாஜி கலைக் கழகத்தார் மிகச் சிறந்த முறையில் நடித்தார்கள். உயரிய தேசிய இலட்சியங்கள் இந்நாடகத்தில் ததும்பி நின்றன. ஸ்ரீ ஜி. உமாபதி, ஸ்ரீ ஜே. குமார், ஸ்ரீமதி ஏ. ரத்னமாலா ஆகியவர்களின் நடிப்பும் சம்பாஷணையும் உயர்ந்த ரகமாக அமைந்தன. கதாநாயகனுடைய தம்பி வேஷம் தரித்த ஆர். குருமூர்த்தி என்னும் சிறுவன் வெகு துடிப்பாகப் பேசியும் நடித்தும் சபையின் பாராட்டுதலைப் பெற்றான். நாடகம் ராஜாஜி கலைக் கழகத்தின் வாசகசாலை நிதிக்காக சென்ற ஜூலை 8-ந் தேதி செயின்ட் பேட்ரிக் மண்டபத்தில் நெருங்கிக் கூடியிருந்த மாபெரும் சபையின் முன்னிலையில் நடைபெற்றது! நாடகத்துக்குத் தலைமை வகித்த "கல்கி" ஆசிரியர் நாடகத்தின் உயர்ந்த இலட்சியங்களையும் நடிகர்களையும் பாராட்டி வாழ்த்துரை கூறினார்.



ஸ்ரீ ஜி. உமாபதி



நந்தி எங்கே?

கோணல்

மருதப்பன் தொழிலுக்குப் புதிது. தொழில் மிகவும் சாமர்த்தியமான தொழில். அதைக் கற்றுக் கொள்வதற்குப் பள்ளிக் கூடங்களோ கலாசாலைகளோ கிடையாது. தானாகவேதான் கற்றுக் கொண்டாக வேண்டும். திருடுவதென்றால் சாமான்யமான விஷயமா? மருதப்பனுக்குத் திருடினால் தான் வயிறு வளர்க்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. எப்படித் திருடுவது என்பதைக் கற்றுக் கொடுப்பதற்கு அவனுக்குத் தக்க குருநாதர் அகப்படவில்லை. தானாகவே அந்தத் தொழிலைத் தொடங்க நினைத்தான். அதற்காக ஒரு நல்ல நாளையும் பார்த்து வைத்திருந்தான்.

அனுபவமில்லாதவன். எங்கே திருடுவது? எப்படித் திருடுவது? அகப்பட்டுக்கொண்டால் என்ன செய்வது? இப்படிப் பட்ட குழப்பங்களெல்லாம் அவனுக்கு ஏற்படத் தொடங்கின. இருந்தாலும் தைரியத்தைக் கைவிட வில்லை. துணிவுடன் தொழிலில் இறங்க உத்தேசித்தான்.

திருட்டுத் தொழிலின் முதல் பாடம் கூட்டம் நிறைந்த இடத்தில் புகுந்து அசதி மறதியாக இருப்பவர்களின் சட்டைப் பைகளில் உள்ளவைகளை அநாயாசமாக எடுத்துப் பதுக்குவதுதான் என்று அவனுக்குப் பட்டது. சுவர் ஏறிக் குதித்தோ, கன்னம் வைத்து ஒரு வீட்டில் களவு செய்வதோ, இருட்டில் நின்று வழிப்பறி செய்வதோ அவனுக்கு ஆரம்பத்தில் சிறிது கடினமாகப் பட்டதால் சந்தடியில் புகுந்து அகப்பட்டதைச் சுருட்டுவதுதான் திருட்டுத் தொழிலின் முதல் படியாகப் பட்டது.

எப்பொழுதுமே தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனில் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். இதைவிட வேறு தகுந்த இடம் அவனுக்குப் படவில்லை. விடியற்காலையிலிருந்தே மருதப்பன் ஸ்டேஷனைச் சுற்ற ஆரம்பித்தான். அங்கு நிற்பான். இங்கு நிற்பான். நான்கைந்து பேர் சேர்ந்து நிற்கும் இடத்திலெல்லாம் தானும் போய் ஒட்டிக் கொண்டு நிற்பான், அவர்களைச் சேர்ந்த மனிதன் போல். சாயங்காலம் வரையில் இப்படியே பொழுது ஓடிவிட்டது. சுலபமாக எடுக்கக்கூடிய முறையில் ஒருவரும் தங்கள் பணப் பையை வைத்துக் கொண்டிருக்கவில்லை. என்ன செய்வான் பாவம்! அவனுடைய சாமர்த்தியத்திலும் துணிச்சலிலும் அவனுக்கே அவநம்பிக்கை ஏற்பட்டது. உண்மையாக இதெல்லாம் குருமுகமாகக் கற்றுக் கொள்ள வேண்டிய வித்தைதான் என்று அவனுக்குப் பட்டது.

கையிலிருந்த சில்லறைக்கு ஒரு டீ குடித்து விட்டு அங்கிருந்த பெஞ்சி ஒன்றில் ஆயாசத்துடன் போய் உட்கார்ந்தான். அவனுக்குப் பக்கத்தில் காட்டுப்புறத்தான் ஒருவன் வந்து உட்கார்ந்தான். மருதப்பன் அவனை மேலும் கீழுமாக ஒரு தடவை பார்த்தான். கடவுள் அவனிடமும் கொஞ்சம் இரக்கம் கொண்டு தான் அந்த காட்டுப்புற மனிதனைக்கொண்டு வந்து அவனுக்குப் பக்கத்தில் விட்டிருப்பதாகத் தோன்றியது. அந்த மனிதன் சட்டை போட்டுக் கொண்டிருக்கா விட்டாலும் மடியில் வைத்திருந்த பணப்பை சிறிது வெளியே எட்டிப் பார்த்தது மருதப்பனின் கண்ணில் படாமலில்லை. அந்த மனிதனுக்குச் சமீபமாக நகர்ந்து உட்கார்ந்து, "உங்களுக்கு எந்த ஊரு?" என்றான்.

அந்த மனிதன் மடியில் தளர்ந்து தொங்கும் பணப்பையை இழுத்துச் செருகிக் கொண்டு, "புதுக்கோட்டைக்குச் சமீபம்" என்றான்.

"புதுக்கோட்டைக்குச் சமீபன்னு பதுவைக் கோட்டையா?" என்றான்.

"இல்லே. கண்டாக்கோட்டை!" என்றான்.

"சரிதான். இங்கே எதுக்காக வந்தீங்க......?" என்றான் மருதப்பன்.

"எங்களுக்குத் துவரை வியாபாரம். அதற்காக......"

"வியாபாரம் எப்படி? தஞ்சாவூருலே பத்துப் பதினைந்து மூட்டையாவது வித்திருப்பீங்களா?"

"இந்த வருசம் வியாபாரம் கொஞ்சம் கடிசாத்தானிருந்தது. கொண்டு வந்த வரையில் விறுவிறுப்பாத்தான் வித்துட்டேன். இருபது மூட்டையை ஒரே மண்டியிலே விலை பேசித் தள்ளிட்டேன்."



"சரிதான்......" என்று கூறிவிட்டு மருதப்பன் சிறிது நேரம் யோசித்தான். ஆசாமி மடியில் திருப்திகரமான தொகை இருக்கிறது என்று அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இருந்தாலும் எத்தனைதான் இருக்கும் என்று தெரிந்து கொள்வதும் நல்லதுதானே? "துவரை மூட்டை என்ன விலைன்னு போட்டீங்க?" என்றான் ஏதோ மார்க்கட்டு நிலவரத்தை ஆவலோடு தெரிந்து கொள்ள நினைப்பவன் போல்.

"மூப்பது ரூபாய் சொச்சம்..." என்றான்.

சொச்சத்தைப் பற்றி மருதப்பன் கவலைப் படவில்லை. மூட்டை மூப்பது ரூபாய் வீதம் வைத்துக் கொண்டு பார்த்தாலும் இருபது மூட்டைக்கு அறுநூறு ரூபாய்க்குக் குறையாமல் அந்த மனிதனின் மடியில் இருக்க வேண்டுமென்று மருதப்பனுக்குப் பட்டது.

"உங்களுக்கு என்ன தொழில்?" என்றான் புதுக்கோட்டை வியாபாரி.

மருதப்பன் தன் தொழிலைப் பளிச்சென்று சொல்லிவிட முடியுமா? இருந்தாலும் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லித்தானே யாகணும்? "காப்பிக் கொட்டை பிஸினஸ்" என்றான் பாதி ஆங்கிலமும் பாதித் தமிழும் கலந்து. அதற்கு மேல் தொழில் விஷயமாக புதுக்கோட்டை வியாபாரி ஒன்றும் கேட்கவில்லை. "திருச்சி வண்டி வர நேரமாகுமோ?" என்றான்.

"ஆமாம், கொஞ்சம் தாமதமாகத்தான் வரும். இரண்டு மணி நேரம் தாமதமாக வரும்!" என்றான்.

"அப்பாடியோ, அப்படின்னு கிட்டத் தட்ட பன்னிரெண்டு மணிக்குத்தான் வரும்னு சொல்லுங்க!" என்றான் புதுக்கோட்டை வியாபாரி.

"ஆமாம்......" என்றான் மருதப்பன்.

புதுக்கோட்டை வியாபாரி அதற்குமேல் ஒன்றுமே பேசவில்லை. முழங்காலில் தன் தலையைச் சாய்த்துக்கொண்டு அவன் உட்கார்ந்திருந்தான்.

"உங்களுக்குத் தூக்கம் வருதுபோலிருக்கு!" என்றான் மருதப்பன்.

"அதெல்லாம் இல்லை. கொஞ்சம் அசதி" என்றான் வியாபாரி.

"வெளியூர் பயணமென்றால் அப்படித்தானிருக்கும்!" என்றான் மருதப்பன்.

மருதப்பன் ஸ்டேஷனில் மாட்டியிருந்த பெரிய கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு. வியாபாரி உட்கார்ந்திருந்த வண்ணமே அயர்ந்து தூங்குவதாகத் தெரிந்தது. அவன் தூக்கம் கலைந்து எழுந்து விடுகிறானா என்பதைப் பார்ப்பதற்காகப் பெஞ்சியை ஒரு தடவை ஆட்டினான். நல்ல வேளை; வியாபாரி எழுந்திருக்கவில்லை. மருதப்பன் சுற்றிலும் ஒரு தடவை பார்த்தான். சமூபத்தில் ஒருவரும் அவனைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. வியாபாரியின் மடியைக் கவனித்தான். மடியிலிருந்த பணப்பை சிறிது நழுவி இருந்தது. லாகவமாக எடுத்து விடலாம் என்று தோன்றியது. படபடப்போடு இருக்கும் நெஞ்சில் துணிவை ஏற்படுத்திக் கொண்டான். அவன் தயங்கவில்லை. கண நேரத்தில் பையை எடுத்துக்கொண்டு வேகமாக நடந்தான். வியாபாரி இன்னும் தூங்குகிறானா எழுந்து விட்டானா என்றெல்லாம் அவன் கவனிக்கவில்லை. தயங்காமல் எப்படியோ ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே வந்து விட்டான்.

அவன் பஞ்சாங்கமெல்லாம் பார்த்து அன்று முதன் முதலாகத் தன் தொழிலை ஆரம்பிக்காவிட்டாலும் அன்று ஆரம்பித்த வரையில் உத்தமமான நாளில்தான் தொழிலை ஆரம்பித்திருக்கிறோம் என்று நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது.

சாமர்த்தியமாகத்தான் திருடி விட்டான். இருந்தாலும் மனதில் படபடப்பு நீங்கவில்லை. பிறர் கையில் சிக்காமல் திருடிய பொருளை பத்திரமாகக் காப்பாற்ற வேண்டாமா? மடியில் சொருகி இருந்த பை கனமாக இருந்தது. அது எங்காவது நழுவி விழுந்து விடுமோ என்ற பயம் வேறு அவனுக்கு ஏற்பட்டது. 'திருடத் தெரிந்தாலும் தேத்தத் தெரியவேண்டும்' என்பார்கள். இனிமேல் எப்படியெல்லாம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றித் திட்டம் போட நினைத்தான்.

முதலில் பையைப் பிரித்துப் பார்க்க வேண்டும். அதில் எவ்வளவு ரூபாய் இருக்கிறது என்று தெரிய வேண்டும்? எல்லா இடத்திலும் பையை வெளியே எடுத்துப்

பணத்தை எண்ணிவிட முடியுமா? அவனைத் தொடர்ந்து யாரோ வந்து கொண்டிருப்பது போலத் தோன்றியது. ரஸ்தாவில் போகும் ஒவ்வொருவரும் அவனை எப்படிக் கவனிக் கிறார்கள் என்பதைக் கவனிப்பதிலேயே கவலையாய் இருந்தான். தஞ்சாவூரிலேயே அந்தத் திருட்டுச் சொத்தை வெளியே எடுத்துச் சோதனை செய்து பார்ப்பதற்குப் பெரிய கோவில்தான் அவனுக்குச் சரியான இடமாகப் பட்டது. நேராகக் கோவிலை நோக்கி நடந்தான்.

கோவிலில் ஏதோ உற்சவம். சிறிது கூட்டமாக இருந்தது. பெரிய நந்தி இருந்த மண்டபத்தில் கூட்டமே இல்லை. தவிர அந்த இடம் சிறிது மறைவாகவும் இருட்டாகவும் இருந்தது. அந்த மண்டபத்தில் உட்கார்ந்து கொள்வதினால் பிறர் சந்தேகப்பட மாட்டார்களென்றும் அவனுக்குத் தோன்றியது. நந்திக்குச் சமீபமாகப் போய் உட்கார்ந்து கடவுளை யெல்லாம் பிரார்த்தித்துக் கொண்டு மடியிலிருந்த பையை எடுத்துப் பிரித்தான். ஒரு கத்தை நோட்டு. எல்லாம் பத்து ரூபாய் நோட்டுக் களாயிருந்தன. படபடப்போடு எண்ணினான். அறுநூற்று இருபதுரூபாய் இருந்தது. அதைத் தவிர அந்தப் பையில் இன்னும் சில ஒரு ரூபாய் நோட்டுக்களும் சில்லறையும் இருந்தது. திருச்சி ஸ்டேஷனுக்கு ஒரு டிக்கட்டும் இருந்தது. இவைகளைத் தவிர இரண்டொரு காய்ந்த வெற்றிலை பாக்குத் துண்டுகள், புகையிலை நறுக்குகள், சுண்ணாம்பு டப்பி இவைகள்தான். மருதப்பன் பணத்தைத் தவிர மற்றவைகளை யெல்லாம் வீசி எறிந்து விட்டுப் பணத்தை மட்டும் பையோடு மடியில் சுற்றி வைத்துக் கொண்டான் பத்திரமாக.

அதற்கு மேலே என்ன செய்யலாம் என்று யோசிப்பதில் மூளை முனைந்தது. உடனேயே கோவிலை விட்டுப் போய் விடுவது அவனுக்குச் சரியானதாகப் படவில்லை. கோவிலில் உற்சவம் முடிவதற்கு இரவு நெடு நேரமாகும் போலிருந்தது. அப்படியே அந்த பெரிய நந்திக்குக் கீழேயே சிறிதுநேரம் படுத்திருந்து விட்டுப் போகலாம் என்று முடிவு கட்டினான். மேல் துண்டை உதறிப் போட்டு விட்டுப் படுத்து விட்டான். அலுப்புத் தீர்த்தவன்போல் படுத்தானே தவிர அவன் மனது மாத்திரம் நிம்மதியாய் இல்லை. மடியிலிருந்த கனம் அவன் மனதைப் போராட வைத்தது. 'திரும்பும்போது தன்னை யாராவது பார்த்து விட்டார்களோ! தன்னை யாராவது உளவறிந்து பிடித்து விடுவார்

களோ' என்ற பயம் ஒருபுறத்திலிருக்கத்தா னிருந்தது. அப்படிப்பட்ட எண்ணமெல்லாம் எழாமலிருக்க வேறு எதையாவது பற்றித் தன் நினைவை மாற்றிக்கொள்ள நினைத்தான். அப்பொழுது அவன் சிந்தனைக்கு ஏற்ற பொருளாக பிரம்மாண்டமான நந்திதான் அவன் கண்ணெதிரி லிருந்தது.

'ஆஹா! எவ்வளவு பெரிய நந்தி .....?' என்று சொல்லிக் கொண்டான் தனக்குள்ளேயே 'ஆமாம் மிகவும் பெரிய நந்திதான். இருபதடி நீளம். பதினெட்டடி உயரமாவது இருக்கும் ......' என்றும் தானே பதிலும் சொல்லிக் கொண்டு ஆறுதலும் அடைந்தான். சட்டென்று அவன் மனது திரும்பியது. இன்று அறுநூறு ரூபாய்க்கு மேல், முதலீடு போடாது ஆரம்பித்த தொழிலில் சம்பாதித்து விட்டோம். இதை வைத்துக் கொண்டு வேறு ஏதாவது நல்ல தொழிலாக ஆரம்பிக்கலாமா? இல்லாவிட்டால் இதே தொழிலேயே தொடர்ந்து நடத்தலாமா......?'

'சே! இதைப்பற்றி ஏன் இப்பொழுது கவலைப்படணும்......இதைப்பற்றி பின்னால் முடிவு செய்து கொள்ளலாம். இப்பொழுது கொஞ்சம் மனம் நிம்மதியா யிருக்க வேண்டுமானால் இந்த நந்தியைப் பற்றி ஏதாவது யோசிப்போம்......ஹூம் இந்த நந்தியை எந்தச் சிற்பி செய்திருப்பான்......'

'எவனோ...? இப்படி ஒரு பெரிய நந்தியை இந்தக் கோயிலை கட்டிய ராஜராஜா செய்யச் சொல்லி இருக்கணும்......இதற்கு எவ்வளவு பணம் செலவழிந்திருக்குமோ ......?'

அறுநூறு ரூபாய்க்கு மேல் செலவழிந் திருக்கும். அறுநூறு ரூபாயில் இருபது துவரை மூட்டைதானே வாங்கலாம்...... இருபது துவரை மூட்டையைக் கஷ்டப்பட்டு புதுக் கோட்டையிலிருந்து ஏற்றி வந்து விற்று விட்டு அந்தப் பணத்தைத் தன்னை யறியாமல் என்னிடம் கொடுத்து விட்டானே அந்த மனிதன் ......'

'அவனாகக் கொடுத்தானா? நன்றாய்க் கொடுப்பான். நானாகத்தானே அவனிடமிருந்து எடுத்துக் கொண்டேன் ... '

நந்தியிடம் இருந்த சிந்தனை எப்படியோ தட்டுத் தவறிச் சொந்த விஷயத்திற்கு வந்து விட்டது.

'சே, சே! இந்த நினைப்பு நம்மைவிடாது போலிருக்கே. இனிமேல் அதை அடியோடு மறந்துவிட வேணும். ஆமாம்! சரி! இந்த நந்தி ஒரே கல்லிலே செய்ததாமே!'

'இருக்கும். ஆனால் இவ்வளவு பெரிய நந்தி எதற்காகச் செய்யணும். சின்னதாக செய்யக் கூடாதா?'

'சின்னதாகச் செய்தால் அதை யாராவது திருடி மடியில் வைத்துக்கொண்டு போய் விட்டால் ......'

'நந்தியை யாராவது திருடுவானா? அதைத் திருடி என்ன செய்வது? காசா பணமா...? அறுநூறு ரூபாய்ப் பணத்தை மடியில் வைத்துக் கொள்வதே கஷ்டமா யிருக்கிறது. இந்த நந்தியை யாராவது மடியில் வைத்துக் கொள்ள முடியுமோ ......?'

இப்படி ஏதேதோ நந்தியைப் பற்றியும், அன்று தான் நடத்திய திருட்டைப்பற்றியும் மாறி மாறிச் சிந்தனை செய்து குழம்பிக் கொண்டிருந்த மருதப்பனுக்கு எப்படியோ தூக்கம் வந்து விட்டது. அவனை யறியாமல் தூங்கி விட்டான். யாரோ அவனை முதுகில் அடித்து எழுப்பியபோது அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான் மருதப்பன். அவன் எதிரில் காக்கி உடைதரித்த ஒருவன் கையில் ஒரு தடியுடன் நின்று கொண்டிருந்தான்.

“ஐயோ! நான் நந்தியைத் திருடல்லையே” என்று அலறினான் மருதப்பன்.

“ஏய் என்னடா! கையாண்டியா செய்யறே. மடியைக் காட்டு பார்ப்போம்......” என்று பிடரியில் ஒரு அடி கொடுத்தான் காக்கி உடைக்காரன்.

“ஐயோ! நான் நந்தியை மடியிலே வைச்சுக்கில்லையே!” என்று கூச்சல் போட்ட வண்ணம் எழுந்தான் மருதப்பன். அவன் மடியிலிருந்த பணமுடிப்பு தொப்பென்று கீழே விழுந்தது. அவனை அடித்த மனிதன் அந்தப் பணப் பையைக் கையிலெடுத்துக் கொண்டு, “களவாணிப் பயலே! என்னை ஏமாற்றி விடமுடியுமா? காலையிலே உன்னை முதன் முதல்லே ரயில்வே ஸ்டேஷனில் பார்த்தவுடனேயே தெரிஞ்சுகிட்டேனே, புதிசா தொழில் நடத்த வந்திருக்கேன்னு! என்கண்ணிலே பட்ட ஆசாமி தப்பிட முடியுமா?......போடா ஸ்டேஷனுக்கு ......” என்று கன்னத்தில் ஒரு அடி கொடுத்துக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினான்.

அந்த ஒரு அடியை வாங்கிய பிறகுதான் மருதப்பனுக்குச் சரியாகத் தூக்கம் தெளிந்து சுய உணர்வு வந்தது. பாவம்! அவன் தூங்கும் போது பெரிய கோயிலிலுள்ள நந்தியைத் திருடி மடியில் வைத்துக் கொண்டு ஓடுவது போல் சொப்பனம் கண்டது அந்த போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு எப்படித் தெரியும்?



மொழிபெயர்ப்பு : 'வாஞ்சி'

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மங்கு, அமிருத் பாய் முதலியோர் ரயில் வண்டியில் ஏறியதும், மேற்படி வண்டியில் இருந்தவர்களுக்கு வம்பு அளப்பதற்குச் சரியான விஷயம் கிடைத்து விட்டது!

அவர்களின் வம்புக்கு, சித்த சுவாதீனமற்ற மங்குவின் நிலைமையைக் காட்டிலும் வேறு சிறந்த விஷயம் என்ன இருக்க முடியும்!

ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றியதை யெல்லாம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

"பாருங்கள்! அந்தப் பெண் மொழு மொழுவென்று எவ்வளவு நன்றாக இருக்கிறாள்! ஆனால் ஒரே மாதத்தில் அவள் துரும்பாக இளைத்து விடுவாள். ஆஸ்பத்திரியில் இருப்பவர்களுக்கு என்ன அக்கறை வந்தது! அவர்கள் குறிப்பிட்ட மணி தவறாமல் சாப்பாடு போட்டு விடுவார்கள். அந்தச் சாப்பாட்டைச் சாப்பிடுகிறாளா, அல்லது தூர எறிகிறாளா என்பதைப் பற்றி அவர்களுக்கு என்ன கவலை!"

"பாவம்' எங்கள் கிராமத்திலிருந்த ஒரு கிழவி இப்போது பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். மூன்று வருஷம் ஆகிறது. கொஞ்சமும் மாறுதல் இல்லை. அவளைப் பார்ப்பதற்காக எங்கள் கிராமத்திலிருந்து யாராவது சென்றால் அவர்களைக் கண்டதும் அந்தக் கிழவி தேம்பித் தேம்பி அழுகிறாள்; தன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லும்படி கெஞ்சுகிறாள். ஆனால் அவளுடைய பிள்ளைகள் அவளது பரிதாபமான கூக்குரலைக் காது கொடுத்துக் கேட்டால்தானே!"

"இப்படிப்பட்ட பிள்ளைகள் இருப்பதும் இராதது ஒன்றுதான்."

"பிள்ளைகள் என்ன செய்வார்கள்! அவர்கள் நல்லவர்கள்தான். ஆனால் அந்தக் கிழவியின் வீட்டுப் பெண்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு ஆடம்பரமாக உடை அணிந்து கொண்டு அங்கு மிங்கும் போய் மினுக்கிக் கொண்டிருப்பதற்குத்தான் நேரம் சரியாக இருக்கிறது. அப்படியிருக்க, அவர்கள் மாமியார்க் கிழவியை எங்கு கவனிக்கப் போகிறார்கள்!" என்றாள் வண்டியிலிருந்த ஒருத்தி.

"பாவம்! இந்தப் பெண்ணுக்கு (மங்கு) தாயார் செத்துப் போய் விட்டாளோ!"

இந்தக் கேள்வி அமிருத்பாயின் இருதயத்தை ஈட்டியால் குத்துவதுபோல் இருந்தது. அவள் கண்களில் நீர் ததும்பியது. அவளால் பேசவே முடியவில்லை. அவள் வெட்கத்தினால் தலையைக் குனிந்து கொண்டாள். அவள் தான் மங்குவின் தாயார் என்பது அந்த வண்டியிலிருந்த எல்லோருக்கும் உடனே தெரிந்துவிட்டது.

"அட கடவுளே! என் அம்மா, உன்னைப் போல் பெற்ற தாயாரே தன் பெண்ணை இப்படி ஆஸ்பத்திரியில் கொண்டு போய்த் தள்ளும்போது, டாக்டர்களையும் நர்ஸுகளையும் குறை கூறுவதற்கு என்ன இருக்கிறது!"

அமிருத்பாய் மாத்திரம் தனியாக வந்திருந்தால், ரயில் பிரயாணிகள் அவ்வாறு இடித்துக் காட்டியதும் மங்குவுடன் மறு ரயில் வண்டியில் நிச்சயமாக ஊருக்குத் திரும்பி யிருப்பாள். ஆனால் தன் பிள்ளையும் கூட வந்ததால், அவனுக்கு மனக்கஷ்டம் ஏற்படுமே என்று பேசாமல் இருக்க நேர்ந்தது. எனவே அவள் மிகுந்த மனவருத்தத்துடன் ஆஸ்பத்திரிக்குச் செல்வதைத் தவிர வேறு வழி எதுவும் தோன்றவில்லை.

* * *

அவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தனர். அங்கிருந்த வாசலில் ஒரு புறம் சித்த சுவாதீனமற்ற நோயாளிகளும் மற்றொருபுறம் அவர்களுடைய உறவினர்களும் உட்கார்ந்திருந்தார்கள். பலர் தங்களுடைய உறவினர்கள் கொண்டு வந்த உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பெண், பைத்தியம் பிடித்த தன் கணவனிடம் அவர்களுடைய குழந்தைகளைப்பற்றி ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

சித்த சுவாதீனமற்ற ஒரு பெண் தன் கணவனை இறுகத் தழுவிக் கொண்டாள். பின்னர் நர்ஸுகளைச் சுட்டிக் காட்டி அவள் சொன்னாள்: "இந்தப் பிசாசுகளைப் பாருங்கள். இவர்கள் எனக்கு உடுத்திக் கொள்ள நல்ல

உடை கொடுப்பதே இல்லை. மோசமான சாப்பாடு கொடுக்கிறார்கள். என் தலையை வாரிப் பின்னிக்கொள்ள எண்ணெய் கொடுப்பதில்லை."

அமிருத்பாய் நர்ஸுகளைக் கண்கொட்டாமல் கவனிக்கத் தொடங்கினாள். மேற்படி பைத்தியக்காரப் பெண்ணை அழைத்து வந்த நர்ஸ், சிறிதும் கோபம் கொள்ளவில்லை. "இனிமேல் நீ கேட்பதெல்லாம் உனக்குத் தருகிறேன். ஆனால் இப்போது நீ உன் கணவர் கொண்டு வந்துள்ள நல்ல பதார்த்தங்களைக் கொஞ்சம் சாப்பிடு" என்று நர்ஸ் சொன்னாள்.

"நான் இன்னும் பல் தேய்க்கவில்லை. முகத்தையும் அலம்பிச் சுத்தம் செய்து கொள்ளவில்லையே!" என்று அந்தப் பைத்தியக்காரி நாணிக் கோணிக் கொண்டு பதில் கூறினாள்.

ஆனால் அவள் முகம் தண்ணீரால் கழுவப்பட்டு சுத்தமாக இருப்பதை அமிருத்பாய் கவனித்தாள். அப்படியிருந்தும் அந்த நர்ஸ் சிறிதும் சலித்துக் கொள்ளாமல், ஒரு செம்பு தண்ணீர் கொண்டு வந்ததுடன், சித்த சுவாதீனமற்ற அந்தப் பெண் மறுபடியும் முகத்தைக் கழுவிக்கொள்ள உதவியும் செய்தாள். பிறகு அந்த நர்ஸ் ஒரு சுத்தமான துண்டை எடுத்து அவள் முகத்தைத் தானே அன்புடன் துடைத்தாள். நர்ஸின் அன்பை நேரில் பார்த்த அமிருத்பாய்க்கு மிகுந்த ஆறுதல் ஏற்பட்டது.

மேட்ரன் (ஆஸ்பத்திரியின் தலைவி) வந்தாள். அவளுடன் மெடிகல் ஆபீசரும் வந்தார். அமிருத்பாயின் பின்னை அவர்களிடம் மாஜிஸ்திரேட்டின் பர்மிட்டைக் கொடுத்தாள். மங்குவைச் சரியாகக் கவனித்துக் கொள்ளும்படி அமிருத்பாய் அவர்களைக் கேட்டுக் கொண்டாள்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம், அம்மா. அவளை நன்றாகக் கவனித்துக் கொள்கிறோம்" என்றாள் மேட்ரன்.

மேட்ரன் கூறியதைக் கேட்டதும் அமிருத்பாய், "இந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம்கூட புத்தி சுவாதீனம் இல்லை. அவள் பக்கத்தில் யாராவது உட்கார்ந்துதான் அவளுக்கு ஊட்ட வேண்டும்" என்றாள். அமிருத்பாயின் குரல் நடுங்கியது. தொண்டை அடைத்துக் கொண்டது.

நர்ஸுகள் அருகில் வந்து அமிருத்பாய்க்கு ஆறுதல் கூறினர். "நீங்கள் வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள்; நாங்கள் எங்கள் கையினால் அவளுக்கு உணவு ஊட்டுகிறோம்" என்று உறுதி கூறினாள் ஒரு நர்ஸ்.

"அவளுக்கு ஸ்நானம் செய்யவோ, உடை உடுத்திக் கொள்ளவோ தெரியாது. இரவில் யாராவது அவளுக்கு அடிக்கடி போர்த்தி விடவேண்டும். இல்லாவிடில் ஜலதோஷம் பிடித்துவிடும்" என்று அமிருத்பாய் விம்மிக் கொண்டே சொன்னாள்.

"ஒவ்வொரு நாளும் இரவில் நாங்கள் நாலு ஐந்து தடவை போய் ஒவ்வொருவரையும் கவனித்துக் கொள்வது வழக்கம்."

"விளக்குகள் எரிந்தால் என் மகளுக்குத் தூக்கம் வராது"

"அவள் தூங்கும்போது விளக்கை அணைத்து விடுகிறோம்."

"மற்றவர்கள் அவளை அடித்து இம்சை செய்யாமல் பார்த்துக் கொள்வீர்களா!"

"ஒவ்வொருவருக்கும் தனியாகப் படுக்கை யறை இருக்கிறது. நீங்கள் கவலைப்பட வேண்டாம்."

இவ்விதம் அமிருத்பாய் கூறியதற்கெல்லாம் நர்ஸ் அலுத்துக் கொள்ளாமல் பதிலளித்தாள்.

சித்த சுவாதீன மற்றவர்களின் உறவினர் விடை பெற்றுக்கொண்டு சென்ற பின், நோயாளிகளை ஆஸ்பத்திரிக்குள் விடுவதற்காக உள் கதவை மெதுவாகத் திறப்பார்கள். அவ்வாறு ஒரு தடவை திறந்தபோது, அமிருத்பாய் சட்டென்று திரும்பி உள்ளே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக எட்டிப் பார்த்தாள்.

அப்போது உள்ளே மூன்று நான்கு பெண்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களுடைய உடைகளிலிருந்த அழுக்கைச் சொல்லி முடியாது. அவர்களுடைய தலைமயிர் அலங்கோலமாக விரிந்து கிடந்தது.

அவர்களில் ஒருத்தி அமிருத்பாயை வெறுப்புடன் எரித்து விடுபவள்போல் பார்த்தாள். அவளுடைய வக்கிரமான பார்வை அமிருத்பாயை நடுங்கும்படி செய்து விட்டது.

பைத்தியம் பிடித்தவர்கள் அறைக்குள் எவ்வாறு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமிருத்பாய் பார்க்க விரும்பினாள்.

"எங்கள் மங்குவை எந்த அறையில் வைக்கப் போகிறீர்களோ, அந்த அறையை எனக்குக் காட்டுகிறீர்களா!" என்று நர்ஸைக் கேட்டாள்.

"ஆஸ்பத்திரிக்குள் நாங்கள் யாரையும் விடுவதில்லை, அம்மா. இது ஆஸ்பத்திரிச் சட்டம்" என்று நர்ஸ் கூறியது அமிருத்பாய்க்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

• • •

மங்குவுக்கு ஆஸ்பத்திரியும் அதன் சூழ்நிலையும் விசித்திரமான ஒரு புதிய உலகத்தைப் போல் தோன்றியது. மங்குவின் தலையை அமிருத்பாய் அன்புடன் தடவிக் கொடுத்த போது, மங்கு அவளை இறுகத் தழுவிக் கொண்டாள்.

வழக்கம்போல் "கண்ணே" என்று சொல்லக்கூட அமிருத்பாய்க்கு நாக்கு எழவில்லை. அவளுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. அவள் நீண்ட நேரம் விம்மி விம்மி அழுதாள். அமிருத்பாயின் மகனுக்கும் துக்கத்தை அடக்க முடியவில்லை. அவனும் விம்மினான். மேற்படி ஆஸ்பத்திரியில் இத்தகைய காட்சி நிகழ்வது சகஜமெனினும், அமிருத்பாயின் சோகத்தைக் கண்டு நர்ஸுகள்கூட மனம் உருகிவிட்டனர். சித்த சுவாதீனமற்ற தன் குழந்தையிடம் இவ்விதம் எல்லையற்ற பாசம் வைத்துள்ள தாயை அவர்கள் இதுவரையில் கண்டதில்லை.

இத்தகைய சோகமான கட்டத்தை எவ்வளவு நேரம் நீடிக்க விடுவது! இந்தச் சந்தர்ப்பத்தில் நர்ஸ் தன் கைக் குட்டையை எடுத்து விசிறிக் கொண்டே, "இது உனக்கு வேணுமா!" என்று அன்பு ததும்ப மங்குவைப் பார்த்துக் கேட்டாள்.

அவ்வளவுதான்! மங்கு தன் தாயாரை விட்டு, நர்ஸிடமிருந்த கைக் குட்டையைப் பிடுங்கிக் கொள்வதற்காக ஓடி வந்தாள். நர்ஸும் அதுதான் சமயம் என்று எண்ணி அதை அவளிடம்

கொடுத்தாள். அன்புடன் மங்குவின் முதுகைத் தட்டிக் கொடுத்து, "நீ என்னுடன் இங்கேயே இருக்கிறாயா! நான் உனக்கு நிறைய பட்சணங்கள் தருகிறேன்" என்றாள்.

கனிவுடன் நர்ஸ் கூறிய வார்த்தைகளைக் கேட்ட மங்கு அவளையே உற்றுப் பார்க்கலானான். அந்தப் பார்வையிலிருந்து மங்குவை உள்ளே அழைத்துச் செல்ல அதுதான் சரியான சமயம் என்பது நர்ஸுக்குத் தெரிந்துவிட்டது.

"உள்ளே வா, உனக்குத் தின்பண்டம் தருகிறேன்" என்று மங்குவின் கையைப் பிடித்துக் கொண்டு நர்ஸ் கூறினாள்.

ஆஸ்பத்திரியின் கதவு சிறிதளவு திறந்தது. மங்கு உள்ளே சென்றான். கதவு மீண்டும் மூடிக் கொண்டது. மங்கு மறைந்தான்!

* * *

மங்கு உள்ளே சென்று மறைந்ததும் அமிருத்பாய் "மங்கு! என் கண்ணே!" என்று பயங்கரமாக அலறினாள். அந்த அலறல் அவளுடைய பரிவார்ந்த உள்ளத்தையும் மனோ வேதனையையும் உலகத்துக்குப் பறை சாற்றியது!

அமிருத்பாயின் நிலையைக் கண்டு டாக்டர் இரக்கம் கொண்டார். அவளுடைய புதல்வரைச் சுட்டிக் காட்டி, "அம்மா, என்னையும் உங்களுடைய பிள்ளை போல எண்ணிக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய மகனை ஆஸ்பத்திரியில் விட்டுச் செல்லவில்லை. உங்களுடைய பிள்ளையிடம் விட்டுச் செல்வதாக நினைத்துக் கொள்ளுங்கள்" என்றார் பரிவுடன்.

வபதான மேட்ரனும் அமிருத்பாய்க்கு ஆறுதல் கூறினாள். மேட்ரன் பல வருஷங்களுக்கு முன் தன் கணவனை இழந்ததும் ஆஸ்பத்திரியில் சேர்ந்தவள். "இதுவரையில் நீங்கள்தான் மங்குவுக்குத் தாயாக இருந்தீர்கள். இனி நான்தான் அவனுக்குத் தாயார்" என்று மேட்ரன் அமிருத்பாயிடம் கூறினாள்.

"வாயில்லாத ஜீவன்களுக்கு இருக்கும் அறிவு கூட என் குழந்தைக்கு இல்லை. இது வரையில் அவன் என்னை விட்டுப் பிரிந்ததே இல்லை" என்று அமிருத்பாய் விம்மலுக் கிடையே அங்கலாய்த்தாள்.

"குலாமா இங்கு வந்த பின் குணமடைந்தான். அது போலவே மங்குவும்..." இதற்கு மேல் அமிருத்பாயால் பேச முடியவில்லை. மீண்டும் கண்ணீர் பெருகியது.

"மங்குவும் சீக்கிரம் குணமடைந்து வீட்டுக்குத் திரும்பி வந்து விடுவான்" என்று மேட்ரன் அமிருத்பாய்க்கு உறுதி கூறினாள்.

கதவு மூடப்பட்டிருந்தும் கூட உள்ளே இருக்கும் மங்குவைக் கதவின் வழியாக ஊடுருவிப் பார்ப்பவள் போல அமிருத்பாய் பார்த்தாள். "அவன் ரொட்டி மாத்திரம் சாப்பிட மாட்டான். பாலில் ரொட்டியைத் தோய்த்துக் கொண்டு சாப்பிட்டால்தான் அவனுக்குப் பிடிக்கும். நீங்கள் அவனுக்குப் பால் கொடுக்கா விட்டால், 'குப்'பாவது கொடுங்கள்" என்று அமிருத்பாய் கெஞ்சினாள்.

அமிருத்பாயின் பரிதாப நிலையைப் பார்க்க மேட்ரனுக்குச் சகிக்க முடியவில்லை. "அப்



பிரமிக்க வைத்தார்!

வங்காளத்திலே 1910-ம் வருஷத்தில் பயங்கரவாதிகளின் இயக்கம் மும்முரமாக இருந்தது. குறிப்பாகப் பிரிட்டிஷ் உயர்தர அதிகாரிகள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த அதிகாரிகளில் ஒருவர், அப்போது முதன் முதலாக உத்தியோகத்தில் அமர்ந்த ஓர் இந்திய இளைஞருக்குப் புத்திமதி கூறினர். "நம்மையெல்லாம் பயங்கரவாதிகள் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் கைத்துப்பாக்கி இல்லாமல் வெளியில் புறப்படாதீர்" என்று சொன்னர். அந்த இளைஞர் அவருக்கு நன்றி கூறினர். ஆனல் துப்பாக்கியைத் தொட மறுத்து விட்டார். அந்த



பி. என். ராவ்

இளைஞர்தான் இன்று சிறந்த சர்வதேச ராஜ தந்திரிகளில் ஒருவராகவும் சமாதானவாதியாகவும் திகழும் ஸ்ரீ பெனகல் நரசிங்கராவ். இந்தியாவின் தூதர்களாக வெளி நாடுகளுக்குச் சென்றுள்ள பிரதிநிதிகளுள் அக்ர ஸ்தானத்தை வகிக்கும் ஸ்ரீ பி. என். ராவ் உலக அரசியல் சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்த மகா மேதாவி. இந்திய அரசியல் நிர்ணய மகாசபை ஆரம்பமானபோது, உலக அரங்கத்தில் முக்கிய ஸ்தானத்தை வகிக்கும் நாடுகளின் அரசியல் திட்டங்களைச் சாரமாகக் கொடுக்கும்படி மேற்படி சபைத்தலைவராக இருந்த பாபு ராஜேந்திரர் ஸ்ரீ ராவைக் கேட்டுக் கொண்டார். அவ்வாறு தயாரிப்பதற்குச் சில மாதங்களாவது செல்லும் என்று கருதப்பட்டது. ஆனல் ஸ்ரீ பி. என். ராவ் நாலே நாளில் மேற்படி திட்டங்கள் அடங்கிய ஓர் அரிய நூலைத் தயாரித்துக் கொடுத்ததைக் கண்டு எல்லோரும் பிரமித்துப் போனர்கள்.

சரித்திரப் புதுமை!

ஆகாகானின் அருமை மகன் அலிகான், உலகப் பிரசித்திபெற்ற சினிமா நடிகையான ரீடா ஹேவொர்த்தை விவாகம் செய்து கொண்டார். அவர்களுக்கு ஒன்றரை வயதில் பெண் குழந்தை இருக்கிறது. இப்போது ரீடா ஹேவொர்த் விவாக ரத்து வழக்குத் தொடர்ந்திருக்கிறள். தனக்கென்று பிரத்தியேகமாக ஜீவனும்சத் தொகை எதுவும் கொடுக்கவேண்டாம் என்றும், அந்தக் குழந்தையின் பராமரிப்புக்காக ஒன்றரைக் கோடி



ரீடா ஹேவொர்த்

ரூபாய் கொடுத்தால் போதும் என்று கோரியிருக்கிறள். இதைத் தவிர பாரிசிலுள்ள மாளிகை, ரேஸ் குதிரைகள், விலைமதிக்க முடியாத ஓவியங்கள், மோட்டார், கல்யாணப் பரிசுகள் முதலியவற்றை மாத்திரம் அவளுக்குக் கொடுத்தால் போதும் என்றும் அவளுடைய வக்கீல் கூறுகிறர். மேற்படி சாதனங்கள் எத்தனை கோடி இருக்குமோ! வழக்கில் ரீடா ஹேவொர்த் வெற்றிபெற்றல், அமெரிக்காவின் சரித்திரத்திலேயே ஓர் அமெரிக்கர் வெளிநாட்டினரிடமிருந்து பணத்தை அமெரிக்காவுக்குக் கொண்டு வருவது இதுதான் முதல் தடவையாகும் என்று அமெரிக்கப் பத்திரிகைகள் குதூகலம் அடைகின்றன!

படியே கொடுக்கிறோம்" என்று மாத்திரம் சொல்லி வைத்தாள்.

"தயிர் என்றல் மங்குவுக்கு மிகவும் பிரியம். தினந்தோறும் அவளுக்கு நீங்கள் தயிர் கொடுக்கா விட்டாலும் ஒவ்வொரு நாள் வட்டமாவது கொடுக்கிறீர்களா! அதனல் ஏற்படும் அதிகச் செலவை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். மங்குவைக் கவனித்துக் கொள்வோருக்குப் பிரத்தியேகமாக வெகுமதியும் தருகிறோம்" என்று அமிருதம்பாய் மன்றடினள்.

* * *

அவர்கள் ஆஸ்பத்திரியி லிருந்து புறப்பட்டுச் சென்றனர். அமிருதம்பாயும் அவளுடைய மகனும் வெகு நேரம் வரையில் ஒருவருக் கொருவர் பேசிக் கொள்ளவில்லை. இருவரும் சோக சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தனர்.

வெளியில் நின்று கொண்டிருந்த வாடகை வண்டியில் இருவரும் ஏறிக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனை அடைந்தனர். அமிருதம்பாயும் அவளுடைய மகனும் ரயில் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். ஒரு விநாடி கூட மங்குவின் ஞாபகம் அமிருதம்பாயின் மனதை விட்டு அகலவில்லை. அவளுடைய மனதில் சிந்தனை அலைகள் ஒன்றின் மீது ஒன்றக மோதிக் கொண்டிருந்தன.

ஆஸ்பத்திரியில் மங்குவுக்குப் படுத்துக்கொள்ள கட்டில் கொடுக்கிறர்களா, என்னவோ! அந்தக் குழந்தைக்குத் தரையில் படுத்துக் கொண்டால் தூக்கமே வராதே.

அமிருதம்பாயை அதிகாரிகள் ஆஸ்பத்திரிக்குள் செல்ல அனுமதித்திருந்தால் அவள் எல்லாவற்றையும் நேரில் பார்த்துத் தன்னைத்தானே திருப்தி செய்து கொண்டிருப்பாள்.

இருந்தாலும் நர்ஸுகள் அன்புடனும் ஆதரவுடனும் இருப்பதை நேரில் பார்த்ததால் அவளுக்கு ஓரளவு திருப்தி ஏற்பட்டது. எனினும் தன்னை உள்ளே விடாததைக் குறித்து அமிருதம்பாய்க்கு வருத்தமும் சந்தேகமும் உண்டாயின. உள்ளே இருப்பவர்கள் சந்தோஷமாக இருக்க முடியாது. இல்லாவிட்டால் ஆஸ்பத்திரி அதிகாரிகள் ஏன் அவ்வித விசித்திர விதிகளை ஏற்படுத்தியிருக்கிறர்கள்! உறவினர்களை உள்ளே விட்டால் என்ன முழுகிப் போய்விடும்?

அரைகுறையாகத் திறந்திருந்த கதவின் வழியாக அமிருதம்பாய் உள்ளே கண்ட காட்சி அவளுடைய சந்தேகத்தை உறுதிப்படுத்தியது. அவளுடைய கற்பனைக் கண் முன்னல் பல காட்சிகள் தோன்றின. மங்கு தன்னைப் பார்க்க வேண்டும் என்று அலறுவது போல் அவளுக்குத் தோன்றியது!

அவ்வளவுதான்! அமிருத்பாயினால் கண்ணீர் பெருகுவதைத் தடுக்க முடியவில்லை. வண்டியி லிருந்த மற்றப் பெண்கள் அவள் அழுவதைப் பார்த்து, "அம்மா! ஏன் இப்படி நெஞ்சு வெடித்துவிடும் போல் அழுகிறீர்கள்! உங்கள் குடும்பத்தில் யாராவது இறந்து விட்டார் களா!" என்று கேட்டார்கள்.

அமிருத்பாயும் அவளுடைய மகனும் இரவு நேரம் கழித்து வீடு போய்ச் சேர்ந்தனர். அடுத்த வீட்டுப் பெண் சமையல் செய்து வைத்துக்கொண்டு அவர்களுடைய வருகைக் காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், அவ்விருவரும் எதுவும் சாப்பிட மறுத்து விட்டார்கள். அவர்களுடைய துக் கத்தை அறிந்த அந்தப் பெண்ணும் அவர்களை வற்புறுத்தவில்லை.

அமிருத்பாயின் மனதில் மட்டும் மங்குவைப் பற்றிய சிந்தனைகளே சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தன.

மங்கு தன் அருகில் உட்கார்ந்திருப்பது போல் நினைத்துக் கொண்டு அமிருத்பாய் என்ன வெல்லாமோ பிதற்றத் தொடங்கினாள்.

"கண்ணே! படுக்கையை விட்டுத் தரையில் விழுந்து விடாதே. போர்வையைச் சரியாகப் போட்டுக் கொள். உணவைச் சாப்பிடாமல், எறிந்து விடாதே."

மங்கு எப்போதுமே அமிருத்பாய் சொன்ன தைக் கேட்பதில்லை. மங்கு ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வரையில் இருவரும் ஒரே படுக்கை யில் படுத்துக் கொள்வது வழக்கம். அப்போது அமிருத்பாய் அடிக்கடி விழித்துக் கொண்டு மங்குவைப் பார்த்துக் கொள்வாள்.

ஆனால் இன்றோ படுக்கையில் தனியாகப் படுத்துக்கொண்டிருந்ததால் அமிருத்பாய்க்குத் தூக்கமே வரவில்லை. 'மங்குவும் தூங்காமல் விழித்துக் கொண்டிருப்பாள்; தனியாக இருப் பதைச் சகியாமல் என்னைத் தேடுவாள்' என்று அமிருத்பாய் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு விம்மி அழுதாள்.

அமிருத்பாயின் மகனும் மற்றொரு அறையில் தூங்காமல் விழித்தபடியே படுத்திருந்தான். அமிருத் பாயைப் போல் அவனுக்கு மங்குவின் மீது அதிக பாசம் எதுவுமில்லை. இருந்தாலும் அவனும் மனோ வேதனையினால் துடித்தான்.

தன் தாயார் விம்மி விம்மி அழுவதைக் கேட்க அவனால் சகிக்க முடியவில்லை. அவனும் அழுது கொண்டிருந்தான்.

தன் தாயாரின் துக்கத்தை அப்போதுதான் அவனால் உணர முடிந்தது.

"எனக்கே இவ்வளவு வேதனையாக இருக் கும்போது, பாவம்! அவளைப் பத்து மாதம் சுமந்து பெற்ற அம்மா என்ன பாடு படுவாள்! அவளுடைய துக்கத்துக்கும் வேதனைக்கும் பரி காரம் தேடிவிட்டு மறு காரியம் பார்க்கிறேன். இல்லாவிடில் இந்த உலகத்தில் நான் இருந்து என்ன பயன்? அவள் வேதனையைத் தீர்க்கா விடில் என் வாழ்க்கையே வியர்த்தமாகிவிடும்."

இவ்வாறு அவன் தனக்குத்தானே சொல் லிக் கொண்டான். திடீரென்று ஏதோ உறுதி செய்து கொண்டவன் போல் கட்டிலை விட்டு எழுந்து உட்கார்ந்தான்.

"என் உடலில் உயிர் இருக்குமளவும் நான் மங்குவைப் பராமரித்துக் காப்பாற்றப் போகி றேன். அவளுக்கு வேண்டியதைச் செய்ய என் மனைவி மறுத்தால், நானே மங்குவைக் கவ னித்துக் கொள்ளுகிறேன்."

இவ்விதம் அவன் தனக்குள்ளே சபதம் செய்து கொண்டு படுத்த பின்தான் அவனுக்கு மன நிம்மதி ஏற்பட்டது; துக்கம் மறைந்து தூக்கமும் வந்தது.

அவன் தாயாரின் விம்மல் சத்தம் நின்றிருந்த தால் அவள் தூங்கி விட்டதாக எண்ணினான். இல்லாவிடில் அவன் எழுந்து சென்று தான் செய்து கொண்டுள்ள பிரதிக்ஞையைத் தெரி வித்து அவளுக்கு ஆறுதல் கூறியிருப்பான்.

காலையில் எழுந்த உடனே முதல் காரியமாக அதை அவளிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தான். அப்படியே தூங்கி விட்டான்.

*　　　*　　　*

பொழுது விடிந்தது. கிராம ஜனங்கள் தத்தம் வேலைகளைக் கவனிப்பதற்காக எழுந் தனர். பால்காரிகள், தயிர்க்காரிகள் எல்லோ ரும் கூவ ஆரம்பித்தார்கள்.

அந்தச் சமயம் அமிருத்பாய் தெரு முழுதும் அதிரும்படியாக வீறிட்டுக் கத்தினாள். "ஐயோ! வாருங்கள்; ஓடி வாருங்கள்; என் அருமை மங்குவை அவர்கள் கொன்று விட்டார்களே, பாவிகள்" என்று கூக்குரலிட்டாள்.

அமிருத்பாயின் மகன் கட்டிலிலிருந்து குதித்து ஓடி வந்தான். அண்டை வீட்டுக் காரர்கள் பரபரப்புடன் ஓடி வந்தனர். பால் காரிகளும் தயிர்க்காரிகளும் பயந்துகொண்டு ஓடோடியும் வந்தார்கள்.

அமிருத் பாயைப் பார்த்ததும் அவர்கள் ஒன்றுமே தோன்றாமல் அப்படியே திக்பிரமை பிடித்தவர்கள் போல் நின்று விட்டனர்.

அமிருத்பாய்க்குப் பைத்தியம் பிடித்து விட் டது! அவளுடைய மகள் மங்குவைப் பிடித் திருந்த சித்தப் பிரமை என்ற பேய் அமிருத் பாயையும் ஆட்கொண்டு விட்டது!



"நான் சொன்னபடியே கதவுகளை யெல்லாம் திறந்து வைத்துக் கொண்டு தூங்கினீர்களோ? அப் படியானால் ஜலதோஷம் போயி ருக்க வேண்டுமே!"

"டாக்டர், நீங்கள் சொன்ன படியே செய்தேன். ஜல தோஷம் போக வில்லை. வீட்டிலிருக்கும் சாமான்கள் எல்லாம் திருட்டுப் போய் விட்டன!"



அந்தக் கிழவி மாத்திரம் தன்னந் தனியாக அந்தக் குடிசையில் இருந்தாள். அவளுக்கு உறவினர்களோ நண்பர்களோ ஒருவர் கூடக் கிடையாது.

அவள் குடிசைக்குச் சமீபமாக ஒரு நந்தவனம் இருந்தது. அது அந்த ஊரிலிருந்த ஒரு பெரிய பிரபுவுக்குச் சொந்தமானது. அந்த நந்தவனத்தில் மல்லிகை, முல்லை, ரோஜா, சம்பங்கி முதலிய மணம் வீசும் மலர்ச் செடிகளும் கொடிகளுமாக நிறைந்திருந்தன. காலை வேளையில் நந்தவனத்துப் பக்கமாகப் போனால் மலர்களெல்லாம் மலர்ந்து கஙீர் என்று சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

அந்தப் பிரபு கிழவியிடம் இரக்கம் கொண்டு தமது நந்தவனத்தில் இலவசமாக மலர் கொய்து கடையில் விற்பனை செய்ய இடம் கொடுத்திருந்தார். கிழவி தினந்தோறும் மலர் கொய்து, கடைத் தெருவுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து பிழைத்து வந்தாள்.

நந்தவனத்தில் மலர் கொய்யும்போதெல்லாம், "நான் குடிசையில் இருந்து கொண்டு எவ்வளவு கஷ்டப்படுகிறேன்? எனக்கு ஒரு நல்ல வீடு இருந்தால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்!" என்று வாய்விட்டுக் கூறிப் புலம்புவாள்.

ஒருநாள் கிழவி வழக்கம்போலப் புலம்பியதும், "பாட்டி, பயப்படாதே! உன் விருப்பம் கூடிய சீக்கிரம் நிறைவேறும்!" என்று ஒரு இனிமையான குரலில் யாரோ பதில் சொன்னார்கள்.

கிழவிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அவளையும் அந்த மலர்ச் செடிகளையும் தவிர அங்கே வேறு யாரும் இல்லை என்பது அவளுக்கு நிச்சயமாய்த் தெரியும். அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரு பருத்த மூங்கிலைச் சுற்றி வளைந்து கொண்டிருந்த சம்பங்கிக் கொடியிலிருந்து, கொடியைப் போலவே அசைந்து ஆடிக்கொண்டு அழகான பெண்மணி ஒருத்தி வந்து கிழவியின் எதிரே நின்றாள்.

கிழவியின் ஆச்சரியம் எல்லை மீறிப் போய் விட்டது. அவளுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை.

"பாட்டி, என்னை உனக்குத் தெரியவில்லையா? நான் இந்த நந்தவனத்துத் தேவதை! நீ ரொம்ப நாட்களாகக் காலை வேளையில் மலர் கொய்து கொண்டே புலம்புவதைக் கேட்க எனக்குப் பரிதாபமாயிருந்தது. இன்று உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து விட்டேன்; உன் வீட்டுக்குப் போய்ப் பார்!" என்று கூறி விட்டு தேவதை மறுபடியும் சம்பங்கிக் கொடியில் மறைந்து விட்டாள்.

கிழவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஓட்டமும் நடையுமாகத் தன் குடிசை அருகே சென்று பார்த்தாள்.

என்ன இது! குடிசையைக் காணோம்! அதற்குப் பதிலாக ஒரு அழகான வீடு அல்லவோ இருக்கிறது!

ஒரு மாத காலம் கிழவி மிகவும் ஆனந்தமாகக் காலம் கழித்தாள். நந்தவனத்தில் போய் வழக்கம்போல் புலம்புவதையும் நிறுத்தி விட்டாள். மன நிம்மதியோடு பூ வியாபாரம் செய்து வந்தாள்.

ஒரு மாதம், இரண்டு மாதம் மூன்று மாதங்கள் ஆயின.

நாலாவது மாதம் வந்ததும் கிழவியின் மனத்தில் பழையபடி அதிருப்தி தலையெடுத்தது. மறுபடியும் முன்மாதிரியே நந்தவனத்தில் புலம்ப ஆரம்பித்தாள். ஆனால் முன்பு புலம்பியதற்கும் இப்போது புலம்புவதற்கும் வித்தியாசம் இருந்தது. முன்பு நல்ல வீடாக ஒன்று இல்லையே என்றுதான் கிழவி புலம்பிக் கொண்டிருந்தாள். இப்பொழுது, "வீட்டில் தனியாக இருக்கவேண்டியிருக்கிறதே! ஒரு சின்னப் பெண் இருந்தால் வீட்டில் பேசத் துணையாக இருக்குமே! வீட்டு வேலை

களை யெல்லாம் அந்தப் பெண் கவனித்துக் கொள்ளுமே!" என்று புலம்பினாள்.

மீண்டும் அன்று நந்தவனத்தில் அந்தத் தேவதை வந்தது.

"பாட்டி, கவலைப்படாதே! இப்போது வீட்டுக்குப் போய்ப் பார். உன் விருப்பம் போல ஒரு சின்னப் பெண் உனக்காகக் காத்திருப்பாள்!" என்று கூறி விட்டுத் தேவதை மறுபடியும் சம்பங்கிக் கொடியில் மறைந்தாள்.

கிழவி, கடைக்குச் சென்று புஷ்பங்களை விற்றுவிட்டு, ஆவலோடு ஓடோடியும் வீட்டுக்குப் போனாள்.

தேவதை சொன்னபடியே, கிழவியின் வீட்டு வாசலிலேயே ஒரு அழகான பெண் நின்று கொண்டிருந்தாள். பட்டுப் பாவாடையும் பட்டுச் சட்டையும் அணிந்திருந்த அந்தப் பெண் தங்க ஒட்டியாணமும் அணிந்திருந்தாள்.

கிழவியைக் கண்டதும் அந்தப் பெண், "பாட்டி, பாட்டி! உனக்காக எத்தனை நேரம் காத்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?" என்று கேட்டு ஓடி வந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

கிழவிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அந்தப் பெண் வீட்டு வேலைகளை யெல்லாம் கவனித்துக் கொண்டாள். கிழவிக்கு இப்போது வேலையே யில்லை. நந்தவனத்துக்குச் சென்று பூ எடுத்து வருவாள் கிழவி. அந்தப் புஷ்பங்களை யெல்லாம் சரங்களாகத் தொடுத்து வைப்பாள் சின்னப் பெண். அந்தச் சரங்களைக் கடைக்கு எடுத்துச் சென்று விற்றுக் கொண்டு வருவாள் கிழவி. அதற்குள் வாய்க்கு ருசியான சாப்பாடு தயாரித்து வைப்பாள் சின்னப் பெண். இப்படி அவளுடைய வாழ்க்கை சுகமாக நடந்து கொண்டிருந்தது.

ஒரு மாதம், இரண்டு மாதம் மூன்று மாதங்கள் ஆயின.

நாலாவது மாதம் வந்தது. கிழவியின் மனத்தில் மீண்டும் அதிருப்தி தலை காட்டியது.

வழக்கம் போல் நந்தவனத்துக்குச் சென்றாள் கிழவி ஆனால் அவள் மனத்தில் சொல்லி முடியாத வெறுப்பு குடி கொண்டிருந்தது.

கிழவி சம்பங்கிக் கொடியின் அருகே போனதும், "உம், என்ன வேண்டிக் கிடக்கிறது இந்த உலகத்தில்? வீடு கிடைத்தது! என்னைக் கவனித்துக் கொள்ள ஒரு பெண்ணும் கிடைத்தாள். பூவும் இப்போதெல்லாம் நன்றாய் வியாபாரம் ஆகிறது! ஆனாலும் என்ன? எனக்குச் சொந்தமாக இதைப் போல் ஒரு நந்தவனம் இருந்தால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்! அது எங்கே கிடைக்கப் போகிறது!" என்று கூறி மிகவும் அலுப்போடு வாய் விட்டுப் புலம்பினாள்.

உடனே சம்பங்கிக் கொடியிலிருந்து அந்தத் தேவதை அவள் முன்பு தோன்றினாள்.

"பாட்டி, இன்னும் உனக்குத் திருப்தி ஏற்படவில்லையா? சரி. போகட்டும். இப்போது உன் விருப்பப்படி நீ நந்தவனத்தைக் காண்பாய்!" என்று கூறிவிட்டுத் தேவதை மறுபடியும் சம்பங்கிக் கொடியில் மறைந்தாள்.

கிழவி வீட்டுக்கு வந்தாள். வெறும் பாழாய்க் கிடந்த அவளுடைய வீட்டுக்குப் பின்னால் பெரிய நந்தவனம் உண்டாகியிருந்தது. கிழவிக்கு ஒன்றுமே புரியவில்லை. அது தன் வீடுதானா? அல்லது



அழுகையும் சிரிப்பும்!



தம்பி, இவர் முகம் இப்படியிருக்கிறதே என்று யோசிக்கிறாயா? கோடு போட்ட இடத்தில் ஒரு பாதி முகத்தை மறைத்துக் கொண்டு பார். எப்படியிருக்கிறது? பிறகு மறு பாதியை மறைத்துக் கொண்டு பார்! இப்போது எப்படி இருக்கிறது?

தவறிப் போய் வேறு யார் வீட்டுக்காவது வந்து விட்டோமா என்று, கொஞ்ச நேரம் யோசித்தாள்.

கிழவி வீட்டு வாசலில் நின்று கொண்டு யோசனையில் ஆழ்ந்திருப்பதைப் பார்த்த சின்னப் பெண், "பாட்டி, பாட்டி! ஏன் தயங்கி நிற்கிறாய்? இது உன் வீடு தான்! உள்ளே வா! நந்தவனத்தைப் பார்த்தாயா? இனி மேல் உனக்குக் கஷ்டமேயில்லை. இன்னொருவர் தயவுக்குக் காத்திருக்க வேண்டாம். வேண்டிய மட்டும் உன் தோட்டத்தில் பூப்பறித்து விற்றுக் கொண்டு வரலாம்!" என்று சொன்னாள்.

கிழவிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. வீட்டுக்குள்ளே சென்றதும் நேரே நந்தவனத்துக்குச் சென்று பார்த்தாள். விதம் விதமான பூக்கள்! மல்லிகையும் முல்லையும், குண்டு மல்லிகையும், ரோஜாவும் பூத்துக் குலுங்கிக் கண்ணைப் பறித்தன.

இப்போது கிழவி ரொம்பவும் சௌக்கியமாயிருந்தாள். அவள் வீட்டுத் தோட்டத்திலேயே அவளுக்கு ஏராளமாகப் பூ கிடைத்தபடியினால் யாருடைய தயவுக்கும் காத்துக் கொண்டிராமல், அவள் வேண்டிய மட்டும் பூப்பறித்து, கடைக்கு ஆள் தலையில் வைத்து எடுத்துச் சென்று அங்கே வியாபாரம் செய்தாள். வியாபாரத்தில் அவளுக்குக் கைநிறையப் பணம் கிடைத்தது.

ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதங்கள் சென்றன.

மறுபடியும் கிழவிக்கு அதிருப்தி உண்டாகி விட்டது. வழக்கம் போலப் பூப் பறிக்கச் சென்றாள் நந்தவனத்துக்கு.

"ஆமா, வீடும் வாசலும் இருந்து விட்டால் போதுமா? பேச்சுத் துணைக்கும் உதவிக்கும் ஒரு பெண் இருந்தால் போதுமா? இன்னும் என் நிலைமை அபிவிருத்தி அடையவில்லையே! இன்னும் நான் பூப்பறித்துக் கடைக்கு எடுத்துச் சென்று விற்றுத் தானே சம்பாதிக்க வேண்டியிருக்கிறது? ஜனங்கள் தாங்களாகவே என் வீட்டைத் தேடி வந்து பூ வாங்கிக் கொண்டு போக வேண்டும். பணம் வந்து குவிய வேண்டும். உம், அது எங்கே நடக்கப் போகிறது!" என்று புலம்பினாள் கிழவி.

சம்பங்கிக் கொடியிலிருந்து தேவதை வெளிப்பட்டாள். ஆனால் எப்போதும் போல் அவள் முகத்தில் புன்னகை தவழவில்லை. கோபம் கொதித்தது.

"ஏ கிழவி, உன் பேராசைக்கு எல்லையே கிடையாதா? வீடு வேண்டும் என்றாய், பெண் வேண்டும் என்றாய், தோட்டம் வேண்டும் என்றாய், உன் விருப்பம் போல் எல்லாம் கிடைத்தது. உனக்கு இன்னும் திருப்தி ஏற்படவில்லையே! போ!" என்று கோபத்தோடு கூறிவிட்டுத் தேவதை மறுபடியும் சம்பங்கிக் கொடியில் மறைந்து விட்டாள்.

அடுத்த நிமிஷம் வீடு, நந்தவனம், சின்னப் பெண் எல்லாம் மறைந்து போய்விட்டன. கிழவி 'கோ' வென்று கதறி விட்டாள். அவளுக்குத் தான் முன்பு இருந்த நிலையை யடைந்தால் போதும், என்று ஆகிவிட்டது.

அந்தச் சின்னப் பெண் மறுபடியும் அவள் முன் தோன்றினாள்.

"பாட்டி, பாட்டி! கவலைப்படாதே! உன் வீடும் தோட்டமும் இதோ வந்து விட்டன பார்! இனிப் பேராசைப் படாதே!" என்றாள்.

உணர்வு இழந்து கிடந்த கிழவி சட்டென்று விழித்துக் கொண்டாள். வீடும் தோட்டமும் வந்து விட்டன. சின்னப் பெண் மறைந்து விட்டாள்.

கிழவி அப்புறம் முன்போல் இல்லை. மனத்திருப்தியோடு பிறருக்கும் உபகாரம் செய்து கொண்டு வாழ்ந்தாள்.



குரங்குக் குட்டிகள்!


சீமா இரண்டு குரங்குக் குட்டிகளைப் பிரியமாக வளர்த்து வந்தான். பல வகைகளில் குட்டிகளை ஆட்டி வைக்க முயன்றான். ஆனால் அதன் பிரகாரம் இவன் தான் ஆடினானே தவிர அவை ஆடவில்லை. ஒரு நாள் குரங்குக் குட்டிகளைக் குளிப்பாட்ட வேண்டும் என்று பெரிய வாளியில் தண்ணீர் நிரப்பி அவைகளைப் பிடித்து வந்தான். ஆனால் அவன் கையிலிருந்து இரண்டும் தப்பி ஓடி விட்டன. சீமா அவைகளைத் துரத்திக் கொண்டு ஓடினான். குட்டிகள் ஒரு மரத்தின்மீது ஏறிக்கொண்டு விட்டன. மரத்திற்கு அடுத்தாற் போல் மிருகக் காட்சிச்சாலை இருந்தது. அங்கிருந்து தப்பித்துக் கொண்டு ஒரு நெருப்புக் கோழி வெளியே வந்து மரத்தினடியே சற்று நின்றது. "சபாஷ்! நாம் இந்த நெருப்புக் கோழியின் மேல் குதித்து விடலாம்!" என்று தீர்மானம் செய்து கொண்டு கோழியின் மேல் குதித்தன குரங்குகள். நெருப்புக் கோழி உடனே ஓட்டம் பிடித்தது.






சீமாவின் வீட்டின் பக்கம் ஓடி, தன் நீண்ட கழுத்தை வளைத்து, அங்கு குளிப்பாட்ட வைத்திருந்த வாளியில் தண்ணீர் குடிக்கக் குனிந்தது. வாளியின் கைப்பிடி அதன் கழுத்தில் விழுந்தது. நெருப்புக் கோழி 'சட்'டென்று நிமிர்ந்தது. வாளி அதன் கழுத்தில் மாட்டிக்கொண்ட படியால் கழுத்து மேலே போனவுடன் அவ்வளவு ஜலமும் மேலே உட்கார்ந்திருந்த குரங்குக் குட்டிகளின் மேல் கொட்டி, குட்டிகள் தொப்பலாக நனைந்து விட்டன. இதைப் பார்த்த சீமா, "சபாஷ்! நன்றாகக் குளித்து விட்டீர்களா? நெருப்புக் கோழியே, உன் உதவிக்கு வந்தனம்!" என்றான்.







மேஜரின் மனைவி

லக்ஷ்மி ராஜேந்திர சங்கர்

மேஜர் கிருஷ்ணன் தம் அறையில் உட்கார்ந்து அன்றைய தினப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். பலரைப் போல் அவரும் பத்திரிகையை மேலெழுந்த வாரியாகத்தான் பார்ப்பார். சில வேளைகளில் அது அன்றையப் பத்திரிகையா நேற்றையப் பத்திரிகையா என்பதைக்கூடக் கவனிக்க மாட்டார். 'ஸ்போர்ட்ஸ்' விளையாட்டுப் பக்கம் ஒன்றுதான் அவருடைய கவனத்தைக் கவரும். கிரிக்கெட், ஹாக்கி, முதலிய விளையாட்டுகளின் முடிவுகளைத் தவறாமல் படித்து விடுவார்.

அன்றையதினம் அவர் எதிர்பார்த்த கட்சி ஜயிக்காததால் பத்திரிகையை அலட்சியத்துடன் கீழே எறிந்தார். அதே சமயம் அவருடைய சகோதரி காமாட்சி அம்மாள் வீட்டு வேலைக்காரர்களிடம் ஏதோ கூச்சல் போட்டுச் சச்சரவு செய்து கொண்டிருந்தது அவர் காதில் தெளிவாக விழுந்தது.

இப்பொழுதெல்லாம் சகோதரியைக் கண்டாலே மேஜர் கிருஷ்ணனுக்குப் பயம்தான். "வேலைக்காரி வரவில்லை, தோட்டக்காரன் மாட்டைக் கவனிக்கவில்லை, கார் ஓடவில்லை, பெண்கள் சொன்னபடி கேட்கவில்லை, சமையற்காரி சாமான்களை விரயம் பண்ணுகிறாள்" என்று இந்தமாதிரியான நூறு வித குற்றம் குறைகளுடன் வந்து நிற்பாள். இதற்கெல்லாம் சமாதானம் சொல்லியாக வேண்டும். அதோடு நிற்காமல் "இந்த எழவெல்லாம் என் தலையில் சுமத்திவிட்டு அந்தக் கடன்காரி போய் விட்டாளே!" என்ற கடைசி பாணத்தையும் போடாமல் காமாட்சி அம்மாள் பேச்சை முடிப்பதே கிடையாது.

மேஜர் கிருஷ்ணன் பெரிய பணக்கார குடும்பத்தில் பிறந்தவர். ஒரே மகனானதால் செல்வத்திலும் செல்வாக்கிலும் வளர்ந்தவர். அவர் படித்துப் பட்டம் பெற்று டாக்டரானார். ஆனால் அவர் மனமும் கவனமும் கிரிக்கெட் முதலிய விளையாட்டுகளில் சென்றுவிட்டதினால் அவர் வேலைக்காகச் சிரமம் எடுத்துக் கொள்ளவேயில்லை. பரம்பரைப் பணக்காரர் ஆகலால் செலவு மட்டும் தாராளமாக நடந்து கொண்டு வந்தது. தந்தையும் தாயும் ஒருவர் பின் ஒருவராக காலமானபோது பிதிரார்ஜிதமாக ஒரு பெரிய மாளிகையும், பூமி காணியும் இருந்தன. அவருடைய உறவினர்களிலேயே அழகிலும் படிப்பிலும் சிறந்து விளங்கிய ஒரு பெண்மணியை மணந்து கொண்டிருந்தார். இரு கண்மணிகளைப்போல் இரண்டு பெண்களையும் பெற்றிருந்தார்.

இரண்டாவது மகா யுத்தத்திற்குச் சில மாதங்களுக்கு முன்பு அவருடைய அருமை மனைவி திடீரென்று காலமாகி விட்டாள். அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் அவர் யுத்தத்தில் சேர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார். அப்பொழுது பத்தும் எட்டும் வயதாகியிருந்த குழந்தைகளைத் தம் ஒன்று விட்ட சகோதரியிடம் ஒப்புவித்து விட்டுச் சென்றார்.

யுத்தம் முடிந்து திரும்பி வந்ததும் அவர் மனம் நிலை கொள்ளாமலிருந்ததால் மறுபடியும் சில காலம் ஊர் சுற்றிக்கொண்டேயிருந்தார். சில மாதங்களுக்கு முன்புதான் வீட்டில் வந்து தங்க ஆரம்பித்திருந்தார். அது அவசியமாகவும் போய்விட்டது.

அவருடைய வீடும், சொத்தும் பார்ப்பாரற்று மிகவும் ஈன நிலைமைக்கு வந்து விட்டிருந்தது. தேசத்தில் ஏற்பட்ட கலகங்கள், மழையில்லாமை, விலைவாசிகளின் ஏற்றம் முதலியவை காரணமாகக் குடிமக்கள் மிகவும் சிரமப்பட்டதினால் வருமானம் குறைந்து போயிருந்தது. தாய் தந்தையரின் காலத்திலிருந்து வழக்கமாக நடந்து வந்த செலவுகளுடன் பெண்களின் படிப்பும், நவநாகரிகமான வாழ்க்கை முறையும் சேர்ந்து, செலவினத்தைப் பெருக்கி அவரைக் கலக்கி விட்டிருந்தது.

முதலில் வீட்டுத் தொல்லைகளை ஏற்று நடத்த ஒரு வழி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தில் எழுந்தது. அவ்வெண்ணம் ஒவ்வொரு நாளும் அவர் உள்ளத்தில் வளர்ந்து உருவாகிக் கொண்டே வந்தது.

"உமக்கு அப்படி என்ன வயதாகிவிட்டது! முன் காலம்போல் சிறு பெண்களைத்தான் விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்பதில்லையே! எப்படி வேண்டுமானாலும் பெண்கள் கிடைப்பார்களே!" என்று மறு விவாகப் பிரச்னையை எழுப்பி ஊக்கமளித்து வந்தனர் அவருடைய கிரிக்கெட் தோழர்கள்.

ஆனாலும் மேஜர் கிருஷ்ணன் தமக்கு வயது வந்த பெண்களிருக்கிறார்கள், இனிமேல் தமக்குக் குழந்தை குட்டி என்ற தொந்தரவுகளே கூடாது, மறு மணம் செய்து கொள்வது வேடிக்கையாகும் என்று நினைத்து மறு விவாகம் செய்து கொள்ளாமலிருந்தார். பிறகு வீட்டுத் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகமாகவே மறு விவாகத்தைக் குறித்து அவர் மனம் அடிக்கடி சிந்திக்கலாயிற்று.

2

ஒரு நாள் வெளியே சென்றவர் திரும்பி வந்து தம் சகோதரியிடம் அன்றிரவு தம் நண்பன் ஒருவனும் அவன் தங்கையும் சாப்பிட வருவதாகக் கூறினார்.

இரவு ஏழு மணிக்கு அவர்கள் வீட்டு வாசலில் ஒரு மோட்டார் வந்து நின்றது. மேஜர் கிருஷ்ணனின் பெண்களிருவரும் அவசர அவசரமாகத் தங்கள் அலங்காரத்தை முடித்துக் கொண்டு மேல் தளத்திற்கு வந்து எட்டிப் பார்த்தார்கள்.

அதற்குள் அப்பெண்மணி காரிலிருந்து இறங்கி வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள். கறுப்புப் புடவையும், தலையில் கனகாம்பரம் பூவும்தான் தெரிந்தது. வசந்தாவும் ரேவதியும் சரசரவென்று கீழே இறங்கி வந்து தகப்பனருகில் நின்று கொண்டனர்.

முறைப்படியும் நாகரிகப்படியும் ஒருவரை ஒருவருக்கு அறிமுகம் செய்துவிட்டு எல்லோரும் ஆசனங்களில் உட்கார்ந்து கொண்டனர்.

மேஜர் கிருஷ்ணனும் அவர் நண்பர் ஈசுவரனும் பேசிக் கொண்டிருந்தார்கள். பெண்கள் மௌனமாக இருந்தனர். ஆனாலும் அவர்களுடைய கண்கள் ஆராய்ச்சி செய்த வண்ணம் இருந்தன.

வசந்தா தன் எதிரே உட்கார்ந்திருந்த பெண்மணியைக் கூர்ந்து பார்த்தாள். 'மாநிறமாயினும் வசீகரமான தோற்றம். முன் பற்கள் சற்று உள்ளடங்கி இருந்திருந்தால் கொஞ்சம் அழகாக இருந்திருக்கும். மூக்கு முகத்திற்கு ஏற்றதாயில்லை. கண்களில் கண்ணாடி வேறு. சற்று இரட்டை நாடி உடம்பு' என்றெல்லாம் ஆராய்ந்தது அவள் மனம்.

'இந்தக் கறுப்புக்குச் சிவப்புப் புடவையும் மஞ்சள் ரவிக்கையும் அணிந்திருந்தால் சுமாராக இருந்திருக்கும். தலைமயிரைப் பின்னித் தொங்கவிடாமல் சிறிது தூக்கிக் கட்டி மல்லிகைப் பூ வைத்திருந்தால் சற்றுப் பொருத்தமாக இருந்திருக்கும். கழுத்தில் அகலமான சங்கிலி, பார்க்கச் சகிக்கவில்லை. மூக்குத்தி முகத்தையே கெடுக்கிறது!' என்று சிறியவளான ரேவதியின் மனம் ஆராய்ந்தது.

ஈச்வரனின் தங்கை, சௌந்திரம், வசந்தாவையும் ரேவதியையும் கண்கொட்டாமல் பார்த்தாள். பெண்களிருவரும் ஒரே அச்சில் வார்த்த தங்க விக்கிரகங்களைப் போலிருந்தனர். கண்ணைப் பறிக்கும் அலங்காரங்கள் செய்து கொண்டிருந்தார்கள். தகப்பனாரைப் போல் கம்பீரமான நடையுடை பாவனைகள், அவர்கள் பெருங்குடியில் பிறந்தவர்கள் என்பதை விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தன.

சாப்பிடும் போது எல்லோருக்கும் கொஞ்சம் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. சமையலில் தனக்குத் திறமை உண்டு என்று சௌந்திரம் காட்டிக் கொண்டாள். பச்சடிகள் செய்யும் விதம், பாயஸத்திற்குத் தேங்காய்ப் பால்தான் நல்லது என்றெல்லாம் அவளும் அத்தை காமாட்சி அம்மாளும் விவாதித்தது பெண்களுக்கு ரசமாக யிருந்தது.

அன்றைய தினத்திலிருந்து ஈச்வரனும் சௌந்திரமும் அடிக்கடி வந்து போக ஆரம்பித்தார்கள். காப்டன் ஈச்வரன் கிரிக்கெட்டு விளையாட்டைப் பற்றி மேஜருடன் மணிக்கணக்காகப் பேசுவார். சமையலைப் பற்றியும் வேலைக்காரர்களின் தொந்தரவுகளைப் பற்றியும் சௌந்திரம் காமாட்சியம்மாளுடன் பேசிக் கொண்டிருப்பாள். ஆனால் என்ன முயன்றும் சௌந்திரத்தினால் வசந்தா, ரேவதியிடம் சகஜமாகப் பழக முடியவில்லை. அவர்களுக்கும் தனக்கும் மத்தியில் ஒரு அகன்ற அகழியே இருப்பதாகத் தோன்றிவிட்டது சௌந்திரத்துக்கு.

3

ஒரு மாதம் பறந்தோடியது. கிரிக்கெட்டு சீசன் ஆரம்பிக்க இன்னும் ஒரு வாரம் தானிருந்தது. வெளியூரிலிருந்தும் சில நண்பர்கள் விருந்தினராக வந்து சேர்ந்தனர். இந்த நிலைமையில் வீட்டுத் தொல்லைகளை யாரால் பொறுக்க முடியும் என்பதை உணர்ந்த மேஜர் கிருஷ்ணன், கடைசியாக சௌந்திரத்தை மணக்கத் தீர்மானித்து விட்டார்.

அக்காளைத் தம்முடைய அறைக்கு அழைத்து மெதுவாக விஷயத்தை ஆரம்பித்தார். என்ன தான் மனதைத் திடம் செய்து கொண்டும், அவரால் சகஜமாக விஷயத்தைக் கூற முடியவில்லை.

''நாளைக்குத் திருநீர் மலையில் கல்யாணம்'' என்றார் மெதுவாக.

''யாருக்கு!'' என்று கேட்டாள் அவர் தமக்கை சாவகாசமாக.

''என்னால் இனிமேல் வீட்டுத் தொல்லைகளைப் பொறுக்க முடியாது; நீயும் உன் பொறுப்பைச் சரியாக ஏற்பதில்லை. ஆகையால் நான் சௌந்திரத்தை மணப்பதாகத் தீர்மானம் செய்து விட்டேன். அவள் பாடு, உங்கள் பாடு!'' என்று கூறிவிட்டு 'விர்'ரென்று வெளியே சென்று விட்டார்.

காமாட்சி அம்மாள் திறந்த வாய் மூடாமல் அங்கேயே கல்லாகச் சமைந்து விட்டாள்.

''என்ன, நம் கிருஷ்ணனா இப்படிப் பேசுகிறான்! அவனுடைய கௌரவமும் புத்தியும் எங்கே போயிற்று! தங்கப் பதுமைகள் போல் குழந்தைகள் நிற்கின்றன கல்யாணத்திற்கு! இவனுக்கு இத்தனை நாள் கழித்துக் கல்யாணமா! அதுவும் நம் அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் சற்றும் பொருந்தாத ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ளவாவது!' என்று எண்ணி எண்ணி அங்கலாய்த்தாள்.

சௌந்திரம் படித்துப் பட்டம் பெற்று ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியா யிருந்தாள். சென்ற வருடம் அவளுடைய தாயார் நோய்வாய்ப் படவே வேலையை விட்டுவிட்டு வீட்டோடு இருந்து வந்தாள். சுமாரான குடும்பம். அவள் சகோதரன் ஈச்வரன் அவளைப் பெண்களுக்குள்ளேயே ஒரு லக்ஷியப் பெண்ணாகக் கருதினான். ஆகவே தன் அருமை நண்பரான மேஜர் கிருஷ்ணனுக்கு அவளை மணம் செய்து வைக்க முயற்சி செய்தான்.

சௌந்தரத்திற்குக் கிட்டத்தட்ட முப்பது வயதாகிவிட்டது. எவ்வளவு காலம் தான்



முட்டாள் பெண்களைப் பரீட்சையில் கரையேற்றி விடுவது என்று அவளுக்கும் ஒரு சலிப்புத் தட்டி விட்டது. தனக்கும், வீடு, வாசல், கணவன், குடும்பம் என்று வேண்டாமா! மேஜர் கிருஷ்ணனை முதல் தடவைப் பார்த்ததுமே அவள் உள்ளம் செழித்தது. அவருடைய கம்பீரமான தோற்றமும் பெருந்தன்மையான சுபாவமும் அவளைப் பெரிதும் கவர்ந்தன. வயது எவ்வளவு ஆகியிருந்தால் என்ன! அவர் பல விஷயங்களையும் பற்றி ரசமாகப் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாமே! அத்துடன் பணமும் குவிந்து கிடக்கிறது. வசந்தாவையும் ரேவதியையும் சமாளிப்பது சிறிது கஷ்டம்தான். ஆனாலும் அவர்கள் கூடிய சீக்கிரம் வீட்டை விட்டு வெளியேறுபவர்கள்தானே!

அரண்மனை போன்ற அம்மாளிகை. கூப்பிட்டு அதிகாரம் செய்ய ஆள் படைகள். கார், — முதலியவைகள் அவள் மனக்கண் முன்னால் படக் காட்சி போல் தோன்றித் திக்குமுக்காட வைத்தன.

'சுவாமி! எல்லாம் கைகூடி வரவேண்டுமே!' என்று மனதில் பிரார்த்தனை செய்யலானாள்.

4

சௌந்திரத்தின் பிரார்த்தனையும் கூடிய சீக்கிரம் நிறைவேறியது. ஒரு சுப தினத்தில் மேஜர் கிருஷ்ணனும் சௌந்திரமும் திருநீர்மலையில் கடவுள் சாட்சியாகச் சதிபதிகள் ஆனார்கள்.

'அந்த மட்டுக்கும் கல்யாணத்திற்கு வர வேண்டும் என்று கட்டாயம் செய்யவில்லையே!' என்று வசந்தாவும் ரேவதியும் ஆறுதலடைந்தனர்.

காமாட்சி அம்மாள் மட்டும் அவர்கள் வரும் சமயத்திற்கு ஒரு பெரிய விருந்தே ஏற்பாடு செய்திருந்தாள்.

மத்தியானம் மணி பன்னிரண்டு. வெய்யில் உக்கிரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. பூம்—பூம் என்ற சத்தத்துடன் பங்களா வாசலில் இரண்டு கார்கள் வந்துநின்றன. தம்பதிகளான கிருஷ்ணனும் சௌந்திரமும் ஒரு காரிலிருந்து இறங்கினார்கள். மற்றொரு காரிலிருந்து ஈச்வரனும் அவன் தாயாரும் இறங்கினார்கள்.

"அப்படியே நில்லுங்கள்! இதோ ஆலத்தி எடுத்து விடுகிறேன்!" என்றாள் காமாட்சி அம்மாள்.

"மாலை எங்கே? எடுத்துக் கழுத்தில் போட்டுக் கொள்ளுங்கள்!" என்றாள் சௌந்திரத்தின் தாயார்.

ஆனால் இதை ஒன்றையும் காதில் வாங்காமல் மேஜர் கிருஷ்ணன் விடுவிடென்று ஏறி உள்ளே சென்று விட்டார்.

ஈச்வரன் சிறிது நேரம் தயக்கத்துடன் நின்று விட்டு மேஜரைப் பின் தொடர்ந்தார். சௌந்திரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை.

வசந்தாவும் ரேவதியும் படிப்பறைக் கதவின் மறைவிலிருந்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

"வசந்தா! ரேவதி!" என்று அத்தையின் குரலைக் கேட்டு இருவரும் வெளியே வந்தனர்.

"ரேவதி! இந்த ஆலத்தியைச் சுற்றிக் கொட்டு!" என்றாள் காமாட்சியம்மாள்.

ரேவதி தட்டை 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டாள். அதற்குள் சௌந்திரத்தின் தாயார் "இல்லை, இல்லை! சௌந்திரம், இப்பொழுது அவர்களுடைய தாயார் ஸ்தானத்திலிருக்கிறாள்! ஆகாது. வேறு யாரையாவது கூப்பிடுங்கள்!" என்றாள்.

இந்த நெருக்கடியான சமயத்தில் மானேஜர் ராமசேஷனின் மனைவி அங்கு வரவே, ஆலத்தியைச் சுற்றி, சௌந்திரம் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டாள்.

இரவு விருந்திற்கு முக்கியமான நண்பர்கள் வந்திருந்தனர். சௌந்திரம் தனிமையை எதிர்பார்த்துத் தவித்தாள்.

'என்ன முட்டாள்தனம்! இவ்வளவையும் இழுத்துப் போட்டுக் கொண்டு விட்டோமே! ஒருவேளை நம்மால் சமாளிக்க முடியாது விட்டால்!' என்று அவள் உள்ளம் துணுக்குற்றது.

ஆனால் மறு கணம் மேஜர் கிருஷ்ணனின் அழகிய முகமும், அரண்மனை போன்ற வீடும், செல்வாக்கும் தன்னுடையது என்ற எண்ணம் அவளைத் தேற்றியது.

மறுநாள் காலை சௌந்திரத்திற்கு விழிப்பு வந்ததும் ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. அவளுடைய சூழ்நிலையை உணர்ந்து கொள்ள சில நிமிஷங்கள் சென்றன. அவசர அவசரமாக எழுந்து கீழே சென்றாள்.

"அம்மா! போய் காப்பி சாப்பிடு. வீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொள்!" என்று கூறி விட்டுக் காமாட்சியம்மாள் தோட்டத்தின் பக்கம் சென்று விட்டாள்.

சௌந்திரத்திற்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவளுக்கு வீட்டுப் பராமரிப்பில் சிறிதும் பழக்கம் கிடையாது. வேலைக்காரர்களுடன் எப்படிப் பேசிப் பழகவேண்டும் என்பதை அவள் புத்தகத்தில்தான் படித்திருந்தாள். இவ்வளவு பெரிய மாளிகையில் பரம்பரையாக வேலை செய்து வருபவர்களிடம் தான் எப்படி நடந்து கொள்வது என்று பயந்தாள். கணவரிடம் கேட்கலாமென்றால், அதிகாலையில் வெளியில் சென்றவர் இன்னும் திரும்பவில்லை. பெண்களுடன் பேசவே பயமாக இருந்தது.

எப்படியோ ஸ்நானத்தை முடித்துக்கொண்டு மேல் மாடியில் போய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். சிறு வயதில் பாடத்தைச் சரிவரப் படிக்காவிட்டால் தலை வலி, வயிற்று வலி என்று சால்ஜாப்புகள் கூறிப் பள்ளிக்கூடத்திற்கு மட்டம் போட்டு விடுவது அவளுக்கு இப்போது ஞாபகம் வந்தது.

'சரி! அதுதான் நல்ல வழி!' என்று தீர்மானம் செய்து கொண்டு, படுக்கையில் கண்ணை மூடிக்கொண்டு படுத்து விட்டாள்.

வெளியிலிருந்து திரும்பிய மேஜர் கிருஷ்ணன் நேராக மேலே சென்றார். படுக்கையில் மனைவி கண்களை மூடிக்கொண்டு படுத்திருப்பதைக் கண்டு "என்ன! இன்னுமா தூக்கம்!" என்றார்.

அவருடைய குரலைக் கேட்டுத் திடுக்கிட்ட சௌந்திரம் கண்களைப் பயத்துடன் திறந்தாள்.

"இல்லை! ஒன்றும் இல்லை! சற்றுத் தலை வலியாக இருக்கிறது!" என்றாள் மெதுவாக.

மேஜருக்கு இது சிறிதும் பிடிக்கவில்லை என்பதை அவர் முகம் பளிங்குபோல் எடுத்துக் காட்டியது.

"டாக்டரைக் கூப்பிட வேண்டுமோ!" என்று கேட்டார் சிறிது பரிகாசமாக.

"இல்லை, வேண்டாம்! இன்னும் கொஞ்ச நேரத்தில் சரியாகி விடும்!" என்று கூறிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள் சௌந்தரம்.

மேஜர் அவளருகே வந்து அவள் நெற்றியில் கையை வைத்தார். 'ஜில்'லென்று அவர் கை நெற்றியில் பட்டது சௌந்திரத்திற்குச் சிறிது ஆறுதலாக இருந்தது. அவர் கை மேல் தன் கையை வைத்துச் சௌந்திரம் அன்போடு அவரைப் பார்த்தாள்.

அந்தப் பார்வை கிருஷ்ணனை ஒரு கணம் ஏதோ செய்தது. ஏதோ கெஞ்சிக் கேட்பது போலிருந்தது. அவரும் சிறிது கனிவுடன் "ஏன்! என்ன சமாசாரம்? ஏதோ சொல்லத் தயங்குகிறாய் போலிருக்கிறதே!" என்று கூறிக் கொண்டே அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.

"ஒன்றுமில்லை. இந்த வீட்டையும் வேலைக்காரர்களையும் சரியாகப் பராமரிக்க முடியுமா என்று தோன்றுகிறது" என்றாள் சிறிது தயக்கத்துடன்.

"ஏன் முடியாது! வயது போதாதா! அல்லது......" என்று ஏதோ சொல்ல வந்தவர் அடக்கிக் கொண்டார்.

சௌந்திரத்தின் கண்களில் கண்ணீர் மல்கியது. அதைக் கண்ணுற்ற மேஜர் கிருஷ்ணன் கோபத்துடன் எழுந்து அங்கிருந்து வெளியே சென்று விட்டார்.

மேஜரால் கண்ணீரை மன்னிக்கவே முடியாது என்ற ரகசியத்தை உணராத பேதை சௌந்திரம், அவர் சென்ற பிறகும் தன் துயரத்துக்கு ஆறுதலாக மௌனக் கண்ணீர் உகுத்தாள்.

5

சில நாட்கள் சென்றன. கிரிக்கெட்டு சீசனும் முடிந்து விட்டது. காமாட்சியம்மாள் தனது சொந்தக் கிராமத்தில் சில தினங்கள் இருந்து வருவதாகச் சென்று விட்டாள்.

புஸ்தகப் பிரியர்

என் நண்பர் ஒருவருக்குப் பெரிய புஸ்தகங்கள் என்றால் அலாதிப் பிரியம். பெரிய புஸ்தகம் என்றால் ரொம்ப உயர்ந்த விஷயத்தைப் பற்றிய புஸ்தகமல்ல; ஆயிரம் பக்கங்களுக்கு மேலுள்ள புஸ்தகத்தைத்தான் குறிக்கிறது. "ஒரு வீட்டில் ஆயிரம் பக்கங்கள் கொண்ட இரண்டு புஸ்தகங்கள் இருந்தால் போதுமே! அந்த வீட்டுக்காரர்கள் வருகிறவர்களுக்குக் கொடுக்க தலையணைகள் இல்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லையே!" என்பார். புஸ்தகத்துக்கு எப்படிப்பட்ட பிரயோசனம் பார்த்தீர்களா!

நான் ஒரு நவீனத்தில் ஒரு ரசமான சம்பவம் படித்தேன். ஒரு கம்பெனியின் மானேஜர் ஒரு பெண். அந்த மாதைச் சந்திக்க ஒருவர் வந்தார். வந்தவர் சற்று தர்மத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டார். உடனே அந்த அம்மையார் தம் மேஜை மேலிருந்த புஸ்தகத்தை அவர் முகத்தில் வீசி எறிந்தா'. அவ்வளவுதான்! மனுஷர் பறந்து விட்டார்! அப்போது அந்த அம்மாள், "இந்தப் புஸ்தகம் எழுதிய ஆசிரியர் நீடூழி வாழ்க! 'இவ்வளவு பக்கங்கள் எழுதித் தொலைத்திருக்கிறாரே! எப்படிப் படித்துத் தொலைப்பது' என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தோமே! அது எவ்வளவு பெரிய தவறு! இத்தனை பக்கங்கள் எழுதியதனால் அன்றோ, நம் ஆத்திரத்தைப் பரிபூரணமாக அவர் முகத்தில் காட்ட முடிந்தது! வாழ்க இந்தப் புஸ்தகம்! வாழ்க இதை எழுதிய ஆசிரியர்!!" என்று வாழ்த்தினாள்.

புஸ்தகங்கள் படிப்பதற்கு என்று ஏற்பட்ட சில புத்தகாலயங்களில் படிக்க வேண்டிய கஷ்டமிராமலே படித்த பலன் கிடைத்து விடும்! தத்துவம் எவ்வளவு பெரிய விஷயம்! இவ் விஷயத்தைப் பற்றி எவ்வளவு பெரிய பெரிய ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள்! அந்த ஆராய்ச்சிகளையெல்லாம் படித்தால் மண்டையை எவ்வளவு குழப்பும். கிழக்கே உதிக்கும் சூரியன்கூட மேற்கேதான் உதிக்கிறான் என்று சொல்லும் அளவுக்கல்லவா நம்மைக் குழப்பிவிடும்!

இந்தப் பலனை சில புஸ்தகாலயங்களில் எவரும் எளிதில் அடைந்து விடலாம். தத்துவம் என்ற பெயரைத் தாங்கி, நான்கு ஆள் உயரத்தில் வரிசையாகப் புஸ்தகங்கள் அடுக்கப்பட்டிருக்கும். கீழே இருந்து 'தத்துவம்' என்ற அட்டையைப் படித்து விட்டாலே, அத்தனை புஸ்தகங்களையும் படித்த பலன் கிட்டிவிடும்! — தலை சுற்றத் தொடங்கிவிடும்!

புஸ்தகங்களின் பிரயோசனத்தைப் பற்றிப் புஸ்தகப் புழு சொன்னதாக ரவீந்திரநாத் டாகூர் கூறியதுதான் பிரமாதம்! 'இந்த மனிதர்கள் ஏன்தான் புஸ்தகங்களை அப்படியே வைத்திருக்கிறார்களோ தெரியவில்லையே!' என்று புஸ்தகப் புழு வியக்கிறதாம்.

இத்தகைய புஸ்தகப் பிரியர்களைப் பற்றி எவ்வளவோ ரஸமாகச் சொல்லலாம். உண்மையாகப் புஸ்தகங்கள் படிப்பவர்களைப் பற்றிச் சொன்னால் இவ்வளவு சுவாரஸ்யப்படுமா! நீங்களே சொல்லுங்கள்!

வெங்கு.



யில்லாமலே ஒரு ஆவேசம் வளர்ந்தது. தகப்பனாரிடம் அவர்களுக்கு எப்பொழுதுமே சலுகை கிடையாது. இப்பொழுது தங்களுக்கு விரோதியாக ஒருத்தியை மணம் செய்து கொண்டு வந்து வைத்துக் கொண்டது அவர்களை மேலும் புண்படுத்தியது.

மேஜர் கிருஷ்ணன் சௌந்திரத்தை அவர் மனைவியாக ஏற்றுக் கொண்டது சௌகரியத்திற்காகவே யன்றி காதலுக்காகவல்ல. அப்படியிருக்க அவள் தன்மீது உண்மைக் காதலுடன் அன்பு செலுத்துவது அவருக்கு ஒருவித அச்சத்தைக் கொடுத்தது. வீட்டிலும் அவர் எதிர்பார்த்தபடி காரியங்கள் சரிவர நடக்காமல் ஒவ்வொருவரும் ஏதோ சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களைப் போல் நடந்து கொண்டார்கள்.

இதையெல்லாம் மறக்க அவர் சில தினங்களாக 'எஸ்டேட்டு' காரியங்களில் கவனம் செலுத்தலானார். கடன் சிறிது சிறிதாக ஏறிக் கொண்டிருந்தது. பெண்கள் வேளைக்கொரு அலங்காரத்துடன் சிநேகிதர்களோடு வெளியே போய் வந்து கொண்டிருந்தனர். அவர்களை எப்படி அடக்குவது என்ற கவலை அவருக்கு மேலிட்டது. அவர்கள் விவாகத்தைக் குறித்தும் யோசனைகள் செய்யலானார்.

திடீரென்று ஒரு நாள் வசந்தா அவரிடம் வந்து தான் ஒருவரைக் காதலிப்பதாகவும் அவரையே மணந்து கொள்ளப் போவதாகவும் கூறினாள். இடம் நல்ல இடம். ஆயினும் பையனின் நடவடிக்கைகளைக் குறித்து மேஜருக்குத் திருப்தி யில்லை. என்ன கூறியும் அவள் அடங்கவில்லை. பிடிவாதக்காரியான வசந்தாவுக்கு மறுமாதமே திருமணம் நடந்தேறியது. அவள் கணவனுடன் புக்ககம் போனதும் சிறகொடிந்த பறவை போலிருந்த ரேவதி அத்தையுடன் சில காலம் இருந்து வருவதாகக் கூறிவிட்டுச் சென்று விட்டாள்.

6

வேனிற்காலம், மழைகாலம், குளிர்காலம் என்று வந்து போய்க்கொண்டிருந்தது. மேஜர் கிருஷ்ணன் மேஜைமேல் உட்கார்ந்து கொண்டு கணக்கு வழக்குகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். சென்ற வருடம் வந்த வரும்படியைத் தவிரக் கடன் ஏராளமாக ஏறியிருந்தது. வசந்தாவின் கல்யாணம் ஒரு பெரிய தொகையை இழுத்து விட்டிருந்தது.

பல மணி நேரம் கூட்டல் கழித்தல் போட்டும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. சௌந்திரத்தைக் குறித்து அவர் அதிகமாகச் சிந்தித்ததே கிடையாது. அவர் தம்முடைய சந்தோஷத்திலேயே பழகியவராதலால் பிறருடைய சுக துக்கங்களில் அவருக்குக் கவனமே செல்லாது.

சௌந்திரத்தின் வாழ்க்கை மழைகால வெய்யிலைப் போலிருந்தது. சில சமயம் கிருஷ்ணன் அவளுடன் சந்தோஷமாகப் பேசுவார். சில வேளைகளில் கடுமையாக நடந்து கொள்வார். ராணுவத்தி லிருந்ததினால் தந்தையின் குணமே கெட்டுவிட்டது என்று பெண்கள் கேலி செய்தனர்.

வேலைக்காரர்கள் சௌந்திரத்தின் வயதைக் குறித்தும், அற்பத்தனத்தைப் பற்றியும் மறைமுகமாகப் பேசிக்கொள்வது சௌந்திரத்துக்குத் தெரியாமல் இல்லை. ஆனாலும் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள்.

மேஜரின் முதல் மனைவியின் பல புகைப் படங்கள் அவ்வரண்மனையை அலங்கரித்திருந்தன. வருகிறவர்களில் பலர் அவளுடைய அழகையும் பெருந்தன்மையைப் பற்றியும் புகழ்வது சௌந்திரத்திற்குப் பொறுக்காது. வசந்தாவும் ரேவதியும் அவளை மதிக்காமல் நடந்துகொள்வது அவள் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. எல்லாமாகச் சேர்ந்து சௌந்திரத்தைப் படுத்திக் கொண்டிருந்தது.

வசந்தா, ரேவதியின் நிலைமையும் முன்போல் இல்லை. எந்தச் சின்னக் காரியமாயினும் ஒப்புக்காகவாயினும் சௌந்திரத்தைக் கேட்க வேண்டியதா யிருந்தது. இவ்வளவு வருடங்களுக்குப் பின் வீட்டில் எஜமானி ஸ்தானம் பெற்று வசிக்கும் சௌந்திரத்தினிடம் காரண

'சௌந்திரம் குணவதி. எவ்வளவோ செட்டாகத்தான் செலவு செய்கிறாள். என்னுடைய மனம் கோணாமல்தான் நடந்து கொள்ளுகிறாள்!' என்று சில சமயம் எண்ணுவார்.

ஆனால் குடும்ப சூழ்நிலைகளை நினைக்கும்போது 'எல்லாம் அவளால்தான் வந்தது!' என்று வெறுத்துக் கொள்வார்.

தவிரவும் அவர் இவ்வளவு நாட்களாகக் கவனியாத ஒரு விஷயம் வக்கீல்கள் சொன்னார்கள். அவருடைய பரம்பரைச் சொத்தான அம்மாளிகையை அவருக்கு விற்க உரிமை கிடையாது. அவருக்குப் பிள்ளை பிறந்தால் சாத்தியம் உண்டு. அல்லது அவள் பெண் வயிற்றுப் பேரனை ஸ்வீகாரம் செய்து கொண்டு சொத்துக்கு வாரிசாகச் செய்து கொள்ளலாம். மற்றபடி இவர் பூர்வீகச் சொத்துக்களை விற்கக் கூடாது என்பது இவர் தந்தையின் மரண சாஸனம். இவ்வளவு காலமாக ரொக்கப் பணம் இருந்ததால் அவர் இதைக் குறித்துக் கவலை கொண்டதே கிடையாது. இப்பொழுது நிலைமை மீறி விட்டது.

அவர் இத்தகைய எண்ணங்களில் ஆழ்ந்திருந்த சமயம் சௌந்திரம் மெதுவாக உள்ளே நுழைந்தாள். சிறிது பயத்துடன் "என்ன விஷயம்! எதற்காக நீங்கள் இவ்வளவு கவலைப் படுகிறீர்கள்! என்னிடம் சொல்லக் கூடாதா!" என்றாள் மெதுவாகவும் கனிவாகவும்.

மேஜர் கிருஷ்ணன் இவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த கோபத்தை யெல்லாம் அவள் மீது வர்ஷித்தார். அவள் வந்ததே எல்லாவற்றுக்கும் காரணம் என்றும் கூறி முடித்தார்.

பேதை சௌந்திரம் பேயடித்தவள் போல் வாயடைத்து நின்றாள். பல முறை ஏதோ கூறமுயன்றும் அவளால் முடியவில்லை.

மறுநாள் அதிகாலையில் மேஜருடைய கார் விர்ரென்று அதிவேகமாகக் கிளம்பிச் சென்றது. அன்றிலிருந்து பல மாதங்களாகியும் அவரிடமிருந்து கடிதமோ தகவலோ எதுவும் வரவில்லை. அவர் சென்ற இடமே தெரியாமல் மறைந்து விட்டார்.

7

ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. மேஜர் கிருஷ்ணன் மனம் போன போக்கில் ஊர் சுற்றிக் கொண்டிருந்தார்.

ஒரு சமயம் ஒரு கடற்கரையில் ஏகாந்தமாக உட்கார்ந்திருந்தார். சமுத்திரத்தில் அலைகள் புரண்டு கொண்டிருந்தன. அவர் உள்ளத்திலும் எண்ண அலைகள் புரண்டன.

தம்முடைய இளமையின் இன்பமும், மனைவியுடன் வாழ்ந்ததும், அருமைக் கண்மணிகளான வசந்தாவும் ரேவதியும் அவர் மனக்கண் முன் தோன்றினர். சௌந்திரத்தைப் பற்றி எண்ணுகையில் அவர் மனம் பச்சாத்தாபத்தினால் உருகியது. தம்முடைய தவறுக்காக இன்னொருவர் கஷ்டப்படுவதை அவர் அப்பொழுது தான் உணர ஆரம்பித்திருந்தார்.

இத்தகைய எண்ணங்களால் குழப்பப்பட்ட மேஜர் கிருஷ்ணன் குழம்பிய மனத்துடன் தம் இருப்பிடத்தை அடைந்தார்.

இப்பொழுது சில மாதங்களாக பூரி என்னும் புண்ய க்ஷேத்திரத்தில் வாசம் செய்து வந்தார். அங்கு ஒரு வைத்திய சாலையில் வேலையும் பார்த்து வந்தார்.

வீட்டிற்குள் வந்ததும் மேஜைமேல் அன்றைய பத்திரிகையும் இரண்டு கடிதங்களும் கிடப்பதைக் கண்ணுற்றார். வக்கீலின் கடிதமாக இருக்கும் என்று எண்ணி ஒரு கடிதத்தைப் பிரித்தார்.

"அருமை கிருஷ்ணனுக்கு,
சில நாளைக்கு முன்புதான் வக்கீலிடமிருந்து நீ இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டோம். எனக்கு உடம்பு மிகவும் கேவலமாக இருக்கிறது. ரேவதியை என் மைத்துனன் பிள்ளைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். என்னுடைய சொத்தெல்லாம் அவளுக்குத்தான். மற்ற விஷயங்கள் எல்லாம் நேரில் வந்து தெரிந்து கொள்வாய் என்று நினைக்கிறேன். இப்படிக்கு உன் அக்கா"

இவ்விதம் எழுதப்பட்டிருந்த காமாட்சியம்மாளின் கடிதத்தைப் படித்த மேஜர் கிருஷ்ணனுடைய கண்கள் கலங்கிவிட்டன.

பரபரப்புடன் மற்றொரு கடிதத்தைப் பிரித்தார்:

"அருமைக் கணவருக்கு,
நான் எப்பொழுதும் தங்களை இவ்வளவு உரிமையுடன் அழைத்ததில்லை. தங்களுக்கு எவ்விதத்திலும் தகுதியுள்ளவளல்ல என்றுதான் கருதியிருந்தேன். ஆனால் இப்பொழுது தங்களுக்கு ஓர் அருமை மகனைப் பெற்றுக் கொடுத்த பாக்யம் எனக்குக் கிடைத்திருக்கிறது. நீங்கள் போவதற்கு முதல் நாள் இதைப்பற்றிக் கூற எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

என் தாயார் காலமாகி விட்டதால் ஊரிலிருந்த சொத்துக்கள் எனக்கு வந்து விட்டன. அதை வக்கீல்கள் மூலம் விற்று நமது கடனைத் தீர்த்தாகிவிட்டது.

என் உடம்பு பலஹீனமாக இருக்கிறது. டாக்டர்கள் பிழைப்பேனோ என்று சந்தேகப் படுகிறார்கள். ஆனால் இனி நான் இறந்தாலும் சந்தோஷமாகவே இறப்பேன்.

இப்படிக்குத் தங்கள்,
சௌந்திரம்"

தம் மனைவியின் கடிதத்தைப் பல முறைகள் தட்டுத் தடுமாறிப் படித்தார்.

பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு "பெண் குலமே! உங்கள் வெற்றியே வெற்றி" என்று ராணுவ தோரணையில் வாழ்த்தி கூறிவிட்டு ஊருக்குப் போக சாமான்களை எடுத்து மூட்டை கட்ட ஆரம்பித்தார்.

* * *

இப்பொழுது மேஜர் கிருஷ்ணனைப் பார்ப்பவர்கள் அவருக்கும் அவருடைய மூன்று வயது மோஹனுக்கும் ஒருவித வித்தியாசமு மில்லை என்றுதான் கூறுகிறார்கள். குழந்தைக்குக் கிரிக்கெட்டு விளையாட்டுச் சொல்லிக் கொடுப்பது ஒன்றுதான் அவருடைய வேலை. மற்ற எல்லாக் குடும்ப விஷயங்களையும் சமாளிப்பது அவர் அருமை மனைவி சௌந்திரவல்லிதான்!

மத்திய கேந்திரம்

ஜெயமணி



எகிப்து—4

லார்டு க்ரோமர் ஆட்சியின் முடிவில் எகிப்தின் நிலைமை எப்படி இருந்தது, தெரியுமா? எகிப்தின் பழைய கடன் கரையாமல் அப்படியே இருந்தது. கல்வித் துறையில் எகிப்திய மக்கள் முன்னேற்றம் அடைவதற்கான எத்தகைய முறையும் கைக்கொள்ளப் படவில்லை. அந்த நாட்டில் ஒரு தேசிய சர்வகலாசாலையை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வந்தன. ஆனால் அந்த ஏற்பாடுகளுக்கு லார்டு க்ரோமர் முட்டுக்கட்டை போட்டு, சர்வகலாசாலை உருவாக முடியாமல் குட்டிச் சுவராக்கி விட்டார்.

எகிப்தில் தங்களுடைய ஆதிக்கத்தை ஸ்தாபிப்பதில் பிரிட்டிஷாரும் பிரஞ்சுக்காரர்களும் பரஸ்பரம் உடந்தையாக இருந்தனர். எனினும் நாளடைவில் அவர்களுக்குள் போட்டியும் பொறாமையும் எழத் தொடங்கின. எகிப்தைச் சுரண்டுவதிலும், அங்கு தங்கள் பிடியைப் பலப்படுத்திக் கொள்வதிலும் பிரிட்டிஷார் அதிக வெற்றி பெற்று வருவதைப் பிரஞ்சுக்காரர்கள் விரும்பவில்லை!

எகிப்தில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் வலுவடைந்து வருவதைக் கண்டு மற்ற ஐரோப்பிய நாடுகளும் பொறாமை கொண்டன. மேற்படி நாடுகளின் போட்டிக்கும் பொறாமைக்கும் தாங்களும் தங்கள் நாட்டின் செல்வமும் இலக்காக நேர்ந்ததைக் குறித்து எகிப்திய ஜனங்கள் மனம் துடித்தனர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஆனால் ஐரோப்பிய நாடுகளையும் எகிப்தியர்களையும் பிரிட்டிஷார் சமாதானப்படுத்தி வந்தார்கள். எகிப்தில் தங்களுடைய ஆதிக்கம் தாற்காலிகமானதே என்றார், தாங்கள் கூடிய சீக்கிரத்தில் எகிப்திலிருந்து வெளியேறிவிடப் போவதாயும் கூறி வந்தார்கள். அவ்வாறு உத்தியோக தோரணையில் பல தடவை பிரகடனமும் விடுத்தார்கள். ஆனால் ஆண்டுகள் பல சென்றன; பிரிட்டிஷார் தங்களுடைய 'பிரதிக்ஞை'யை நிறைவேற்றுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

கடைசியாக, பிரஞ்சுக்காரர்களின் சில்லறைத் தொந்தரவுகள் பொறுக்க முடியாமற் போகவே, அவர்களுடன் பிரிட்டிஷார் 1904-ம் வருஷத்தில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி மொராக்கோவில் பிரஞ்சுக்காரர்களின் பூரண ஆதிக்கம் ஏற்படுவதற்குப் பிரிட்டிஷார் இசைந்தனர்; எகிப்தில் பிரிட்டிஷாரின் பூரண ஆதிக்கம் ஸ்திரமாவதற்குப் பிரஞ்சுக்காரர்கள் இணங்கினர். ஆனால் அவ் விஷயமாக அவர்கள் மொராக்கோ மக்களின் விருப்பத்தையோ, எகிப்திய மக்களின் விருப்பத்தையோ கேட்கவில்லை! கேட்டிருந்தால், "தயவு செய்து எங்கள் நாட்டை விட்டு வெளியேறிப் போய் விடுங்கள்; எங்கள் நாட்டை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று மொராக்கோ மக்களும் எகிப்தியர்களும் பதில் அளித்திருப்பார்கள்!

* * *

இச் சந்தர்ப்பத்தில் எகிப்திலே விசித்திரமான சில புதிய சட்டங்கள் அமுலுக்கு வரலாயின. அந்த நாட்டில் உள்ள

அன்னியர்கள் விஷயத்தில் எகிப்துக் கோர்ட்டுகளுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. எனவே அன்னியர்கள் மீது தொடரப்படும் வழக்குகளை விசாரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து நீதிபதிகள் இறக்குமதி செய்யப்பட்டனர். எகிப்தில் விதிக்கப்படும் வரிகள் அன்னியர்களைக் கட்டுப்படுத்தாது என்றும் சட்டம் ஏற்பட்டது. அதாவது எகிப்தில் அன்னியர்கள் சட்டங்களுக்கு உட்பட வேண்டியதில்லை; வரிகள் கொடுக்க வேண்டியதில்லை; ஆனால் அவர்களுக்குச் சகல உரிமைகளும் உண்டு! எகிப்தைச் சுரண்டுவதற்குப் பூரண உரிமை உண்டு என்ற விசித்திர நியதி அமுலுக்கு வந்தது!

எனவே பிரிட்டிஷாருக்கு எகிப்து சுவர்க்கலோகமாக இருந்தது. அவர்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்தத் தொடங்கினர். கெட்டதிலிருந்து நன்மை உண்டாவது போல, அதுவும் ஒரு விதத்தில் எகிப்துக்கு நன்மையாகவே முடிந்தது. ஏனெனில், அந்த நாட்டில் பிரிட்டிஷாரின் சுரண்டலும் சர்வாதிகாரமும் ஆடம்பர வாழ்க்கையும் அங்கு தேசிய இயக்கத் தீபத்துக்குச் சிறந்த தூண்டுகோலாக அமைந்தன!

மேற்படி இயக்கத்தின் பலனாக எகிப்தில் பல தலைவர்கள் தோன்றினர். அவர்கள் எல்லோருக்கும் ஜக்லுல் பாஷா என்பவர் திலகமாகத் திகழ்ந்தார்.

அந்த நாடு அராபியர்களின் ஆதிக்கத்துக்கு வந்த பிறகு அங்கு முஸ்லிம்கள் பெரும்பாலோர் ஆயினர்; கிறிஸ்துவர்கள் சிறுபாலோர் ஆயினர். எனினும் கிறிஸ்துவர்களும்கூட எகிப்து தேசிய இயக்கத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்தியாவில் பிரிட்டிஷார் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பிளவு ஏற்படும்படி செய்து வந்தார்கள் அல்லவா? அது போலவே எகிப்திலும், முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் பிளவு ஏற்படும்படி செய்ய முயற்சித்தார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி பலிக்கவில்லை.

எனினும் தேசியவாதிகளிடையே பிளவு ஏற்படும்படி அவர்கள் செய்த முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது. இந்தியாவில் மிதவாதிகள் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து, சுதந்திர இயக்கத்துக்கு முட்டுக்கட்டை போட்டதைப் போல, எகிப்திலும் தேசிய இயக்கத்திலிருந்து சிலர் பிரிந்து சென்று, தங்கள் தேச நலனுக்கு விரோதமாகப் பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்தனர்.

எனவே, இந்தியாவைப் போல் எகிப்தும் அன்னியர்களை எதிர்த்து வெகு காலம் சுதந்திரப் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது.

அக்காலத்தில் அரபு நாடுகளுக்குள் எகிப்து தான் முன்னேற்றம் அடைந்திருந்தது. கெய்ரோவில் பிரசுரமான தினசரிப் பத்திரிகைகள் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததுடன், அரபு நாடுகளுக் கெல்லாம் சென்றன. எனவே, எகிப்தியர்களின் சுதந்திரப் போராட்டத்தை மற்ற முஸ்லிம் நாடுகளும் சிரத்தையுடன் கவனிக்கலாயின. எகிப்தை உதாரணமாகக் கொண்டு தங்கள் தங்கள் தேசிய இயக்கத்தையும் சுதந்திரப் போரையும் உருவாக்க முற்பட்டன.

* * *

அரபி பாஷா 1881-ம் வருஷம் பிரிட்டிஷாரை எதிர்த்து நின்றபோது, ஜக்லுல் பாஷா அவரிடம் தொண்டு புரிந்து வந்தார். அதிலிருந்து 1927-ம் வருஷம் தாம் காலமாகும் வரையில், அதாவது நாற்பத்தைந்து ஆண்டுகள் வரையில் ஜக்லுல் பாஷா எகிப்தின் விடுதலைக்காக இடைவிடாது உழைத்து வந்தார்.



எகிப்தில் உள்ள தங்கச் சிங்காசனம்

எகிப்தின் சுதந்திர இயக்கத்துக்குத் தலைமை வகித்த அவரை, செல்வ வந்தர்களையும் ஜமீன்தார்களையும் தவிர மற்ற எகிப்தியர்கள் யாவரும் அன்புடனும் மரியாதையுடனும் போற்றி வந்தனர்.

முதலாவது மகா யுத்தம் ஆரம்பமானபோது எகிப்தில் சுதந்திர இயக்கம் தீவிரமாக இருந்து வந்தது. எனவே, அந்த யுத்தம் முடியும் வரையிலும்,—அதற்குப் பிறகும்கூட அந்த நாட்டில் ராணுவச் சட்டம் அமுலில் இருந்தது. எகிப்து தேசம் எங்கும் பிரிட்டிஷ் துருப்புகளின் மயமாக இருந்தது.


அதிக
மலர்ச்சியைத்தருவது...
ஹிமாலயா
புக்கே
டாய்லட், டால்கம் பௌடர்களின்
குளுமையான பரிமளம்
உங்கள் அழகு பராமரிப்புக்கு வாசனையுடைய ஹிமாலயா புக்கே பௌடர்கள் மிகவும் சிறந்தவை. அவை பட்டு போல் மிருதுவாக இருக்கின்றன. உங்கள் சருமத்திற்கு சாந்தியை அளிக்கின்றன. அவைகளின் நீடித்திருக்கும் வெகு நேர்த்தியான பரிமளம் உங்களை மலர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
Himalaya Bouquet
Himalaya Bouquet
நேர்த்தியான
இரண்டு இராஸ்மிக் தயாரிப்புகள்
HBP. 4-X30 TM
இராஸ்மிக் கம். லிட். லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தவை



மொழிபெயர்ப்பு – ரா.வீ

வந்திருந்த விருந்தினர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக விடை பெற்றுச் சென்று விட்டனர்.

ஹரிப்பிரஸாத் கடைசி விருந்தாளியை வழி அனுப்பிவிட்டுத் திரும்பும் பொழுது மணி பதினொன்று அடித்து விட்டது. அறைக்குள் வந்ததும் நிர்மலா ஒரு நாற்காலியில் உட்கார்ந்து தூங்கி வழிவதைக் கண்டான். அவளுடைய இரு கண்களும் மூடி யிருந்தன. மெதுவாகக் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு ஹரிப்பிரஸாத் ஓசைப்படாமல் நாற்காலிக்குப் பின்னால் வந்து நின்று கொண்டான். நிர்மலாவின் தலையில் சூட்டப்பட்டிருந்த புஷ்பத்தி லிருந்து ஒன்றைத் தன் கையில் எடுத்துக் கொண்டான்.

துணுக்குற்றுக் கண்களைத் துடைத்துக் கொண்டு நிர்மலா எழுந்தாள். பிறகு நாணத்துடன் அவனைப் பார்த்து, "இன்னும் யாராவது வந்திருக்கிறார்களா, என்ன!" என்று கேட்டாள்.

"இனிமேல் யாரும் வரமாட்டார்கள்!" என்று சொல்லி விட்டு ஹரிப்பிரஸாத் நாற்காலியின் கைப் பிடியில் உட்கார்ந்து கொண்டான். பிறகு, "உனக்கு நல்ல தூக்கம் வந்து விட்டாற் போலிருக்கிறது!" என்றான்.

நிர்மலா ஒரு தடவை கொட்டாவி விட்டாள். பிறகு நாற்காலியின் சாய்மானத்தில் சோம்பல் முறித்தபடி தன் முதுகைச் சாய்த்தாள். "நல்ல தூக்கம் இல்லை. ஒரு சின்னக் குட்டித் தூக்கந்தான். இனிமேல் இந்த மாலைகளையெல்லாம் கழற்றி வைத்து விடலாம் அல்லவா!" என்று கேட்டாள்.

"ஏன்! சிரமமா யிருக்கிறதோ! சிரமமா யிருந்தால் கழற்றி வைத்து விடு. இன்று முழுவதும் உனக்கு ரொம்ப சிரமம்தான்!"

"சிரமம் என்ன! இதைவிட இன்னும் எத்தனையோ சிரமங்களையெல்லாம் பட்டுப் பழகிப் போன எனக்கு இது ஒரு சிரமமா! இங்கு வெறுமனே நாற்காலியில்தானே உட்கார்ந்திருக்க வேண்டி யிருந்தது! ஆஸ்பத்திரியில் 'நைட் டியூடி' வேறு செய்யவேண்டி யிருந்ததே!" என்று சொல்லிச் சிரித்தாள் நிர்மலா.

"ஒரே இடத்தில் ஒரேமாதிரி உட்கார வைப்பதும், பார்க்கப்போனால் ஒரு விதத்தில் சிரமந்தான். வருகிறவர்களுக் கெல்லாம் கை கூப்பி வணக்கம் தெரிவிக்க வேண்டும். சிரித்து இரண்டொரு வார்த்தைகள்—அதுவும் அளந்து பேச வேண்டும். ஏனெனில் பிறர் வாயாடி என்று நினைத்துவிடக் கூடாதல்லவா! ஆகவே, அதுவும் ரொம்ப சிரமமான பரீக்ஷைதான்!"

"அப்படியானால் நான் உங்கள் பரீக்ஷையில் தேறிவிட்டேன் அல்லவா!" என்று ஆவலும் ஆதுரமும் தொனிக்கக் கேட்டாள் நிர்மலா.

ஹரிப்பிரஸாத் அவள் பக்கத்தில் இன்னும் நெருங்கி உட்கார்ந்து, அவள் தலையிலிருந்து எடுத்த புஷ்பத்தால் அவள் கன்னங்களைத் தடவியவாறே, "சரி, எழுந்திரு!" என்றான்.

கட்டிலில் விரித்திருந்த படுக்கையைப் பார்த்த நிர்மலா ஒரு தடவை துணுக்குற்றாள். தலைமாட்டில் இருவாட்சி மலர்க் கொத்து ஒன்று வைத்திருந்தது. படுக்கையில் விரித்திருந்த விரிப்பு பால் போன்று வெண்மையாக இருந்தது.

"என்ன யோசிக்கிறாய்!" என்று கேட்டான் ஹரிப்பிரஸாத்.

"ஒன்று மில்லை!" என்று நாணிக் கோணிக் கொண்டு நிர்மலா அவன் அருகில் வந்தாள். அவள் தன் மனத்தில் எண்ணியதை அவனிடம் எப்படிச் சொல்லுவது!

மின்சார விளக்கொளியில் பளபள வென்று பிரகாசிக்கும் அந்த அறை அவளுக்கு ஆபரேஷன் தியேட்டரை நினைவுறுத்தியது. இருவாட்சி மலரின் மணம் டிஸ்-இன்பெக்டெண்ட்

லோஷனின் அதர்வது தற்காப்புக்காக ஆஸ்பத்திரிகளில் உபயோகிக்கப்படும் ஒருவித திரவத்தின் மணத்தை ஒத்திருந்தது.

ஒவ்வொன்றாக அவள் தன் ஆபரணங்களைக் கழற்றினாள். பிறகு ஒரு சாதாரணப் புடவையையும் ரவிக்கையையும் எடுத்துக் கொண்டு ஸ்நான அறைக்குச் சென்றாள். திரும்பி வந்து பார்க்கும்பொழுது ஹரிப்பிரஸாத் பரிசாக வந்திருக்கும் பொருள்களையெல்லாம் பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

வந்த பரிசுகளில் புதுமை ஒன்றுமில்லை. பெரும்பாலும் புஸ்தகங்கள். அதுவும் கவிதைப் புஸ்தகங்கள். வெற்றிலைப் பெட்டி, ஐஸ்கிரீம் செட்டு, எல்லாமே சாதாரணமானவைதான். அவற்றைத் தவிர ஒரு சிறிய பிளாஸ்டிக் பெட்டியில் மூன்று லெஹுராய்ட் பொம்மைகள் தூங்கிக் கொண்டிருந்தன. அதுவும் வந்த பரிசுகளில் ஒன்று. அதில் ஒரு ஊசியில் கோர்க்கப்பட்ட கார்டு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கார்டில் 'ஷேப் ஆப் திங்க்ஸ் டு கம்' என்று—அதாவது 'வரப்போகும் பொருள்களின் உருவம்' என்று எழுதியிருந்தது.

இது ரொம்பப் பழைய துணுக்கு! இந்தத் துணுக்குக்குச் சதாபிஷேகம், ஸஹஸ்ராபிஷேகம் முதலியவைகள் கூட ஆகியிருக்க வேண்டும். அவ்வளவு பழைய துணுக்கு அது. ஒவ்வொரு கல்யாணத்திலும் இம்மாதிரி ஏதாவது ஒரு பரிசைக் கொடுத்து விட்டு நண்பர்கள் குழாம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்வதும் வெட்கத்தினால் மணப் பெண்ணின் முகம் சிவந்து தொங்கி விடுவதும் சர்வ சகஜம்.

ஆனால் நிர்மலா அப்படிப்பட்ட மணப் பெண்ணோ, சின்னக் குழந்தையோ அல்லவே! அவள்தான் ஆறு வருஷ காலம் ஆஸ்பத்திரியில் உத்தியோகம் பார்த்தவள் ஆயிற்றே! இது வரை அவள் குறைந்தது நூறு இரு நூறு பிரஸவ கேஸ்களாவது 'அட்டெண்ட்' செய்திருப்பாள். இன்று இருபத்தைந்து வயதான பிறகுதான் அவளுக்குக் கைக்கட்டும் கால் கட்டும் போடப்படுகிறது. அப்படியிருக்கும் பொழுது அவள் பொய் வெட்கத்தைக் காட்ட வேண்டிய அவசியம் என்ன!

"என்ன பார்க்கிறாய்!" என்று கேட்டான் ஹரிப்பிரஸாத்.

"ஒன்றுமில்லை. இவற்றை எடுத்து அலமாரியில் வைத்து விடட்டுமா!"

"நாளைக் காலையில் வைத்துக் கொண்டால் போயிற்று. இப்பொழுதே என்ன அவசரம்!" என்றான் ஹரிப்பிரஸாத்.

சிறிதுகூடச் சுருக்கம் விழாமல் பால்போன்று வெண்மையாக இருந்த விரிப்பைப் பார்த்த நிர்மலா மறுபடியும் ஒரு முறை துணுக்குற்றாள். என்லென்ஸுக்கும், குளோரோபாரத்துக்கும் ஒரே கெடுதானோ! என்ன ஆச்சரியம்!

அப்பொழுது அறையில் மங்கலான நீல நிற விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெகு ஆர்வத்துடன் ஹரிப்பிரஸாதின் ஒரு கை அவளுடைய கையைத் தொட்டது. அவளுக்குத் தன்னுடைய அந்தக் கை உணர்விழந்து தளர்ந்து விட்டதுபோலத் தோன்றியது.

"என்ன யோசிக்கிறீர்கள்!" என்று கேட்டாள் அவள்.

"ஒன்றுமில்லை!"

"நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்!"—நிர்மலாவின் உதடுகளில் துஷ்டத்தனம் நிறைந்த குறு நகை ஒன்று படர்ந்தது. — "முதல் சந்திப்பைப் பற்றித்தானே யோசிக்கிறீர்கள்!" என்று கேட்டாள்.

ஹரிப்பிரஸாதினுடைய இரு கண்களும் புத்தொளி பெற்றுப் பிரகாசித்தன. "இல்லை, வந்து......குழந்தை அழாமல் இருக்க வேண்டுமே என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தேன்!" என்றான்.

"அழாது! பீடிங் பாட்டிலில் நிறையப் பால் வைத்திருக்கிறேன். பிரபா அதைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறாள். அழாமல் பார்த்துக் கொள்ளுவாள்."

"ஆமாம், குழந்தை பிழைத்து விடுமா!" நிர்மலாவின் தோளில் கையை ஊன்றிய வண்ணம் ஹரிப்பிரஸாத் கேட்டான். "எனக்கு என்னவோ நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால் கேட்கிறேன். ஏன், நிர்மலா! பிழைத்து விடுமா!"

நிர்மலா இலேசாகச் சிரித்தாள். இந்த ஆண்களே சுத்தப் பட்டிக்காடுகள். சின்னச் சின்ன விஷயத்துக் கெல்லாம் எப்படிப் பயந்து சாகிறார்கள்! — அநேக ஆண்டுகள் ஆஸ்பத்திரியில் வேலை செய்ததனால் அவளுக்கு ஏற்பட்டிருந்த அநுபவம் இது. பார்ப்பதற்குப் பெரிய பலசாலிகள் போலவும் துணிச்சல் உள்ளவர்கள் போலவும் பேசிக் கொள்வார்கள். ஆனால் கட்டின பெண்டாட்டிக்குக் கொஞ்சம் உடம்பு வந்து விட்டால் போதும், அரண்டு போய்ப் பித்தர்கள்போல இங்கும் அங்கும் ஓடத் தொடங்கி விடுவார்கள்!

எத்தனையோ பிரசவ கேஸ்களில் கணவன்மார்கள் கவலையே உருவாக வராந்தாவில் உட்காரக் கூட மனமில்லாமல் இங்கும் அங்கும் வளைய வளைய வருவதையும் குளிர் நாட்களாயிருந்தால் இரவு வேளைகளில் போர்த்திக் கொள்ளக்கூடத் துணியில்லாமல் பார்வையாளர்கள் விடுதியில் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்திருப்பதையும் அவள் பார்த்திருக்கிறாள். தப்பித் தவறி அந்த அறையில் யாராவது ஒரு நர்ஸ் நுழைந்துவிட்டால் அவர்கள் தங்கள் கண்களை அகல விழித்துக் கொலைகாரன் தூக்குத் தண்டனையை எதிர் பார்ப்பது போலப் பார்ப்பதையும் அவள் கண்டிருக்கிறாள்.

'நீங்கள் வீட்டுக்குப் போங்கள். இன்று ஒன்றும் ஆகாது' என்று நர்ஸ் எவ்வளவு ஆறுதல் சொன்னாலும் கணவர்மார்களுக்கு மனம் கேட்காது. மிகவும் பதற்றமடைந்த குரலில், "ஒன்றும் பயமில்லையே! அவளுக்கு ரொம்ப ரொம்ப வலிக்கிறதோ! என்ன செய்து கொண்டிருக்கிறாள் இப்போது!" என்று கேள்விகளுக்கு மேல் கேள்விகள் கேட்டுப் பிராணனை வாங்கி விடுவார்கள்.

"தூங்கிக் கொண்டிருக்கிறாள். நீங்கள் கவலையின்றிப் போய் வாருங்கள்!" என்று சிரித்துக் கொண்டே சொல்லுவாள்.

ஹரிப்பிரஸாதின் குரல் கேட்டு அவளுடைய சிந்தனை யோட்டம் தடைப்பட்டது. "நிர்மலா, நீ குழந்தையை நன்றாகக் கவனித்துக் கொள். அம்மா இல்லை என்ற எண்ணமே அதன் மனத்தில் இடம் பெறக்கூடாது."

நிர்மலா தன் கழுத்தைச் சாய்த்துக்கொண்டு, "சரி, சரி! நீங்கள் கவலையற்றிருங்கள். நான் நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன். இன்று உங்களுக்குக் குழந்தையின் நினைவு அடிக்கடி வருவதைப் பார்த்தால் தூக்கமே வராதுபோலிருக்கிறதே!" என்றாள்.

ஹரிப்பிரஸாத் நிர்மலாவின் கைகளைப் பிடித்துத் தன் அருகில் இழுத்து அவள் காதருகில் வாயைக் கொண்டு சென்று, "இன்றைக்கு எப்படியுமே தூக்கம் வராதுதானே!" என்றான்.

ஆனால் தூக்கம் வரத்தான் செய்தது.

நிர்மலா கண் விழித்தபொழுது இருட்டாகவேதான் இருந்தது. வான வீதியிலே சில நக்ஷத்திரங்கள் மினுக்கிக் கொண்டிருந்தன. அவள் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். தெரு விளக்குகள் இன்னும் அணைந்தபாடில்லை.

நேரத்தை அறிவதற்காக அவள் படுத்தபடியே நீல விளக்கின் பித்தானை அழுத்தினாள். ஹரிப்பிரஸாதின் தலை தலையணையிலிருந்து கீழே நழுவியிருந்தது. அவனுடைய ஒரு கை நிர்மலாவின் மீது விழுந்திருந்தது.


நிர்மலா துணுக்குற்று எழுந்து உட்கார்ந்தாள். ஒரு கிளாஸ் தண்ணீர் எடுத்துப் பருகினாள். இதுவரை அவள் நினைவுத் திரையில் எல்லாம் மங்கலாகவே தான் தோன்றி வந்தன. தண்ணீர் பருகித் தன் உணர்வு பெற்றபின் அவளுக்கு மகாராஜா ஆஸ்பத்திரியில் நர்ஸாயிருந்த நாம் புது மணப்பெண் ஆகிவிட்டோம் என்பது விளங்கியது.

நிர்மலா படுக்கையைப் பார்த்தாள். விரிப்பு இன்னும் வெளுப்பாகத்தான் இருந்தது. ஆனால் அதில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. தலையணை இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கலைந்து கிடந்தன. கால்மாட்டிலிருந்த தலையணை கட்டிலில் கிடப்போமா, கீழே விழுந்து விடுவோமா என்று திரிசங்குவைப் போல் ஊசலாடிக் கொண்டிருந்தது.

இப்பொழுது அந்தப் படுக்கை ஆபரேஷன் மேஜைபோலத் தோன்றவில்லை. அவளுடைய முழுங் கை, கழுத்து ஆகியவற்றில் இரண்டொரு பூ விதழ்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. வெள்ளை இதழ்கள் இருவாட்சி மலரின் இதழ்களாக இருக்கலாம். ஆனால் இதோ ஒட்டிக் கொண்டிருக்கும் சிவப்புப் புஷ்பங்கள்! இவற்றுக்கு என்ன பெயரோ!

அலமாரியின் பக்கம் அவளுடைய பார்வை சென்றது. உடனே இரவு கிடைத்த பரிசுகளின் நினைவு வந்தது. மூன்று ஸெலுலாய்டு பொம்மைகளும் எவ்வளவு அழகாக இருந்தன! அவற்றின் கழுத்தில் நண்பர் குழாம் எழுதியிருந்த 'இங்க்ஸ் டு கம்' என்னும் சீட்டும் தொங்கிக் கொண்டிருந்தது!

நிர்மலாவுக்கும் இப்படி மூன்று குழந்தைகள் பிறக்குமோ! அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் இப்படியே 'கொழு கொழு' வென்றிருக்குமோ! கல்யாணம் என்று ஒன்று ஆகிவிட்டால் குழந்தைகள் பிறப்பது சகஜம்தானே! இதில் என்ன புதுமை இருக்கிறது!



ஆஸ்பத்திரி நர்ஸ் தனது இருபத்தைந்தாவது வயதில் மணப் பெண்ணாக ஆவது, தலையில் கட்டியிருக்கும் வெள்ளைத் துணிக்குப் பதிலாக அழகான பூக்களால் தலையை அலங்கரித்துக் கொள்வது என்றால், மூன்றுக்குத் தயாராக இல்லாவிட்டாலும் இரண்டொரு குழந்தைகளுக்காவது தயாராக இருக்க வேண்டியதுதானே!

கணவனும் குழந்தைகளும் இருந்தால் தானே குடும்பமும் குடித்தனமும்! சம்பளம் வாங்கிக் கொண்டு அநேகருக்கு ஊழியம் புரிபவளாக இருப்பதை விட்டுவிட்டு ஒருவருக்குச் சம்பளம் வாங்காது ஊழியம் செய்பவளாக இருப்பது மட்டும் கல்யாணம் ஆகிவிடாது. வீடு வாசல், குழந்தை குட்டிகள் என்று வாழ்க்கை நிறைவதுதான் குடித்தனம் ஆகும். நர்ஸ் வேலையிலிருந்து விலகி அவள் தாய்மையை நோக்கி முன்



"ஐந்து நிமிஷத்தில் சாப்பாட்டைப் போட்டு முடித்து விட்டீர்களே! போர்டில் எட்டிலிருந்து பன்னிரண்டு வரையில் போடுவதாகச் சொல்லி விட்டு ஏமாற்றுகிறீர்களா? எழுந்திருக்கப் போவதில்லை. கூப்பிடும் முதலாளியை!"

ளேற வேண்டும். அதுதானே கல்யாணம் செய்து கொண்டதற்கு லக்ஷணம்!

சூரிய கிரணங்கள் பரவலாயின. ஹரிப்பிரஸாதின் கண்களும் திறந்து கொண்டன. அவன் கண்களைத் தேய்த்துக் கொண்டு இங்கும் அங்கும் பார்க்கலானான். அவனைப் பார்த்து நிர்மலா இலேசாக ஒருமுறை சிரித்தாள்.

உணவருந்திவிட்டு ஹரிப்பிரஸாத் வெளியே சென்று விட்டான். ஆனால் நிர்மலாவுக்குப் பொழுதே போகவில்லை. சின்னக் குழந்தைக்குக் குளிப்பாட்டி அலங்காரம் செய்தாள். பிறகு பால் ஊட்டித் தூங்கச் செய்தாள். அப்புறம்.........!

அப்புறம் என்ன! இளைப்பாற வேண்டியதுதான். சாப்பிட்டுவிட்டு அவசர அவசரமாக இனி அவள் ஆஸ்பத்திரிக்கு ஓடவேண்டியிராது. ஜுரத்துக்கான 'சார்ட்' டைப் பார்க்க வேண்டிய அவசியம் இராது. வியாதியஸ்தர்களின் உளறல்களைப் பொறுமையாகக் கேட்க வேண்டிய தேவை ஏற்படாது. ஹரிப்பிரஸாத் வெளியே போய்விட்டான். இனி மேல் அவன் மாலையில்தான் திரும்புவான். அது வரைக்கும் படுக்கையில் படுத்து இளைப்பாற வேண்டியதுதானே அவள் வேலை!

மூன்று மணி இருக்கும். நிர்மலா எழுந்தாள். அறையில் உள்ள பொருள்களை அழகாக அடுக்கி வைத்தாள். அறையைப் பெருக்கினாள். படுக்கையைத் தட்டிப் போட்டாள். மின்சார விசிறியில் தூசி படிந்திருந்தது. அதையும் நன்றாகத் துடைத்தாள். மேஜையின்மேல் சிதறிக் கிடந்த காகிதங்களை அடுக்கி வைத்தாள். மேஜை டிராயர் பூட்டியிருக்கிறதா திறந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக அவள் மேஜை டிராயரை இழுத்தாள். அது கையோடு திறந்து கொண்டு வந்து விட்டது. அதிலும் காகிதங்கள் குப்பையாகச் சேர்ந்திருந்தன. ஒருவேளை நாம் பார்க்கக் கூடாத காகிதங்களாக இருந்துவிட்டால்......! நாம் தொடலாமா, வேண்டாமா என்று சற்றுத் தயங்கினாள். ஆனால் காகிதங்களுக்கடியிலே ஒரு போட்டோ இருந்ததைக் கவனித்த அவளால் அப்புறம் தன் ஆசையை அடக்க முடியவில்லை. என்ன இருக்கிறது என்றுதான் பார்ப்போமே என்ற முடிவுக்கு வந்து விட்டாள்.

அது ஒரு பழைய போட்டோ. ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு எடுத்ததாக இருக்க வேண்டும். அதைத் துணி கொண்டு துடைத்தாள். சட்டத்திலிருந்த கறுப்புப் புள்ளி இலேசில் போவதாயில்லை. ஹரிப்பிரசாதுடன்......

இந்தப் பெண்ணை அவளுக்குத் தெரியுமே! ஆஸ்பத்திரியில் ஏழு நாட்கள் வரை அமைதியும் கம்பீரமும் மென்மையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இந்த யுவதியின் வேதனை கலந்த முகத்தை அவள் பார்த்திருக்கிறாள். அவள் சரீரம் ஓரேயடியாக ஜில்லிட்டுக் குளிர்ந்து விட்டதையும் கூட அவள் கண்டிருக்கிறாள்.

அவள் ஹரிப்பிரசாதினுடைய முதல் மனைவி லீலா. பார்த்த முகம்தான். இருந்தாலும் இன்னொரு தடவை பார்ப்பதற்காக நிர்மலா குனிந்தாள். விசேஷக் கவர்ச்சி ஏதும் இல்லாமற் போன போதிலும் பார்ப்பதற்கு அந்த முகம் அழகாகத்தான் இருந்தது. அகன்ற நீண்ட மான் விழிகள் இல்லைதான். ஆயினும் அவற்றில் ஒரு கவர்ச்சி இருந்தது.

ஹரிப் பிரசாத் லீலாவை நேசித்தானா! நேசித்தான். நேசிக்காவிட்டால் லீலா ஆஸ்பத்திரியில் இருந்த பொழுது அவ்வளவு ஓடியாடி அவளுக்காகக் கஷ்டப்பட்டிருப்பானா! ஆபீசுக்குப் போவதை மறந்து அவள் பார்வையாளர் விடுதியிலேயே பகல் முழுதும் கழித்திருக்கிறானே! அடிக்கொருதரம், மணிக்கொருதரம் டெலிபோன் செய்து தொந்தரவு கொடுத்திருக்கிறானே! அப்படியிருக்கும் பொழுது அவனுக்கு அவளிடம் அன்பில்லாமலா இருக்கும்!

அன்று, லீலா கண் மூடிய தினத்தன்று பார்த்த ஹரிப்பிரசாதின் துயரமே உருவான முகம் இன்னும் நிர்மலாவுக்கு நினைவிருக்கிறது. வெகு நேரம்வரை தலையில் கைவைத்துக் கொண்டு உயிரற்ற சடலம் போல் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்த அவனை இலேசில் மறக்க முடியுமா!

இதையெல்லாம் எண்ணிய நிர்மலாவின் கண்களில் நீர் துளித்தது.

"மன்னி, வரலாமா!"

திடுக்கிட்டு நிர்மலா திரும்பிப் பார்த்தாள். "பிரபாவா! வா!" என்று வரவேற்றாள்.

குழந்தையை இடுப்பில் தூக்கிக் கொண்டு பிரபா உள்ளே நுழைந்தாள். பிரபா ஹரிப்பிரசாதுக்குத் தங்கை முறை ஆக வேண்டும். அவள் அவனுடைய சித்தி பெண். அவளுக்கு நிர்மலாவின் வயதுதான் இருக்கும். கல்யாணம் ஆகி ஆறு ஏழு வருஷங்கள் ஆகியிருக்கலாம். இதற்குள்ளாக அவள் குழந்தை குட்டிகள் பெற்றுப் பெரிய சம்சாரியாகி விட்டாள்.

நிர்மலாவின் தோள்பட்டை வழியாகக் குனிந்து பார்த்தவாறு பிரபா, "ஏன் மன்னி! என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்! அன்று

வின் முதல் மனைவியின் போட்டோவா! கல்யாணம் ஆனபிறகு நைனிதாலில் எடுத்த போட்டோ இது!" என்றான்.

"நைனிதாலிலா! கல்யாணம் ஆன பிறகு இரண்டுபேரும் நைனிதாலுக்குப் போயிருந்தார்களா, என்ன!" என்று வியப்புடன் கேட்டாள் நிர்மலா.

"ஆமாம், இருபது இருபத்தைந்து நாட்கள் அங்கே இருந்தார்கள். அண்ணா ஒரு மாதம் லீவு எடுத்துக் கொண்டு போயிருந்தார். இங்கிலீஷிலே 'ஹனிமூன்' என்று சொல்கிறார்களே, தெரியாது! அதற்காக!"

நிர்மலா அதைக் கேட்டு இலேசாகச் சிரித்தாள். "முதல் தடவை ஒரு மாதம் லீவு எடுத்தார். இந்தத் தடவை என்னடாவென்றால் கல்யாணம் ஆன மறுநாளே ஆபீசுக்குப் போய் விட்டாரே! ஏன் பிரபா! ஒரு மாதம் லீவு வேண்டாம். நாலைந்து நாட்களுக்குக் கூடவா அவர் இந்தத் தடவை லீவு எடுக்கக் கூடாது!" என்று கேட்டாள்.

"அடே அப்பா! அது எப்படி முடியும்! அப்பொழுது அண்ணாவுக்கு வயசு குறைச்சல். முதல் கல்யாணம் வேறு. அதனால்......"

"பிரபா! உங்கள் அண்ணாவுக்கு இது முதல் கல்யாணம் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் எனக்கு இது முதல் கல்யாணம்தானே!" என்று கேட்டாள் நிர்மலா.

மனத்தில் ஏற்பட்ட சிறு வருத்தம் சாயந்திரத்துக்குள் சரியாகி விட்டது. பிரபா இன்று இரவே ஊருக்குப் போய்விடுவாள். அவளுக்கும் குடும்பம் என்று ஒன்று இருக்கிறதோ, இல்லையோ! எவ்வளவு நாட்கள்தான் இங்கே இருக்க முடியும்! ஹரிப்பிரசாத் காரியாலயத்திலிருந்து வந்து விட்டான். குழந்தை! குழந்தையை என்ன செய்வது!

"குழந்தையை உன்னோடு அழைத்துக் கொண்டு போய் விடேன்!" என்றான் ஹரிப்பிரசாத். அதைக் கேட்டுப் பிரபா அளவற்ற மகிழ்ச்சி யுற்றாள். அவள் வீட்டில் இன்னும் நான்கைந்து குழந்தைகள் இருந்தன. ஆகவே, அங்கே குழந்தையைக் கவனித்துக் கொள்வதில் ஒரு குறையும் ஏற்படாது!

பின்னால் நின்று கொண்டிருந்த நிர்மலா, அண்ணாவும் தங்கையும் பேசிக் கொண்டிருந்த இந்தப் பேச்சைக் கேட்டாள். உடனே அருகில் வந்து குழந்தையைத் தன் இடுப்பில் தூக்கிக் கொண்டு, அமைதியான குரலில், "பிரபா! அதெல்லாம் கூடாது. குழந்தை இங்கேயே இருக்க வேண்டியதுதான். நான் கவனித்துக் கொள்கிறேன். குழந்தைக்கு நானும் தாயார் தானே!" என்றாள்.

பிரபா புறப்பட்டுப் போனதும் ஹரிப்பிரசாத் நிர்மலாவின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, "நிஜமாக உன்னால் முடியுமா, நிர்மலா!" என்று கேட்டான்.

நிர்மலா தன் கையை விடுவித்துக் கொள்ளவில்லை. "என்ன முடியுமா என்று கேட்கிறீர்கள்!" என்று கேட்டாள்.

"அதுதான் குழந்தையைக் கவனித்துக் கொள்வது!"

"ஏன் முடியாது! நான் மாற்றாந்தாய் ஆயிற்றே! குழந்தையைக் கஷ்டப் படுத்துவேனோ என்று எண்ணுகிறீர்களா!" என்று கேட்டாள் நிர்மலா.

ஹரிப்பிரசாத் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ஒருங்கே தாண்டவமாட, "இல்லை, இல்லை. அதற்காகச் சொல்லவில்லை. உன்னால் முடியும் என்பது எனக்குத் தெரியும். நீ அப்படியெல்லாம் குறுகிய நோக்கம் படைத்தவள் அல்ல என்பதையும் அறிவேன். ஆமாம், அப்படியானால் சியாமளாவையும் அழைத்து வந்து விடட்டுமா!" என்று கேட்டான்.

சியாமளா வேறு யாரும் இல்லை. ஹரிப்பிரசாதின் முதல் மனைவிக்குப் பிறந்த பெண். கல்யாணத்துக்கு முன்னால் அவன் சியாமளாவைப் பாட்டியின்வீட்டுக்கு அனுப்பிவிட்டான்.

"அழைத்துக் கொண்டு வருவதற்குக் கேட்பானேன்! அவளை எப்பொழுதுமே பாட்டியின் வீட்டில் விட்டு வைத்திருக்கப் போகிறீர்களா!" என்று கேட்டாள் நிர்மலா.

அவர்கள் கட்டிலுக்கருகிலேயே வேறு ஒரு சிறிய கட்டிலும் போடப்பட்டது. அதில் ஒரு சின்னஞ் சிறு படுக்கை. அதன் மேல் ஆயில் கிளாத். அதில்தான் சின்னக் குழந்தை தூங்க வேண்டும்.

பிரபாவை வண்டியேற்றி விட்டு வருவதற்காக ஹரிப்பிரசாத் போனான். சின்னக் குழந்தையைத் தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டாள் நிர்மலா. குழந்தை தன் படுக்கையில் தூங்க விரும்பவில்லை. ஆகவே, நிர்மலா குழந்தையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள். இந்தக் குழந்தையின் மூலம்தானே அவளுக்கும் ஹரிப் பிரசாதுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது!

*

லீலா இறந்த பிறகு ஒருநாள் ஹரிப்பிரசாத் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தான். பல நாட்கள் எண்ணெயையே காணாத பரட்டைத் தலை, களையிழந்த முகம், உணர்ச்சி யிழந்த கண்கள். நிர்மலாவைப் பார்த்ததும் அவன் எழுந்து நின்றான். இன்னமும் அவனுடைய அந்த உருவம் நிர்மலாவின் கண்களிலே நர்த்தனம் புரிந்துகொண்டு தானிருந்தது. நிர்மலாவைக் கண்டதும் அவன் எழுந்து, "அப்பொழுது என் மூளையே மழுங்கிப் போயிருந்தது. உங்களுடைய கணக்கைத் தீர்க்கும் நிலையில் அப்பொழுது என் மன நிலை இல்லை. மற்ற நர்ஸ்களுக்கும் தர்பானுக்கும் இந்த ரூபாயைக் கொடுத்து விடுங்கள். அப்புறம்......" என்றான்.

"அப்புறம் என்ன!" என்று அதிகார தோரணையில் கேட்டாள் நிர்மலா.

ஹரிப் பிரசாத் சங்கோசத்தினால் தலை குனிந்தான். பிறகு சற்றுத் துணிவை வரவழைத்துக் கொண்டு, "நீங்கள் அவளுக்காக—அதாவது என் மனைவிக்காக எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். நான் கொடுப்பதைத் தவறுதலாக எடுத்துக் கொள்ளாமல்......" என்று சொல்லியவாறே அவள் கையில் பத்து ரூபாய் நோட்டுக்கள் இரண்டைத் திணித்தான். நிர்மலா அதை வாங்கிக் கொள்ளும்பொழுது சற்றுத் துணுக்குற்றாள். ஆனால் திருப்பிக் கொடுத்து விட அவளுக்குக் கை வரவில்லை.

சில நிமிஷங்கள் இருவரும் பேசாமல் நின்று கொண்டிருந்தனர். நிர்மலா சிறிது நேரம் கழித்து, "சின்னக் குழந்தை எப்படி இருக்கிறது!" என்று கேட்டாள்.

"உயிருடன் இருக்கிறது. இன்னும் உயிருடன் இருக்கிறதே, இதுவே ஒரு ஆச்சரியம் இல்லையா! ஏன், அம்மா! பொதுவாக இவ்வளவு சின்னக் குழந்தைகள் உயிருடன் இருப்பது சிரமம்தானே! ஏதோ அதுக்கு ஒரு வேலைக்காரி போட்டிருக்கிறேன். இருந்தாலும் அவளிடம் முழுசாக நம்பிக்கை ஏற்படமாட்டேன் என்கிறது. ஒரு நல்ல தேர்ச்சி பெற்ற நர்ஸ் கிடைத்தால்......" என்று சொல்லிவிட்டு ஒரு நிமிஷம் பேசாமல் இருந்தான். பிறகு, "உங்களுக்குத் தெரிந்து யாராவது ஒரு நல்ல நர்ஸ் கிடைப்பார்களோ!" என்று கேட்டான்.

ஹரிப் பிரசாத் வேறு நர்ஸ் வேண்டுமென்று சொன்னது என்னவோ உண்மைதான். ஆனால் அவனுடைய முகபாவம் வேறு நர்ஸ் வேண்டாம். நீதான் வேண்டும் என்று சொல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள நிர்மலாவுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. லீலா ஆஸ்பத்திரியில் இருந்தபொழுது நிர்மலாவுக்கும் அவளுக்கும் நட்பு ஏற்பட்டு இருவரும் இணை பிரியாத் தோழிகளாகவே ஆகி விட்டனர். ஆகவே, நிர்மலா வந்தால் எவ்வளவு கவலை குறையுமோ, அவ்வளவு வேறு நர்ஸ்கள் வருவதால் குறையாது என்பது அவன் எண்ணம். ஆயினும் அவன் அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள முடியுமா!

"நான் வந்தால் உங்களுக்குச் சௌகரியம் தானே!" என்று நேரிடையாகக் கேட்டு விட்டாள் நிர்மலா.

"நீங்கள்..........நீங்கள் வருவீர்களா!......" ஹரிப் பிரசாதின் கண்கள் பிரகாசமடைந்தன. "அப்படியானால் ரொம்ப ரொம்ப நல்லது!" என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

"சரி. நான் இடை யிடையே வந்து போய்க் கொண்டிருக்கிறேன். நான் அதிக நேரம் தங்கிக் கவனிக்க முடியாது. ஆகவே, இப்பொழுது போட்டிருக்கும் வேலைக்காரியை நிறுத்தி விடாதீர்கள்! அவளும் வந்து போய்க் கொண்டிருக்கட்டும்" என்றாள் நிர்மலா.

ஹரிப்பிரசாத் அவளுக்குத் தன்னுடைய விலாசத்தைக் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்தான்.

(அடுத்த இதழில் முடியும்.)

படித்துப் பாருங்கள்!

திருவள்ளுவர்

பத்து மாதங்களுக்கு முன்பு திருச்சிராப்பள்ளியில் "திருவள்ளுவர்" தோன்றித் தமிழ் நாட்டில் உலாவி வருகிறார் என்பதை அறிந்து மிகவும் மகிழ்கிறோம். தமிழ் மறை தந்தவரும் தமிழ் நாட்டின் ஒப்பற்ற கவிஞருமாகிய திருவள்ளுவரின் பெயரால் திருச்சிராப்பள்ளியில் நடந்துவரும் மாதப் பத்திரிகையை மனப் பூர்வமாக வரவேற்கிறோம். திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றி ஆராய்ச்சி நிறைந்த கட்டுரைகள் இந்தப் பத்திரிகையில் மாதந் தோறும் வெளியாகின்றன. அமரர் திருவள்ளுவரைப் பற்றி எவ்வளவோ ஆராய்ச்சி செய்யலாம்; எழுதலாம்; எழுதிக் கொண்டேயிருக்கலாம். தமிழ் நாடு உள்ள வரையில் திருக்குறள் நின்று நிலவும். திருக்குறள் உள்ள வரையில் அந்தத் தெய்வ நூலைப் பற்றிய ஆராய்ச்சிகளும் வந்து கொண்டுதானிருக்கும். திருவள்ளுவர் ஆராய்ச்சிக் கென்றே இந்தப் பத்திரிகையைத் தொடங்கி அறிஞர்க்கு விருந்தாகும் முறையில் நடத்தி வரும் திரு ஜி. வரதராஜன் பி. ஏ. அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம். விலாசம்: திருவள்ளுவர் நிலையம், புத்தூர், திருச்சிராப்பள்ளி. தனிப் பிரதி விலை 4 அணா.

பாலும் பாவையும்

"விந்தன்" எழுதிய இந்த நீண்ட சிறு கதை "கல்கி" இதழ்களில் தொடர்ந்து பிரசுரமானது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். ஆடவர் பெண்டிரின் புற உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகளையும் அடி உள்ளத்தில் மறைந்து கிடக்கும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தி மிக விறுவிறுப்புடன் ஓடும் நடையில் இக் கதையை ஆசிரியர் எழுதி யிருக்கிறார். மனித உணர்ச்சியின் வெள்ளம், புயல், சண்டமாருதம் ஆகியவற்றை இந்தக் கதையில் காணலாம். மேலே என்ன நடக்கப்போகிறது என்று அறிந்து கொள்ளும் பரபரப்பு இக் கதையைப் படிக்கும் நேயர்களின் உள்ளத்தில் ஆரம்பத்திலேயே உண்டாகிவிடும். போகப் போக அந்த ஆர்வம் சண்டமாருதத்தின் வேகத்தை அடையும். கதையின் உயர்வைப் புத்தகத்தின் உருவ அமைப்பும் சித்திரச் சிறப்பும் மேலும் உயர்த்தி மேன்மையுறச் செய்கின்றன. விலை ரூ. 3—8—0. விலாசம்: ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை.

கம்பர் கவிதைக் கோவை

எத்தனையோ பாக்கியங்களைப் பெறலாம். ஆனால் கம்பன் கவியமுதை அனுபவிக்கும் பாக்கியம் பெறவில்லை என்றால் அத்தனை பாக்கியங்களும் பெற்றுத்தான் என்ன பயன்!

இப்படி எண்ணுபவர்களுக்கு இப்போது நல்ல காலம் பிறந்திருக்கிறது. கம்பன் கவிதைகள் பல பதிப்புகளாக வெளிவருகின்றன. கன்னாகம் ராமநாதன் கல்லூரி ஆசிரியர் அ. செ. சுந்தரராஜன் பி. ஏ. கம்பராமாயணத்தில் முதல் மூன்று காண்டங்களிலுள்ள அருமையான கவிகளைத் திரட்டித் தக்க குறிப்புரையுடன் வெளியிட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரித் தலைவர் திரு சு. நடேச பிள்ளை பி. ஏ., பி. எல்., எப். ஆர். இ. எஸ். நல்ல முன்னுரை அளித்திருக்கிறார்கள் இப் புத்தகத்திற்கு. [பிரசுரம்: அ. செ. சுந்தரராஜன், பி. ஏ. இராமநாதன் கல்லூரி, கன்னாகம், இலங்கை. விலை: ரூ. 4.]

இலங்கையில் கொந்தளிப்பு!

ரஜனி

கொழும்பு, ஜூலை 19—

இலங்கை அரசியலில் இதுவரை வேறு என்றுமே ஏற்பட்டிராத அளவு பரபரப்பும் நெருக்கடியும் ஏற்பட்டு, சேனநாயகா மந்திரி சபையின் விழி பிதுங்கி நிற்கின்றது. இதற்குக் காரணம் சர்க்கார் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வாதிகாரப் போக்குதான். அந்தக் கட்சிக்குப் பார்லிமெண்டு சபையில் தனியாக மெஜாரிட்டி கிடையாது. சிங்கள மகாசபைக் கட்சியும் சில சுயேச்சை அங்கத்தினர்களும் சேர்ந்தே ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்கு வர முடிந்தது. மந்திரி சபைக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரத் தலைவர் ஸர் ஜான் கொத்தலாவலைக்கும் சிங்கள மகாசபைத் தலைவர் ஸ்ரீ பண்டாரநாயகாவுக்கும் ஓயாத சண்டை; தீராத பிணக்கு. சிங்கள மகா சபையின் சமீப மகா நாட்டில் சிங்களத்தைத் தேசிய மொழியாக்க வேண்டும் என்றும் குடியைக் குறைக்க வேண்டும் என்றும் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்தத் தீர்மானங்களை ஸ்ரீ பண்டார நாயகா சர்க்கார் கட்சி நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆலோசனைக்குச் சமர்ப்பித்தார். இதுவரை சிங்கள மகாசபைத் தீர்மானங்களைப் பரிசிலனைக்கு எடுத்து வந்திருந்த சர்க்கார் கட்சி அன்று பண்டார நாயகா சமர்ப்பித்த தீர்மானங்களைப் பூர்வாங்க ஆலோசனைக்கு எடுக்கவும் மறுத்துவிட்டது. இதன் பலனாக ஸ்ரீ பண்டார நாயகா ஸ்தல ஸ்தாபன மந்திரி பதவியை ராஜினாமாச் செய்து மந்திரி சபையிலிருந்து வெளியேறினார்.

ஸ்ரீ பண்டாரநாயகா போய்விட்டால் பிரமாத கஷ்டமொன்றுமில்லை யென்று பிரதமர் சேனநாயகாவும் ஸர் ஜான் கொத்தலாவலையும் இருமாந்திருந்தார்கள். ஊறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையைப் போல ஸ்ரீ பண்டார நாயகாவைப் பகைத்துக் கொண்டது பெரிய அரசியல் நெருக்கடியை விளைவித்து விட்டது. ஸ்ரீ ஜி. ஆர். டி. ஸில்வா, ஸ்ரீ ஏ. பி. ஜயசூரியா ஆகிய இரண்டு உதவி மந்திரிகள் சர்க்கார் கட்சியின் சர்வாதிகாரப் போக்கை ஆட்சேபித்து இவ்வாரம் ராஜினாமாச் செய்தார்கள். அவர்களோடு மற்றும் மூன்று சிங்கள மகாசபை அங்கத்தினர்களும் சர்க்கார் கட்சியை விட்டு எதிர்க்கட்சியில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். இதன் விளைவாக இன்று கூடிய பார்லிமெண்டில் சர்க்கார் கட்சியில் 50 பேர்களும் எதிர்க்கட்சிகளில் 43 பேர்களுமிருந்தனர். சர்க்கார் கட்சி அங்கத்தினர்களில் நால்வரும் எதிர்க் கட்சி அங்கத்தினர்களில் இருவரும் வெளிநாடு சென்றிருக்கின்றனர். அவர்களுக்கு உடனே திரும்பி வருமாறு அவசரத் தந்திகள் பறந்திருக்கின்றன.

சர்க்காரின் அப்பீல்

சேனநாயகா சர்க்காருக்கு எவ்விதத் தன்பங்கள் ஏற்பட்ட பொழுதிலும் இந்தியர் விஷயத்தில் அவர்களுடைய கொள்கை மாறப்போவதில்லை. உதாரணமாக, ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயரின் பெயரைத் திரும்பவும் ஓட்டர் ஜாபிதாவில் சேர்க்க வேண்டுமென்றும் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டமும் தேர்தல் திருத்தச் சட்டமும் அரசியல் திட்டத்துக்கு முரண்பட்டவைகளென்றும் கொழும்பு ஜில்லா நீதிபதி தீர்ப்புக் கூறியதை ஆட்சேபித்து இவ்வாரம் சர்க்கார் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் கொடுத்திருக்கிறார்கள். அதோடு பிரஜா மனுக் கொடுக்கும் இந்தியர்களின் குடும்பங்கள் மனுக் கொடுக்கும் சமயத்தில் இலங்கையிலிருந்தால் போதுமென்று சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்தும் சர்க்கார் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்திருக்கின்றனர். இதை ஜுனுப் அஸீஸ் தமது பட்ஜட் பிரசங்கத்தில் குறிப்பிட்ட போது "வரிப்பணத்தைச் செலவிட்டு பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் கொடுக்கும் சர்க்கார், பணவசதியில்லாத காங்கிரஸ் பிரிவி கவுன்ஸிலுக்கு வந்து எதிர்வாதம் செய்யாதென்று நினைக்கிறார்கள். என்ன பணக்கஷ்டமேற்பட்டாலும் இந்த ஜீவாதாரமான பிரச்னையில் நாங்கள் ஒரு முடிவு காணுமல் விடமாட்டோம்!" என்று பலமாக எச்சரித்தார்.

*

புதுமைப் பித்தன் குடும்ப உதவி நிதி

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தொடங்கியுள்ள மேற்கூறிய முயற்சிக்குக் கொழும்பிலுள்ள தமிழன்பர்கள் சிறந்த ஆதரவு அளித்து வருவது அறிந்து மிக மகிழ்கிறோம். கல்வி மந்திரி கனம் கே. கனகரத்தினம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிதிக்குழு ஏற்பட்டிருக்கிறது. ஜூலை 17உ வரைக்கும் ரூ. 2100 வசூலாயிருப்பதாக நிதிக்குழுவின் கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ ஆ. குருஸ்வாமி தெரிவித்திருக்கிறார். வசூல் விவரம் பின்வருமாறு: ரூ.101 அளித்தவர்கள்: ஜி. டி. டபிள்யூ. விக்ரமரத்ன அண் கோ; கே. எஸ். வி. சுப்பிரமண்ய பிள்ளை அண் கோ; கே.பி. பெரியநாயகம் பிள்ளை; ரூ. 100 அளித்தவர்கள்: சிவ. மணி. ஏ. எம். முத்தையாச் செட்டியார் அண் கோ; கே. வி. எஸ். சுந்தரம்; பி. கல்லசிவம்; பி. எல். எஸ். சேவுகன் செட்டியார்; ஆர். புன்னைவனம் பிள்ளை; ஆர். எம். சீதாராம் நாயுடு அண் கோ; எம். எஸ். டி. கே. எம். பெரியண்ண பிள்ளை அண் கோ; ரூ. 51 கொடுத்தவர்கள்: எஸ். ஆறுமுகம் அண் பிரதர்ஸ்; ஆர். ஆறுமுகம் பிள்ளை, எம். எஸ். எஸ். எம். ஜி. அண் கோ;

ச. ஆறுமுகம் பிள்ளை; நாதன் அன் கோ; என். பி. கே. அன் கோ; நியூ ஸ்டோர், க. சிவசங்கரன் பிள்ளை, க. க. மு. ப. அன் கோ; வி. மாணிக்கம் அன் பிரதர்ஸ்; ரூ. 25 கொடுத்தவர்கள்: சுப்பையாப் பிள்ளை; இப்ராஹிம் பாய்; எம். ஸ்ரீரங்கநாதன்; ஆர். எம். எஸ். சுப்பையாப் பிள்ளை அன் கோ; எஸ். டி. சோமசுந்தரம் பிள்ளை; எம். திருப்பதி; எஸ். பழனிசாமி நாடார் அன் கோ, தி. சொக்கலிங்கம் பிள்ளை, சூரியன் அன் கோ; சி. வ. அருணாசலம் பிள்ளை; சோ. சிவபாத சுந்தரம்; ஏ. சங்கர அய்யர் அன் சன்ஸ். மற்றும் பல அன்பர்கள் ரூ. 25 க்குக் குறைந்த தொகைகளை நன்கொடையாக அளித்திருக்கிறார்கள்.

வட்ட மேஜை

செகண்டரி கிரேட் ஆசிரியர்

நான் பத்து ஆண்டுகள் அனுபவமுற்ற ஆசிரியன். இத்தனை ஆண்டுகளாக என் அனுபவமும் குறையும் சற்று ஆராய விரும்புகிறேன்; எங்கள் நிலை கேவலமாக உளது. அரசாங்கத்தார் கொடுக்கும் ஊதியம் மிகக் குறைவே. மேலும் கல்வி மகாநாடுகளில் நிறைவேறும் தீர்மானங்கள் வருடா வருடம் குறைவின்றி இருப்பினும் அவை செகண்டரியாகவே உளது. ஏனெனில் ஆசிரியர்கள் ஒன்றும் துணிந்து செய்துவிட மாட்டார்கள் அல்லவா! எனது மாதச் சம்பளம் பதினொரு வருட ஊழியத்திற்குப் பிறகு (63 + 24) தான்.

எங்கள் தொழில் மிக மென்மையான தெனினும் இத்தொழிலுக்கு வருபவன் தன் முந்திய பாவங்களின் பயனை அனுபவிக்கவே என்பது திண்ணம். நாங்கள் எல்லாப் பாடங்களையும் அதாவது (Drg., Drill) முதல் தமிழ் உள்பட இதர பாடங்களையும் 1-வது முதல் 8-வது வரை போதிக்க வேண்டும். Extra Curricular activities யும் கவனிப்பவர்கள் நாங்களே. இவ்வளவு இருக்கும் எங்கள் ஊதியம் மிகக் குறைவு. எங்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கிடையாது.

குடும்ப நிர்வாகம்:-ஆசிரியன், அவன் மனைவி 4 குழந்தைகள், தாயார் அடங்கிய ஒரு குடும்பத்தை இந்தச் சென்னையிலே நடத்தக் குறைந்த பக்ஷம் மாதம் ரூ. 135 க்குக் குறையாது தேவை. அதிக ஆடம்பரமில்லை. சினிமா கனவுதான். துணிமணி மிக மட்ட ரகம்தான். வாடகை 25 ரூ; தோட்டி, வாசல்கூட்ட 5 ரூ; கறிகாய் 7½ ரூ; ரேஷன் 25 ரூ; விறகு. கரி 12 ரூ; எண்ணெய், வெண்ணெய் (8 + 4) 12 ரூ; பருப்பு தினுசு 8 ரூ; பால் மோர் 25 ரூ; இதர சாமான்கள் 25 ரூ; சலவை வகையறா 5 ரூ; (இவை தவிர மருந்து பள்ளிக்கூடச் சம்பளம் முதலியன உள.)

உபாத்தியாயர்களுக்கு வாடகைக்கு விட முன் வருபவர் சிலரே. காரணம் எப்படி வாடகை கொடுக்க முடியும் என்ற பிரச்னை.

ஒரு யோசனை: பணக்கார குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளில் ஒருவர் கட்டாயம் கல்வித் தொழிலை ஏற்க வேண்டுமென்ற கட்டாய முறையை அரசாங்கம் கையாள வேண்டும். தியாகிகளுக்கு மான்யம் விடுவது போல இந்த வாயில்லாத தன்னலமற்ற தியாகிகளுக்கு மான்யம் வழங்குவது உசிதமல்லவா!

தி. நகர்
8—7—51 தி. ரா. கிருஷ்ணமூர்த்தி

துணைப்பாடப் புத்தகம்

கோவையில் முனிசிபல் ஹைஸ்கூல்களில் "4-வது பாரத்தில்" தேவரகசியம் என்னும் புத்தகம், தமிழ்த்துணைப் பாடமாக வைக்கப் பட்டுள்ளது.

ஆனால் "தேவ ரகசியம்" என்னும் நூல் எடுத்த எடுப்பில், ஆரம்பத்தில், முதற் சொல் "சாகப் போகிறவர்களுக்கு" என்ற அமங்கலச் சொல்லைக் கொண்டு எழுதப் பட்டிருக்கிறது.

"வாழ்வும் தாழ்வும், கேடும் செல்வமும், ஓடும் பொன்னும், உறவும், பகையும்" வெவ்வேறாக எண்ணாமல், ஒன்றாக நோக்கும் துறவிகளுக்கு, வாழ்வும் சாவும் ஒன்றே. பள்ளிச் சிறார்கள் வாழப் பிறந்தவர்கள். வாழ்வதற்காகப் படிக்கின்றவர்கள்.

நூல் இயற்றப்படும் பொழுது ஆரம்பத்தில் "சீர் - எழுத்து - பொன்-பூ-திரு-மா-உலகு-மணி ஸ்ரீ" என்பன போன்ற மங்கலச் சொற்களில் ஒன்றை முதற் சொல்லாக வைத்து நூல் எழுதுவது மரபு.

இந்நூலாசிரியர், தமது பெயருக்கு முன்னால் "ஸ்ரீமத்" என்றும், தமது ஊர்ப் பெயருக்கு முன்னால் "திரு" என்றும், மங்கலச் சொல் சேர்க்க மறந்தாரில்லை.

நூலாசிரியர் எக்காரணம் கொண்டோ இவ்வாறு "அமங்கலச் சொல்லால்" ஆரம்பித்துள்ள நூலை, "டெக்ஸ் புக் கமிட்டி" யாவது "முனிசிபல் நிர்வாகிகளா"வது கவனித்திருக்கக் கூடாதா!

கோயமுத்தூர்
27—6—51 கே. என். ஆறுமுகம் பிள்ளை

★

பறி கொடுப்பதா?

நமது "கல்கி" ஜூன் 24-ம் தேதி இதழில் "கட்டுக்கதையே வெட்கப்படு" என்ற தலைப்பின் கீழ் தாங்கள் எழுதியிருந்த விஷயத்தைக் கண்டு "அதிகம்" வெட்கப் படுவதற்கில்லை. ஏனென்றால் 1—4—49-ல் நான் நாங்குனேரி தாலுகா விவசாய ஆபீஸருக்கு ரூ. 3—0—0 சந்தா தொகை மணியார்டர் செய்து "மேழிச் செல்வம்" என்ற விவசாயப் பத்திரிகை அனுப்பும்படி விவரமும் எழுதியிருந்தேன். வருடம் இரண்டரை ஆகியும் இதுவரை "மேழிச் செல்வம்" பத்திரிகை அனுப்பவில்லை. இது விஷயமாய் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அநேக கடிதங்கள் எழுதியும் பிரயோஜனம் இல்லை. இதற்காக வெட்கப்படுவதா! அல்லது பணத்தைப் பறி கொடுத்துத் துக்கப்படுவதா!

வடக்கன்குளம்
23—6—51 எஸ். ஜி. அருள்மிக்கேல்

உய்வு உண்டா?

பீஷ்மன்

ரயில் மதுரையில் வந்து நின்றது. சாத்தியிருந்த ஜன்னல் கதவைத் திறந்து மெதுவாகத் தலையை வெளியே நீட்டினேன். சிறு தூற்றல் போட்டுக் கொண்டிருந்தது.

புறப்படுவதற்கு அறிகுறியாக ரயில் ஒரு முறை உரக்க அலறியது. பாக்கப் பாக்க ரயிலை நோக்கி ஒருவன் ஓடி வந்து கொண்டிருந்தான். அவன் மீது என் பார்வை விழுந்தது.

அடுத்த நிமிஷம் நான் தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டேன். நான் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? அது எனக்கே புரியவில்லைதான். அவன்......அவன்...... இங்கே வந்து தொலையாமல் இருக்க வேண்டுமே! வந்தால்?......அவனுடன் எப்படிப் பேசுவது?—இப்படி எத்தனை எத்தனையோ சிந்தனைகள், அவனைப் பார்த்த ஒரு கணத்துக்குள்ளாக என்னுள் மோதிப் புடைத்தன.

அதற்குள் அவன் ரயிலை நெருங்கி அடுத்த பெட்டியினுள் நுழைந்து கொண்டிருந்தான். என்னை அவன் கவனிக்கவில்லை. உள்ளே புழுங்கிய புழுக்கத்தைப் பெரு மூச்சாக எறிந்தேன். ரயில் அதற்கு எதிர் மூச்சு விட்டு விட்டு நகர்ந்தது.

மரங்கள், மாளிகைகள், வயல்கள் எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு ரயில் முன்னே விரைந்தது. காட்சியின் பிரமைதான்! ஆயினும்......

என் நினைவு கால வரம்பையும், வேக வரம்பையும் மீறிப் பின்னுக்குத் தள்ளி அந்த நாளுக்கு என்னை எடுத்துப் பறந்தது.

*

மிலிட்டரியிலிருந்து கண் கோளாறு காரணமாக டிஸ்சார்ஜ் ஆகி ஊருக்கு வந்திருந்த என்னைத் தன்னுடன் வந்து ஒரு மாதம் தங்கியிருக்கும்படி என் சித்தப்பா அழைத்திருந்தார். நான் அம்பாசமுத்திரத்திலிருந்த அவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன்.

சித்தப்பா வீட்டு மாடி முன் வராந்தா பால்கனி மாதிரி அமைந்திருந்தது. அங்கே ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு நான் ஏதாவது புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருப்பேன். மாலை நேரங்களில் தாம்ரவருணி ஆற்றின் கரைக்குப் போய் உட்கார்ந்து மோனச் சிந்தனையில் மூழ்கிவிடுவேன். இப்படியே ஒரு வாரம் கழிந்தது.

அன்று நல்ல வெய்யில். சாப்பிட்டு விட்டு வந்து பால்கனியில் சாய்வு நாற்காலியில் சாய்ந்ததும் தூக்கம் கண்ணைச் சுற்றியது.

நான் தூங்கி விழித்த பொழுது மணி மூன்று இருக்கும். தெளிவில்லாத கலக்க நிலையுடன் எழுந்து கையைக் கைப்பிடிச் சுவரின்மீது ஊன்றிக் கொண்டு வெளியே கவனித்தேன். எதிர் வீட்டு மாடி ஜன்னலோரமாக இளம் பெண்ணொருத்தி நின்று கொண்டிருந்தாள். அடிக்கும் காற்றில் அவளது கருங் கூந்தல் கலைந்து நெற்றியின் மீது கேசம் புரண்டது. நல்ல கட்டமைந்த உடல்! குறுகுறுக்கும் கண் வீச்சு! தன் கரங்களை உயர்த்தித் தலையைச் சரிப்படுத்திக் கொண்டு நின்ற அவள் தோற்றம் என்னைக் கிளுகிளுக்கச் செய்தது.

கைக் குட்டையை எடுத்து முகத்தை ஒரு முறை நன்றாகத் துடைத்துக் கொண்டேன்.

அவள் கண்ணொளி பளிச்சென ஒரு வெட்டில் என் கண்களைக் கூச அடித்தது. அந்தக் குங்கும இதழ்களில் குமிழியிட்ட குறுநகை என்னைக் கொள்ளை கொண்டே போய்விட்டது.

இப்படித் தூங்கி வழியும் முகத்துடனா, ஒரு பெண்ணின் முன் நின்று கொண்டிருப்பது?

உள்ளே போய், முகம் கழுவி, தலையை வாரி விட்டுக் கொண்டு வந்தேன். அவள் இன்னமும் அங்கேயேதான் நின்று கொண்டிருந்தாள்.

ஜன்னல்மீது விழுந்த மஞ்சள் வெய்யில் அவளது மாம்பழக் கன்னங்களில் பட்டுப் பளபளத்த அந்தக் காட்சி..! நான் அதை அப்படியே ரசித்துக் கொண்டிருந்தேன்.

“ராஜு......ராஜு......எவ்வளவு நேரம் தூங்குவது? எழுந்து வா!” என்று கீழேயிருந்து என் சித்தி உரத்த குரலில் அழைத்தாள். பாவம், ‘நான் அப்பொழுதே தூங்கி எழுந்து விட்டேன்’ என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? எதிர் வீட்டுப் பெண்ணின் அழகை என் கண்களால் ஒருமுறை நன்றாக அள்ளிப் பருகிவிட்டு, வேண்டா வெறுப்புடன் கீழே இறங்கிச் சென்றேன்.

அப்பொழுது என் மனத்திலே புகுந்த அவளைப் பற்றிய சிந்தனை நிமிடத்திற்கு நிமிடம் வளர்ந்து எனக்குச் சிறிதும் ஓய்வே இல்லாமல் செய்து விட்டது.

அன்று மாலை வெளியே புறப்பட்ட நான் வாசலில் வந்து நின்றேன். என் பார்வை என் உரிமையின்றியே எதிர்ப்புறம் விரைந்தது. நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை!

என் 'இருதயராணி' ஊஞ்சலில் தொங்கிக் கொண்டிருந்த பழுதாலைப் பிடித்தவாறு நின்று கொண்டிருந்தாள். ஊஞ்சலில் வயதான மனிதர் ஒருவர் பத்திரிகை படித்துக் கொண்டே அவளுடன் ஏதோ பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அவள் முகத்திலே ஏதோ பரபரப்பு தெரிந்தது. அவள் மெல்லிய புன்முறுவலுடன் என்னைச் சுட்டிக் காட்டி, அந்த மனிதரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். என் மனத்திலுள்ளே நிலைநாக்கி யிருந்த எண்ணம் கிளர்ந்து கொடுத்தது.

'அங்கேயே நின்று கொண்டிருந்தால், அவர்கள் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்களே' என்ற எண்ணத்துடன் மெதுவாகத் தெருவில் இறங்கி நடந்தேன். எங்கெல்லாமோ நான் சுற்றித் திரிந்து கொண்டிருந்தேனே தவிர என் மனம் எதிர் வீட்டு வாசலிலேயே தங்கிவிட்டது. 'அவள் என்னை மனமார நேசிக்கத் தான் செய்கிறாள்' என்று என் உள் மனம் முணுமுணுத்தபோது நான் இந்திர லோகத்திலேதான் சஞ்சரித்தேன்.

நான் திரும்பியபொழுது அவள் அங்கே இல்லை. அந்தப் பெரிய மனிதர் மட்டும் தனியே உட்கார்ந்து கொண்டிருந்தார். என்னை அங்கே வரும்படி சைகை காட்டினார் அவர். வியப்பும் வகை தெரியாத ஒரு வித பயமும் என்னைச் சூழ்ந்து கொண்டன. 'என்ன எதற்குக் கூப்பிடுகிறார்?' என்று எண்ணிக் கொண்டே அவரெதிரே போய் நின்றேன்.



“உட்காருங்கள்......” என்றார் அவர் மிகவும் மரியாதையாகவே.

அவருக்கு எதிரிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். என் கண்கள் நிலைவாசற்படியருகே எதையோ ஆர்வமுடன் தேடிக் கொண்டிருந்தன.

“நீங்கள் புனாவில் தான் வேலை பார்த்து வந்தீர்களாமே! எனக்குத் தெரியாது. என் பெண் பத்மா தான் இன்று காலை சொன்னாள்” என்று பேச்சை ஆரம்பித்தார் அவர்.

அவர் பேச்சில் நான் அவ்வளவாக ஈடுபடவில்லை. ஆனால் அந்தப் பெயரை மிகவும் ரசித்தேன். வெளிக்குக் கேட்காமல் மனசுக்குள்ளாக 'பத்மா... பத்மா...' என்று சொல்லிப் பார்த்துக் கொண்டேன்.

“உங்களிடம் ஒரு விஷயம் கேட்கலாம் என்றிருக்கிறேன்...” என்று பீடிகைபோட்டு என்னைத் தன் பேச்சுக்கு இழுத்தார் அவர்.

“தயக்கம் என்ன? தாராளமாகக் கேட்கலாமே!” என்றேன் நான்.

“ஒன்றுமில்லை. என் சிநேகிதரின் பையனொருவன் ரொம்ப நாட்களாக இங்கேயே தான் வளர்ந்து வந்தான். இரண்டு வருஷத்திற்கு முன்புதான் மிலிட்டரியில் போய்ச் சேர்ந்தான். அவனிடமிருந்து அடிக்கடி கடிதம் வந்து கொண்டிருந்தது. இப்பொழுது நாலு மாதங்களாக அவன் எங்கேயிருக்கிறான் என்று கூடத் தெரியவில்லை.”

அவர் முகத்தில் படர்ந்த கவலையை உன்னிப்பாகக் கவனித்துவிட்டு நான் 'உம்' கொட்டினேன்.

அவர் தொடர்ந்தார்: “என் கவலை கிடக்கட்டும். என் பெண் பத்மாவைப் பார்த்தால் தான் அதைவிடக் கஷ்டமாக இருக்கிறது. அந்தப் பையன் பேரில் அவளுக்கு உயிர். உங்களிடம் சொன்னால் என்ன?... 'எப்போ வருவாரோ?' என்று அவனுக்காகவே தான் அவள் தவம் கிடக்கிறாள். அவன் கடைசிக் கடிதம் புனாவிலிருந்து தான் வந்ததாம். நீங்களும் புனாவில்தான் இருந்ததாக உங்கள் சித்தி சொன்னாளாம். உங்களிடம் 'அவனைப் பற்றி ஏதாவது தெரியுமா?' என்று விசாரிக்கச் சொல்லி இரண்டு நாட்களாக என்னைத் தொண தொணக்கிறாள்.”

இங்கே நிறுத்திவிட்டு, மேல் துண்டை எடுத்து வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டார் அவர்.

அந்தச் சில விநாடிகளில் என்னுள்ளத்தில் பற்பல சிந்தனைகள் புரண்டு கொழித்தன.

அப்படியானால் .... அவள் ... பத்மா ....என்னைப் பார்த்த பார்வைகளெல்லாம் அர்த்தமற்றவைதானா? அவளைப் பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் ஆவலுடன் தானா என்னை அவ்வளவு கரிசனமாகப் பார்த்தாள்? அந்தப் பார்வையில் சொக்கிப் போய் மயங்கி என்னென்னவோ எண்ணமிட்டேனே! எல்லாம் வெறும் கானல் நீர்தானா...?—எரிக்கும் வேதனை என்னைக் குமைத்தது.



சிரமத்துடன், "உங்கள் சிநேகிதர் பையனின் பெயர் என்னவோ?" என்றேன்.

"அனந்தசயனம் என்பது தான் முழுப் பெயர். அங்கே அவனை எல்லாரும் 'ஆனந்த்' என்றுதான் அழைப்பார்களாம். ஆள் நல்ல வாட்டசாட்டமாக இருப்பான்" என்றார் அவர்.

என் சிந்தனை 'தட்டாமாலை' சுற்றிவிட்டு வந்த சிறுமியின் சிரத்தைப் போல 'விர்' என்று சுழன்றது. 'ஆனந்த்' என்னுடன்தான் வேலை பார்த்தான். நான் டிஸ்சார்ஜ் ஆவதற்கு ஒரு மாசத்துக்கு முன்புதான் ரகசிய இலாகா ஒன்றிற்கு அவனை மாற்றி விட்டார்கள். அதிலே அவன் வேலை செய்யும் வரை எங்கும் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்வது சற்றுச் சிரமமான காரியந்தான். மேலும் வேலையும் அதிகம். அவனை நினைத்துக் கொண்டா...இவள்...? அந்த நிமிஷத்திலே என்னுள்ளே ஏதோ ஒரு பேய்த்தனம் குடி கொண்டது. பைத்தியக்காரத்தனம் என்று கூடச் சொல்லலாம். ஆயினும் அதன் அசுர வேகத்திற்கு நான் அடிமையாகி விட்டேன்.

'ஆனந்த் இப்போதைக்கு இவர்களுக்குக் கடிதம் எழுத முடியாது. அவன் இருக்கும் இடமோ அபாயமான இடம்!—ஏதோ நினைத்தேன், என்னவோ பேசினேன். அசட்டுத் துணிச்சல் அபரிமிதமாகவே வேலை செய்தது.

"ஆனந்தா? அவன்தான்..." என்று மெதுவாக முனகினேன்.

"என்ன சொல்கிறீர்கள்......?"

"ஆனந்த் என்னுடன்தான் புனாவில் வேலை செய்தான். நான் டிஸ்சார்ஜ் ஆவதற்கு ஒரு மாதத்துக்கு முன்புதான் அவனைப் புனாவிலிருந்து வடக்கே மாற்றினார்கள். நான் புறப்படும்போது கிடைத்த தகவல்......" என்று இழுத்தேன்.

"புறப்படும்போதா...? என்ன தகவல் அப்படி?"—அந்த மனிதர் படபடத்தார்.

"காஷ்மீர் அருகே எங்கேயோ—ஆனந்த் ஆனந்த்......மடிந்து விட்டதாக......!" நான் வாக்கியத்தை முடிக்கவில்லை. கிழவர் திடுக்கிட்டார். அதிர்ச்சியில் அப்படியே ஸ்தம்பித்து விட்டார். அவர் கண்களில் நீர் நிலைவிட்டிருந்தது. அதைக் கண்டும் ஏனோ என் கல் நெஞ்சு கலங்கவில்லை.

எப்படியோ அவரிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டு விட்டேன். என் மனத்தை இன்னதென்று புரியாத பளு அழுத்தியது. நான் போன சமயம் சித்தப்பா எனக்கு எழுதியிருந்த கடிதத்தை என்னிடம் கொடுத்தாள் சித்தி. அவர் அப்பொழுது குற்றாலத்தில் தங்கியிருந்தார். என்னையும் அங்கே வரும்படி எழுதியிருந்தார்.

குற்றாலத்திற்குப் போய் விட்டு நான் திரும்புவதற்குள் பதினைந்து நாட்கள் கழிந்து விட்டன. வீட்டின் வாசலை அணுகும்போது வழக்கம் போல என் பார்வை எதிர் வீட்டை நாடியது. அப்பொழுது நான் கண்ட காட்சி என் கண்ணிற்குள் பளபளக்கும் கூர்மையான ஊசியைச் செலுத்தியது போலிருந்தது! எதிர்



இவ்வளவு விலை கொடுத்து நாயை வாங்கி வாசலில் கட்டி வைக்கிறீர்களே, யாராவது தூக்கிக்கொண்டு போய் விட்டால்......?

வீட்டு வாசற் கதவில் பெரிய 'யில்வர் லாக்' தொங்கிக் கொண்டிருந்தது.

அவர்கள் எங்கே......?

என்னை வேதனை குலுக்கித் திணற அடித்தது. குற்றாலத்தில் அருவி நீரில் குளிர்ந்து போயிருந்த என்னுள்ளம் திடீரென்று பற்றி எரிந்தது. பனிப் பிரதேசத்திலிருந்து திடீரென பாலைவனத்தில் கொண்டு நிறுத்தியது போன்றிருந்தது. இவ்வளவும் நான் உள்ளே சென்றதும் என் சித்தி சொன்ன விஷயத்தைக் கேட்டதும் ஏற்பட்ட உணர்ச்சிகள்! அவள் சொன்னது இதுதான் :—ஒரு வாரமாகப் பத்மா படுத்த படுக்கையாக ஜுரத்தில் விழுந்து கிடந்தாளாம். திடீரென ஒருநாள் இரவு...அவள்... அதை நான் எப்படிச் சொல்வது...? அந்த பனிதர் மகள் இறந்த மறுநாளே கதவைப் பூட்டிக் கொண்டு எங்கோ போய் விட்டாராம்!

என்னைப் பார்த்து என் உள்ளம் "கொலைகாரன்!" என்று இடித்துக் கூறியது.

★

ரயில் திருச்சியில் நின்றது. மெதுவாகத் தலையை வெளியே நீட்டினேன். அடுத்த பெட்டியில் உட்கார்ந்திருந்த ஆனந்த் என்னைப் பார்த்து விட்டு இறங்கி வந்து என்னெதிரே பிளாட்பாரத்தில் நின்றான். சோகத்தின் முத்திரை அவன் முகத்திலே நன்றாகப் பதிக்கப்பட்டிருந்தது.

நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டே "இப்பொழுது எங்கே இருக்கிறாய்?" என்று நான் அவனிடம் கேட்டு வைத்தேன்.

"திருச்சி ஜங்ஷன் பிளாட்பாரத்தில்!" என்றான் அவன். அதில் எந்தவிதமான உணர்ச்சி பாவமும் தொனிக்கவில்லை. ஆனால் என்மீது யாரோ சாட்டையைச் சொடுக்கியது போன்று வலி!

"எங்கே......போகிறாய்......?"

"ரயில் போய்ச் சேருமிடம் வரை..." அவன் எங்கேயோ பார்த்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

"என், ஒரு மாதிரி யிருக்கிறாய்? எப்பொழுது டிஸ்சார்ஜ் ஆயிற்று? இப்படி வந்து......" நான் ஏதோ உளறினேன்.

"என்னால் ஒன்றுமே பேச முடியவில்லை, ராஜு! என் வாழ்க்கை வறண்டு போய்விட்டது! ஏதோ உன்னைப் பார்த்ததும் இங்கே வந்தேன்...! என்னால் நிற்க முடியவில்லை." அவன் புறப்பட யத்தனித்தான்.

"என்...என்ன விஷயம், ஆனந்த்?"


"ஊருக்குச் சென்றேன். அங்கே என் மீது இடி விழுந்தது! வந்து விட்டேன். நான் சொல்வதெல்லாம் உனக்குப் புரியாது. புரியவும் வேண்டாம். புரிந்தால் உனக்கும் வேதனை தானே?"

சொல்லிக் கொண்டே போய் அவன் அடுத்த பெட்டிக்குள் புகுந்து விட்டான்.

அவன் சொல்வது எனக்கா புரியவில்லை? என் நிஜ உருவத்தை அவன்தான் புரிந்து கொள்ள வில்லை. புரிந்து கொண்டிருந்தால் என் எதிரே நின்று அவன் பேசித் தானிருப்பானா?

என் நெஞ்சின் அழுத்தம் வலுத்தது. என் உடலெல்லாம் நடுங்கியது!

ஒருத்தி வாழ்வை முடித்து இருவர் வாழ்வைக் குலைத்த எனக்கு "உய்வு உண்டா?" என்று என் நெஞ்சம் அலறியது.



"இந்த ஸ்டாண்டை இங்கு நட வேண்டும். இதைக்கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள். போய் கடப்பாறை எடுத்துக் கொண்டு வருகிறேன்."

"அதற்குள் பஸ் வந்து விட்டால் நான் போய் விடுவேன்."

"பஸ் வராது. அப்படியே வந்தாலும் அது இங்கே நிற்காது!"



ஆங்கிலக் கல்வி

சொந்தம் இல்லத்திலிருந்தே, பிறர் உதவியின்றி ஒரே வருடத்திற்குள் எட்டாம் படிவத்திற் கொப்பான ஆங்கில அறிவைப் பெறலாம். ஆங்கில எழுத்துகள் அறியாதவர்களும், இடையில் கல்வியை நிறுத்தியவர்களும் கற்கலாம். 4 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.


•

கேம்பிரிட்ஜ் காலேஜ்


(K) கைதமுக்கு, திருவனந்தபுரம்

N. B:—S. S. L. C. தேறி கல்லூரிப் படிப்பிற்கு சௌகரியமற்றிருப்பவர்க்கு, பிரைவேட்டாகவே Intermediate தேறலாம். 6 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

ஜூவல் பதித்த ரோ. கோ. கை கடிகாரங்கள் ரூ. 18-8-0



ஸ்விஸ் தயாரிப்பு. சரியான நேரத்தைக் காட்டும் கடிகாரங்கள். பத்து வருஷ உத்தரவாதம். ரோ. கோ. கேஸ். வட்டம் அல்லது நீண்ட சதுர வடிவம் 7 ஜூவல் ரூ. 18-8-0; உயர் ரகம் க்ரோம் கேஸ், மூ செகண்டு முள்ளுடன் ரூ. 20/-; லேடீஸ் ஸைஸ் 8 ஜூவல் ரோ. கோ. கேஸ். ரூ. 23/-; நீண்ட சதுரம் க்ரோம் கேஸ் 8 ஜூவல் ரூ. 28/-; 15 ஜூவல் தட்டை வடிவம் ரூ. 30/-; நீண்ட சதுர வடிவம் 9 ஜூவல் ரோ. கோ. கேஸ் ரூ. 26/-; உயர்ந்தது ரூ. 28/-; 15 ஜூவல் ரோ. கோ. ரூ. 35/-; பாக்கெட் கடிகாரம் ரூ. 14/-.



ஸிகரெட் லைட்டர்: நிக்கல் கேஸ், லைட்டர் மிகச் சிக்கனமானது. இதை வாங்கினால் ஆயுள் பூராவும் தீக்குச்சி நெருப்புக் குச்சி வாங்க வேண்டிய அவசியமே இல்லை. விலை ரூ. 2/-; உயர் ரகம் ரூ. 3/-; சிறந்தது ரூ. 4/- & 5/- ஒரு டஜன் கற்கள் அணா 14. யு. எஸ். ஏ. பவுண்டன் பேனாக்கள்: ரோல்டு கோல்டு நிப்பு, கிளிப்புடன் ரூ. 2/-; உயர்ந்தது ரூ. 2/8/- கோல்டு கேப்புடன் (பார்க்கர் 51 போன்றது) ரூ. 5/8/-; உயர்ந்தது ரூ. 6/8/- தபால் செலவு அணா 14. இரண்டுக்கு மேல் வாங்கினால் தபால் செலவு இல்லை

IMPERIAL WATCH CO. (K)

Post Box No. 12220 :: CALCUTTA - 5

ஏஞ்ஜியர்ஸ் குடலில் ஏற்படும்
கோளாறுகளைச் சீர்திருத்தி இதமளிக்கிறது

குடலைச் சீர்திருத்தி வயிற்றுக்கும் குடலுக்கும் இதமளிப்பதால் ஏஞ்ஜியர்ஸ் எமல்ஷன் (Angier's Emulsion) சிபாரிசு செய்யப் படுகிறது. ஏஞ்ஜியர்ஸ் (Angier's) குடலிலுள்ள மெல்லிய ஜவ்வுகளைச் சுத்தமாக்கி, வேக்காடு நமைப்பு, சீழ் கசிவு, புண் இவைகளைக் குணமாக்கி ஜீரண சக்திக்கு உதவி செய்து, சுகம், பலம் ஆகியவற்றை அளிக்கிறது.
ஏஞ்ஜியர்ஸ் எமல்ஷன் (Angier's Emulsion) மிருக எண்ணெய் இன்றியும் கை படாமலும் தயாரானது. எந்த ஜாதி, மதத்தினரும் உபயோகிக்கலாம்.

எல்லா கெமிஸ்டுகளிடமும்
வியாபாரிகளிடமும் கிடைக்கும்



ANGIER'S EMULSION



Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

REGD. No. M. 4392



துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும்
பிரகாசமாகவும் சலவை செய்கிறது !